Koviloor Digital Library

குவலயானந்தம் 1, 2

சந்திராலோகம்

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 15316
Date of purchases:
Call Number: 494. 8046
L9

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

VTN 01030

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No. 16084

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

ALAGAPPA COLLEGE KARAIKUDI-630

தமிழ்ப் பதிப்பகம்
1, கால்வாய்க்கரைச் சாலை, கஸ்தூரிபாய் நகர்,
அடையாறு, சென்னை-600 020.

Koviloor Digital Library

Bibliographical Data

Title of the book	—	Kuvalayānanṭam 1, 2 Cantirālōkam
Author	—	Dr. S.V. Subramanian Director and Chief professor, I.I.T.S. Adaiyaru Madras-600 020.
Language	—	Tamil
Edition	—	First
Date of publication	—	June 1979
Copyright holder	—	The Author
Paper used	—	The paper used for this book was supplied by the Government of India at concessional rates.
Size of the book	—	21×14 cm
Printing types used	—	10 Point
Number of pages	—	200
Number of Copies	—	1000
Printer	—	Novel Art Printers, Madras-14.
Binding	—	Paper back
Price	—	Eight Rupees
Publisher	—	Tamil Pathippakam, 1, Canal Bank Road Kasthuribai Nagar, Adaiyaru, Madras 600020.
Subject	—	A Critical study on Ani Ilakkanam

ALAGAPPA COLLEGE LIBRARY
KARAIKUDI-623003
38167

Koviloor Digital Library

என்னுரை

ஆண்டுதோறும் அனைத்து இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தரங்கின் போது ஒரு இலக்கணநூல் வெளியிட வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. அதனைச் செயற்படுத்தும் வகையில் 1977இல் மதுரைக் கருத்தரங்கில் வீர சோழியம்-மூலமும் திறனாய்வும் வெளியிடப்பட்டது. தொடர்ந்து 1978இல் கோவைக் கருத்தரங்கில் தொன்னூல் விளக்கம் வெளிப் போந்தது. 1979 இல் வெளிவராத, வெளிவந்து பலரும் அறியாத நூல்களான குவலயானந்தம், 1, 2, சந்திராலோகம் எனும் அணி இலக்கண நூல்களை வெளிக் கொணரும் வாய்ப்பினை ஐதரா பாத் கருத்தரங்கம் நல்கியது குறித்துப் பெருமகிழ்ச்சி அடை கிறேன்.

நூலின் முன்பகுதியில் தமிழ் அணியிலக்கணம் பற்றிய பொது அறிமுகமும், பதிப்பித்துள்ள முந்நூல்களின் அறிமுகமும் அமைந் துள்ளன. பின் பகுதியில் நூல்களின் மூலமும், தேவையான இடங் களில் சிறு விளக்கமும் அமைந்துள்ளன. பின் இணைப்பாக அணி யிலக்கணம் பற்றிய அட்டவணைகள் இரண்டும், நூற்பா முதற் குறிப்பகராதி, மேற்கோள் குறிப்பகராதி, சொல்லகராதி, ஆகியனவும் அமைந்துள்ளன.

பலருக்கும் கிடைக்காத தமிழ் இலக்கண நூல்களைக் குறைந்த விலையில் மக்கள் பதிப்பாகக் கிடைக்கச் செய்தல் வேண் டும் என்பதே அடிப்படை நோக்கம். இந்நோக்க நிறைவேற்றத் திற்குத் தங்கள் நூல்நிலைய ஏட்டுப் பிரதியை வழங்கி உறுதுணை புரிந்த டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத் தார்க்கு என்னுடைய மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டிய உதவியை நல்கிய எனது மாணாக்கி செல்வி. ச. சிவகாமிக்கும், அச்சுப் பிரதிகளை ஒப்பு நோக்கி, அகராதிகளையும் தயாரித்துத் தந்த செல்வி. இல. சாரதாவுக்கும் எனது ஆசியையும், குறுகிய கால எல்லையில் சிறப்பாக அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட்' அச்சக உரிமையாளர் திரு. நாரா. நாச்சியப் பன் அவர்கட்கு என்னுடைய அன்பு கலந்த நன்றியையும் தெரிவித் துக் கொள்கிறேன்.

ஐதராபாத்
23–6—79

அன்பன்,
ச. வே. சுப்பிரமணியன்.

Koviloor Digital Library

உள்ளே....

	பக்கம்
தமிழில் அணியிலக்கணம்	1
முந்நூல்களின் அறிமுகம்	36
குவலயானந்தம் — 1	65
சந்திராலோகம்	101
குவலயாநந்தம் — 2	123
நூற்பா முதற் குறிப்பு அகராதி	151
எடுத்துக்காட்டுப் பாடல்கள் முதற் குறிப்பு அகராதி	159
சிறப்புச் சொல்லகராதி	160
தமிழ்—வடமொழி அணிகள்	166
துணை நூல்கள்	170
அணி இலக்கணங்கள் கூறும் அணிகள்	172
சித்திரகவிகள்	192

Koviloor Digital Library

ALAGAPPA COLLEGE LIBRARY
KARAIKUDI-623003
Alagappa university
Central Library
15316

தமிழில் அணி இலக்கணம்

பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போல் பல
சொல்லால் பொருட்கு இடன் ஆக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள் (268)

எனும் நன்னூலார் வாக்கால் செய்யுளில் அணியின் இன்றியமையாமை புலப்படும். மிக எளிய சொற்களால் பல அரிய பொருள்களை உணர்த்தி இனிய நயங்களைத் தருகிறான் புலவன். சொற்கள் அவ்வாற்றல்களைப் பெறுவதற்கும் புலவன் அதனை உணர்த்துவதற்கும் பெரிதும் பயன்படுபவற்றுள் முதலிடம் பெறுவது அணி.

கவிஞன் இத்தகைச் சிறப்புடை அணியினைப் புதுப்புது வடிவங்களில் கையாண்டு தனது எண்ணங்களில் அகலத்தையும் ஆழத்தையும் ஏற்படுத்தித் தன் புலமையைப் பறைசாற்றுகிறான். கற்பாரைக் கவர்ந்து கொள்கிறான். 'உயர் கவிதைகளிலே உவமை உருவகங்கள் வெறும் உத்திகள் அல்ல அவையே அடிப்படைகளும் ஆகிவிடுகின்றன.'[1] என்பது சாலப் பொருந்தும்.

தமிழ் இலக்கியப் பரப்பில் புகுந்தால் இளங்கோ, கம்பன் மட்டுமின்றி, சங்கம் தொட்டுஇன்றுவரைபலர்இச்சிறப்புடையோராய்த் தென்படுவர், நீதி இலக்கியமான திருக்குறளிலும் கூட இவ்வணிகள் தித்திக்கும் தேனாய் மிகச் சுவைபட அமைந்துள்ளன.

இலக்கியக் கலைத்துறையில் படைப்பாளர் கையாளும் கலை நுணுக்கத் திறன்களுள் மிகப் பழமையானதும் கவிஞரின் வெளியீட்டு முறைக்கு ஒளியும் தெளிவும் சேர்ப்பதும் பயில்வாரின் நெஞ்சங்களை எளிதில் ஈர்ப்பதும் கவிஞன் கண்டகாட்சியை மற்றவர் அவனது கற்பனை எல்லைக்குள் மிக நெருங்கிச்

1. கவிதை நயம். டாக்டர். க.கைலாசபதி, இ.முருகையன். பக் 22

Koviloor Digital Library

சென்று உள்ளபடி கண்டு கொள்ளத் துணைக் கலைக்கருவியாய் இருப்பதும் உவமை அணி ஆகும்[2] என்பர் டாக்டர் மு. வரதராசனார். இக்கூற்று உவமைக்கு மற்றுமன்று உருவகம், தன்மை தற்குறிப்பேற்றம் நுட்பம், சுவை போன்ற பல அணிகளுக்கும் சாலப் பொருந்தும்.

எழுத்துக்கு அணிசொல்லே இன்சொற்கு அணி நான்
வழுத்தும் பொருளின் வளமே அழுத்தும்
பொருளுக்கு அணி யாப்பே போதம் உயர் யாப்பிற்கு
அருளும் அணியே அணி (48)

எனும் செகவீர பாண்டியனாரின் கருத்தும் இங்குச் சுட்டத் தக்கது.[3]

அழகு என்று பொருள்படும் அணி இயற்கையாக அமைந்த அழகையே குறிக்கும். காலையில் காணும் கதிரவன் கவினும் மாலையில் மதியை மயக்கும் மதியின் அழகும் வானத்தில் இயற்கையாக அமைந்து இன்புறுத்துவது போன்று கவிதையில் இயல்பாகவே தோன்றி, கவிதைக்கு அழகையும் கற்பாருக்குக் களிப்பையும் நல்கும் அணியே சிறப்புடைத்து. மங்கையரிடம் இயல்பாய் அமைந்துள்ள அழகு போன்றும் மாந்தரிடம் உடன் உறையும் குணம் போன்றும் அமைவதே அணி. இயற்கைக்கு உயிரே அழகுதான். கவிதைக்கு உயிர், பொருளாக அமைந்தாலும் கூட உயிர் உணர்வை வெளிக்காட்ட உதவுவது அணி.

விளக்கத்திற்காக 'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைக் கிளவிக்கு' (சிலம்பு. மனை. 58-59) என்று கண்ணகியின் குரல் இனிமையை இளங்கோ உணர்த்துவதை எடுத்துக் கொள்ளலாம். இங்கு, 'குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' (குறள்.66) எனும் வள்ளுவர் உணர்வுடன் அமிழ்தை இணைத்து, அதனைக் குழைத்து அவள் சொல்லுக்கு உவமையாக்குகின்றார். குழலையும் யாழையும் ஓசையால் உணர முடியும். அமிழ்தினைக் கண்டதில்லை. இனிமையின் முதிர்ச்சி என்ற பொருளில் அது பயன்படுத்தப்படுகிறது. இவற்றைக் குழைப்பதுஎன்பதனை மனதால் நினைக்கலாம். இவற்றைக் குழைத்தது போன்ற மழலைச்சொல் எனும் இவ்வுவமையை மட்டும் இங்கு இக்கவிதையிலிருந்து பிரிக்க முடியாது. இவ்வுவமை கவிதையோடு இரண்டறக் கலந்து இணைந்து நிற்கும்போது நாமும் அதனுள் கலந்து விடுகிறோம். புலவனும் தன் படைப்பின் பயனைப் பெற்று விடுகின்றான்.

2. இலக்கியத்திறன். டாக்டர். மு.வ.,பக்.229.
3. அணியறுபது. ஜெகவீரபாண்டியனார். பக் 118.

இதன் பெருமை உணர்ந்தே எழுத்து, சொல், பொருள் என்றிருந்த தமிழிலக்கணம் யாப்பு, அணி இணைய ஐந்தாக விரிந்தது. பொருளுக்கும் யாப்பிற்கும் தனித்தனி இலக்கண நூல் எழுந்தது போன்று அணிக்கும் தோன்றியது.

அணி-பொருள்

ஒப்பனை, அழகு, ஆபரணம், முகம், பெருமை, படை வகுப்பு, படை உறுப்பு, இனிமை, அன்பு, வரிசை, அணி இலக்கணம், செய்யுள் அணி, கூட்டம், கம்மாளர் கருவி, ஓர் உவம உருபு, அண்மை, வேடம், கோலம், ஒழுங்கு, அணியென் ஏவல், தெரிநிலை வினைப் பகுதி, வினைத்தொகை, எத்தனம், அடுக்கு, எல்லை, கவிப்பது, கட்டுவது, செறிப்பது, பூண்பது முதலியவற்றின் பொதுப்பெயர்; சம்பிரம் தளவாடம், தேரின் அச்சாணி, நன்மை, பற்று, பூமாலை' கம்மியர், நுணாச் செடி, என 34 பொருள்களை அகராதிகள்[4] தருகின்றன.

ஒப்பனை, அழகு, அணிகலன், வேடம், கோலம் அண்மை, பெருமை, இனிமை எனும் பொருள்கள், இலக்கியத்தின் அணியாக நாம் கருதுவதுடன் தொடர்புடையதாக அமைகின்றன. கவிஞன் தான் கூற வரும் கருத்தினை அணிகல களால் (அணி) வேடமிட்டுக்கோலம் செய்து ஒப்பனை அழ டைத்தாய், இனிமை தரும் பெருமை உடைத்தாய், பொருளை தெளிவுபடுத்தும் அண்மைத்தாய் அமைக்கின்றான்.

தோற்றம்

தமிழின் தொன்மை நூலான தொல்காப்பியத்தில் உவமை நன்கு விரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அஃது ஓர் அணியாகக் கொள்ளப்படவில்லை. பொருள் புலப்படுத்தும் கருவிகளில் ஒன்றாகவே தொல் ப்பியர் கருதியதாகத் தெரிகிறது: உவமமும் பொருளும் ஒத்த வண்டும்; தலைவன், தலைவி, தோழி போன்றோர் உவமை ப் பயன்படுத்தும் இடங்கள், அவற்றின் தன்மைகள் என்பன ான்ற தொல்காப்பியர் கூற்றுகள் இக்கருத்துக்கு அரண் செ கின்றன.

தொல்காப்பியத்திற்கு உரைசெய்த பேராசிரியரும் 'உவமத் தோ ம்' எனும் தொடருக்கு 'உவமத்தால் பொருள் தோன்றும் ோற்றம் என்று பொருள் கூறி, உவமம் பொருளைப் புலப்படுத் ்க்கருவிகளில் ஒன்றே என்பதனை 'உவமத்தை அணி என்றல் கூடாது, சாத்தனிடமிருந்து அவன் அணியும் அணிகளைப் பிரித்துக் காண்பதுபோலப் பாடல்களில் இருந்து உவமத்தைப் பிரித்துக் காண்டல் இயலாது காண்' என்பதன் மூலம் விளக்குகிறார்.

4, தமிழ்லெக்சிகன், கழகத்தமிழ் அகராதி.

Koviloor Digital Library

ஆயின் இளம்பூரணர் உவமை இயலின் முன்னுரையில் 'இதனால் பயன் என்னை மதிப்பதோ எனின், புலன் அல்லாதன புலன் ஆதலும் அலங்காரமாகிக்கேட்டார்க்கு இன்பம்பயத்தலும், அஃதாவது மேற்சொல்லப்பட்ட எழுதிணையினும் யாதனுள் அடங்கும் எனின் அவை எல்லாவற்றிற்கும் பொதுவாகிப் பெரும் பான்மையும் அகப்பொருள் பற்றி வரும் என்றுகூறுகிறார்.

இதனை நோக்குங்கால், இலக்கியத்தின் பொருள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிய முன்னோர் அதன் புலப்பாட்டு முறை, வெளியீட்டு முறை ஆகியவற்றையும் எண்ணத் தொடங்கினர். அதன் விளைவாக உவமை போன்றவற்றை அணியாகக் கொள்ளத் தலைப்பட்டனர் எனலாம். இந்நிலை இளம்பூரணர் காலத்ததாக இருக்கலாம். முழுமையாக அறுதியிடப்படாத தொன்றில் கருத்து வேறுபாடு இருத்தல் இயல்பு. இதனையே இளம்பூரணர், பேராசிரியரிடம் காண்கிறோம்.

புலன் அல்லாதன புலன் ஆதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் எனும் இளம்பூரணர் கருத்தும், கவிதையுடன் இரண்டறக் கலந்து அமைய வேண்டும் எனும் பேராசிரியரின் உவமம் பற்றிய எண்ணமும் இணைந்ததே அணி என்ற சிறப்பிற்குரியதாக நாம் கொள்ளலாம். இங்ஙனம் அணி என்பதன் வித்தும் தொல்காப்பியத்தில் விதைக்கப்பட்டிருக்கின்றது.

இதுதனியொரு இலக்கணமாக வளர்ந்ததை டாக்டர் மு. வ. தெளிவாக உணர்த்தி உள்ளார். கலைஞர் தம் உணர்ச்சியையும் கற்பனையையும் உணர்த்துதல்போல் தம்கலைத்திறனை வெளிப் படையாகக் காட்டுதல் இல்லை. கலைத்திறனை மறைத்துக் கலைப்பயனை மட்டும் நல்குவர் அவர். ஆயின், ஆராய்ச்சி யாளரோ மறைந்துள்ள கலைத்திறனை ஆய்ந்து காணுதலையே கடமையாகக் கொள்பவர். அவ்வாறுஆராயும்போது காணப்பட்ட சிலவகைத் திறங்களுக்குப் பெயரும் இலக்கணமும் வகுக்க முற்பட்டனர். சிலவகைத் திறங்கள் அவர்களின் ஆராய்ச்சிக்கு எட்டாமல் நின்ற போதிலும் அவற்றிற்கும் பெயரும் இலக்கணமும் வகுக்க முயன்றனர். அந்த முயற்சியின் பயனாக ஏற்பட்டதே அணி இலக்கணம் எனப்படுவது.[5]

உவமையே பல்வகை அணிகளின் தோற்றத்திற்கும் காரணம் ஆகின்றது. வடமொழியாளரும் இக்கூற்றுக்கு உடன்படுகின்றனர். அப்பைய தீட்சதர் என்பார் சித்ர மீமாம்சை எனும் கிரந்தத்தில் இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பு:

5. இலக்கியத்திறன்,. டாக்டர். மு.வ: பக்.231

Koviloor Digital Library

உவமை எனும் தவலரும் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே.[6]

சான்றாகத் தாமரை போன்ற முகம் என்பது உவமை. முகத் தாமரை எனுங்கால் உருவகம். தாமரை போன்றது முகம் எனில் புகழ்பொருள். இதுவே முகம் போன்றது தாமரை என்றால் எதிர்நிலை ஆகிவிடுகிறது. இது முகமோ, தாமரையோ என்று கூறினால் ஐயம். நின்முகத்தைத் தாமரை என வண்டு மொய்க் கின்றது என்றால் மயக்கமாகிறது. இத்தாமரையைக் கண்ட வுடன் எனக்குத் தலைவியின் முகம் நினைவு வருகிறது எனில் நினைப்பு. இது முகம் அன்று தாமரை எனக் காட்டினால் ஒழிப் பாய் விடும். நின்முகம் கண்டு தாமரை குவிந்தது எனில் தற்குறிப் பேற்றம். இவ்வாறு இன்னும் பல காட்டலாம்.

தொல்காப்பியர் உவமையை உவமையியலிலும் சுவையினை மெய்ப்பாடாக மெய்ப்பாட்டியலில் விரிவாகக் கூறி இருப்பினும் ஒழிந்த சில அணிகளையும் தொல்காப்பியத்துள் காணலாம். ஒரு சில உத்திவகையிலும் ஒரு சில பொருள்கோள் வகையிலும் வேறு சில வனப்பு வகையிலும் மற்றும் சில வண்ண வகையிலும், பின்னும் சில குறிப்பு வகையிலும் பிறவும் பல சொன் முடிபிலக் கணங்களிலும் காணக்கிடக்கின்றன என்பர்.[7]

நச்சினார்க்கினியர் உவமம் ஒன்றனையே அணியாகக் கருதி னர். வேற்றுமை, தற்குறிப்பேற்றம், நிரல்நிறை, சமம் முதலிய வற்றை உவமத்தின் விகற்பமாகவே கொண்டார். தொல்காப்பியர் கூறியுள்ள,

...ற்றது உணரும்
உவமப் பொருளின் திறத்திய லான
தெளிமருங்கு உள உணருங் காலை (1241)
உவமப் பொரு[ள்] வழக்கொடு வருமே
மருவிய மர[பின்] (1242

...ள் உருவகத்தினை உணர்த்துகின்றன. உள்ளுறை) எனும் நூற்[பா]...றைச்சி என்பனவற்றைத் தனித்தனி அணிகளாக உவமம், ...ரம் காட்டுகிறது. அஃறிணைப் பொருளைக் கேட்குந மாறு[ம்], கிளக்குந போலவும் அமைத்துப் பாடுதலை அகத் பே[ச்சு]...யில் தொல்காப்பியர் (1457) காட்டுவதைத் தொன்னூல் ...க்கம் விடையில் வினாவாகத் (362) தனி அணி ஆக்கிச் சிறப் ...க்கின்றது. 'தடுமாறு வரலும் கடிவரையின்றே' (1256)என்பது

6. மாறன் அலங்காரம்-மூலமும் உரையும், முகவுரை, நாராயணையங்கார்
7. ,, ,,

Koviloor Digital Library

மயக்கமாகவும், ஐயமாகவும் மலர்ந்துள்ளது. அடுக்கிய தோற்றம், விடுத்தல், பண்பே, (1257) என்பது பலபடப் புனைவாகப் பரிமளிக்கிறது. நிரனிறையும் (1258) தனி அணியாக அமைகிறது. இவ்வாறு பல அணிகளுக்குத் தோற்றுவாயைத் தொல்காப்பியத்துள் காணலாம்.

புலவன் தன் புலமைத் திறத்தைத் தன் படைப்பில் காட்ட ஆய்வாளர்களான இலக்கண நூலாசிரியர்கள் அவன் புலமையைத் தம் நுண்மாண் நுழை புலத்தால் வெளியீட்டின் சிறிய மாற்றங்களையும் கணித்து, அவற்றிற்கும் தனிப்பெயர் கொடுத்து அணிகளைப் பல்கச் செய்துள்ளனர். தொல்காப்பியர் நட்ட ஆலவித்து இன்று பல விழுதுகளுடன் ஓங்கி உயர்ந்துள்ளமையை அணி இலக்கணம் நன்கு உணர்த்துகிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் அணிகள் பெற்று இருந்தசிறப்பும், தொல்காப்பியமும், இலக்கண நூலாசிரியர்களின் வடமொழிப் புலமையும் தமிழில் அணிகள் பெருக்கம் கொள்ள காரணமாய் அமைந்தன.

அணி இலக்கண நூல்கள்

மொழியின் அழகை விளக்கும் அணி இலக்கணத்தைத் தொல்காப்பியர் சுட்ட, அதனை ஒரு அதிகாரமாகத் தொகுத்தார் வீரசோழியப் புத்தமித்திரனார். அதனை ஓர் தனிநூலாக விரித்தார் தண்டி ஆசிரியர். மாறன் அலங்காரமும் முத்து வீரியமும் மேலும் விரிவாக்கியுள்ளன. இவற்றால் திருப்தி அடையாது மேலும் பல அணிகளைத் தந்தன இரண்டு குவலயானந்தங்களும், சந்திராலோகமும். முன்நூல்கள் வடமொழி அணியிலக்கணத்தைத் தழுவ பின் மூன்றும் அப்படியே வடமொழி அணி இலக்கணத்தை மொழிபெயர்த்துள்ளன.

இந்நூல்கள் தவிர இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்களும் அணிபற்றி பேசியுள்ளன. இலக்கணவிளக்கம் முற்றிலும் தண்டியைப் பின்பற்றியுள்ளது. சுவாமிநாதத்தில் குறிப்பிடத்தக்க சிறப்புகள் இல்லை. தொன்னூல் விளக்கம் அமைவணி, விடையில் வினா அணி, வினவில் விடை அணி போன்றவற்றின் மூலம் தன் தனித்துவத்தைக் காட்டத் தவறவில்லை.

முற்றிலுமாகப் பிறநூல்களினின்றும் இவ்வியலில் வேறுபடுவது அறுவகை இலக்கணம்.

அணிநிலை அளப்பரிது ஆயினும் உவமை
உடைமை கற்பனை நிகழ்ச்சி ஆக்கம் என்று
ஐவகை வாய்பாடு அறைகுதும் அன்றே (அணி-2)

Koviloor Digital Library

என்று கூறி ஒவ்வொன்றின் இயல்பினையும் விரிக்கின்றார். உவமையின் இயல்பாக, இது இதற்கு உவமை என்று தொகுத்துச் சொல்கிறார். கற்பனை, நிகழ்ச்சி, உடைமை, ஆக்கம் ஆகிய வற்றின் இயல்பாகக் கூறுவன படைப்பாளருக்குப் பயன் பாடுடையன.

இவை தவிர அணியிலக்கணம் என்றொருநூல் இருந்தமை யைப் பேராசிரியர் தம் பொருளதிகார உரையில் 'இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள் ளும், செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட் கண்ணே அணியாம் என இக் காலத்து ஆசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒரு தலை யாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா' என்று கூறுவதினின்றும் அறியலாம். நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களும் இந்நூலைத் தம் உ[illegible]ரை களில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆரண[illegible]சைல பஞ்சகம் என்னும் நூலும் அணிப[illegible]றிப் பேசு வதாக அறிய முடிகிறது. இது பற்றிய பிற செய்திக[illegible] தெரிந்தில.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விசாக[illegible]ப்பெருமாளையர் என்பார் வடமொழிச் சந்திரா லோகத்தினை[illegible] பின்பற்றித் தமிழ் உரைநடையில் தமிழ்மொழிக்கு ஏற்ப 10[illegible] அணிகளைக் காட்டி விளக்கி உள்ளார். இந்நூலே தமிழில் [illegible]திராலோகம் எழக்கருவி ஆயிற்று.

அணி விளக்கம்

அணி என்பதன் விளக்[illegible]தை மாறன் அலங்காரம் முதன் முதலில் தருகின்றது.

[illegible]னும் புனையுறு செய்யுட்கு
பொருளினும் [illegible]தலின் அணி[illegible]னும் பெயர்த்தே
அணியுறப் பு[illegible] (86)

[illegible]கிறது. அழகுறச் செய்வதால் அணி என்பது என்று அந்நூ[illegible]. பின்வந்த இலக்கண விளக்கம்:

அந்நூலார்[illegible]ப் படுவது துணிபு உறக் கிளப்பின்
அ[illegible] அலங்காரம் என இரு திறத்தால்
[illegible]ருள் புலப்படுப்பது என்மனார் புலவர் (620)

[illegible] கூறுகிறது. இங்குக் குணமும் அலங்காரமும் என்ற [illegible]ரண்டில் குணம் என்பது செய்யுளின் இயல்பையும் அலங்காரம் நாம் குறிப்பிடும் அணியையும் சுட்டுவது ஆகும். பொருள் புலப் பாட்டிற்கு இவர் முக்கியத்துவம் அளித்துள்ளார். இரு நூல்

Koviloor Digital Library

களின் கருத்தும் இணையும்பொழுதுதான் உண்மையில் அணி சிறக்கின்றது. பிற, அணி என்றால் என்ன என்பது பற்றி நவில வில்லை.

அணி வகைகள்

பொருள் அணி, சொல்லணி என அணி இருவகைப்படும். இவ்விரண்டின் வேறுபாட்டைத் தொன்னூல் விளக்கம் அழகாகக் காட்டுகிறது. சொல்மாற அணி கெடுவது சொல்லணி எனவும் அவ்வாறு மாறினாலும் நிலைக்கும் அணி பொருள் அணி எனவும் தெளிவாக்கப் படுவது குறிப்பிடற்குரியதாகும். இருவகை அணிகளையும் வேறுபடுத்தி விளக்கப்படுவது இந்நூலுக்கே உரியது எனலாம்.

அணிஎனச் சொல் பொருளாம் இரண்டு அவற்றுள்
வேற்றுரை வரக்கெடும் அணிசொல் அணிஉரை
மாற்றினும் தோன்றிய அணி பொருள் அணியே (302)

என்... அந்நூற்பா.

பொ...ளையே அடிப்படையாகக்கொண்டு பெயரிடப்படும் அணிகள் ...ருள் அணிகளாம். அவையே மேம்பட்டன என்பர். சொற்களி... அமைப்புக்கே சிறப்பிடம் கொடுத்துப் பொருள் அமைப்பைப் ...றிப் பெரிதும் கவலைப்படாது அமைவன சொல்லணிகள். ...வை பொருளணி போன்று சிறப்புடையன அல்ல. பொருள் ...தினை விட ஓசைநயத்திற்கும் சொல்நயத்திற்கும் சிறப்பிடம் த...ன.

உவமை, உருவகம், ...ர்வுநவிற்சி, தற்குறிப்பு, வேற்றுமை என்பன போன்று பொரு...ழகு பற்றி வருவன பொருளணி எனப்படும், மடக்கு, சித்திரக...ன்பன சொல்லழகு பற்றி வரும் சொல்லணிகளாம்.

சில அணிகள் பற்றி இலக்கண ...ரிடையே எவ்வகை அணி என்பதில் கருத்து வேறுபாடு உ... தொன்னூல்விளக்கம் சித்திரகவியைப் பொருளணியாகக் ... கூறுகிறது. பிற இலக்கணங்கள் தரும் ...ண்டு இலக்கணம் வேறுபட்டும் அமைக்கின்றது (354). பொருள்...க்கத்தினின்றும் அணியாகத் தனித்து இயம்புகிறது தொன்...னைச் சொல் அவற்றுள் ஒரு பகுதியான பூட்டுவில் பொருள்கே... விளக்கம். தனி அணியாகப் பொருள் அணியில் மாறனலங்காரம் ... (309) ... குறிப்பிடுகிறது.

வீரசோழியம், தண்டியலங்காரம், மாறன் அ... மாணிக்கவாசகர் குவலயானந்தம் என்பன பொருளணிக... முன்னும் சொல்லணிகளைப் பின்னும் குறிப்பிடுகின்றன

Koviloor Digital Library

ALAGAPPA ... CENTRAL LIBRARY KARAIKUDI
Acc. No. 15316
Date of purchases:
Call Number: 494.8046 L9

தொன்னூல் விளக்கமும் முத்துவீரியமும் சொல்லணியை முன்னும் பொருளணியைப் பின்னும் குறிப்பிடுகின்றன. சந்திராலோகம், குவலயானந்தம் என்பன பொருளணிகளையே புகல்வன.

பொருளணி

வீரசோழியம், தண்டி அலங்காரம், இலக்கண விளக்கம் முதலியன 35 அணிகளையும், மாறனலங்காரம் 64 அணிகளையும் தொன்னூல் விளக்கம் 30 அணிகளையும், முத்து வீரியம் 58 அணிகளையும், சுவாமிநாதம் 31 அணிகளையும், மாணிக்கவாசகர் குவலயானந்தம் 87 அணிகளையும், சந்திராலோகம் 100 அணிகளையும், குவலயாநந்தம் 120 அணிகளையும் தருகின்றன. இவை அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

எல்லா நூல்களும் இணைந்து 202 அணிகளைத் தருகின்றன. சந்திராலோகம், குவலயாநந்தம் ஆகியன தரும் அணிகளுள் பலவற்றைப் பிறநூல்கள் சில அணிகளின் விரிவுகளில் அடக்கியுள்ளன. மாணிக்கவாசகரின் குவலயானந்தத்தை இணைக்காது, பிற இலக்கண நூல்கள் தரும் அணிகளின் மொத்த எண்ணிக்கை நோக்க, தக்காங்கு அமைந்த பொருளணிகள் 118 என்பர்.[8]

மிக நுண்ணிய வேறுபாடுகள் கூடத் தனியொரு அணியாக வகை செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். ஒரே வகையான அணி பலவகைப் பெயர்களாலும், ஒரே பெயரில் அமையும் அணிவிளக்க வேறுபாடுகளுடனும் அமையக் காணலாம். ஒன்றில் ஒரே அணியாக விளங்குவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலையிலும் பிறிதொன்றில் அமைகிறது.

தற்குறிப்பேற்றம், வீரசோழியத்தில் நோக்கம் என்றும், தொன்னூல் விளக்கத்தில் [illegible]காஞ்சிதம் என்றும் வழங்கப் படுகிறது. தன் மேம்பா[illegible] வீரசோழியத்தில் ஊக்கம் என்றும் மாறனலங்காரத்தில் [illegible]மொழி என்றும் உணர்த்தப்படுகின்றது. ஒட்டணியும் [illegible]றை உவமமும் ஒன்றே என்பதில் வீரசோழியமும் [illegible] ஒன்றுபடுகின்றன. மாறனலங்காரத்தில் இவை தனி[illegible]கப் பேசப்பட்டுள்ளன.

பாவிகத்[illegible]யும் ஒரு அணியாகத் தண்டி, வீரசோழியம், மாறனலங்காரம், இலக்கண விளக்கம் ஆகியன உரைத்துள்ளன. பிற [illegible]படுத்துள்ளன. எனவே எவை எவற்றை அணியாகக் கொள்

8. இலக்கண-விளக்கம் பொருளதிகாரம் - அணியியல் சரஸ்வதிமகால் பதிப்பு. பக். 76

Koviloor Digital Library

வது என்பதிலும் இலக்கண நூலாரிடையே கருத்து வேறுபாடு உள்ளமை புலப்படும்.

இவை தவிர அணியிலக்கண நூல்களிடையே மற்றும் சில விளக்க வேறுபாடுகளும், உட்பிரிவுகளிடையே பல வேறுபாடு களும் உள. விரிவஞ்சி அவை இங்கே விடப்பட்டுள்ளன.

சொல்லணி

மடக்கும், மடக்குத்தழுவி அமையும் சித்திர கவியும் சொல்லணிகளாகக் கருதப்படுகின்றன. பொருளணிகள் போன்றே இவையும் இலக்கண நூலாரின் புலமைக்கு ஏற்பப் பலவகை மாற்றங்களுடன் அமைந்துள்ளன.

தொன்னூல் விளக்கம் பிறவற்றினின்றும் மாறுபட்டு மறி நிலை, பொருள்கோள், சொல்மிகல், சொல்எஞ்சல், சொல்ஒப்பு என ஐந்துவகைகளாகச் சொல்லணியைப் பிரித்துள்ளது. அவற்றின் விரிவுகளுடன் முப்பது அணிகளை வரையறுத்து விளக்குகிறது.

சொல்லணி மறிநிலை ஐந்தும் கோள் எட்டும்
சொல்மிக்கணி மூன்றும் சொல்லெஞ்சணி பத்தும்
சொல்லொப்பணி நான்கும் தொகை ஆறைந்தே (325)

தில்

வாழ்வநான்னூல் விளக்கத்தை ஒட்டி முத்து வீரியமும் மறிநிலை காது தம்ப்பிடுகின்றது. சித்திரகவிகள் பற்றிய விளக்கத்தினை தோற்றத்தியில் காணலாம்.

தலைவியின் து...ம், சித்திரகவி மாலை பற்றிப் பேசும்பொழுது வாழ வேண்டும் எ... குறிப்பிடுகிறது. அதன் விருத்தியாசிரியர் டுள்ள காதல் மிகுந்ந...ளக் குறிப்பிடுகிறார். இந்நூற்பாவில் தங்களை மதிக்காவிட்டாழியு... வரும் அலங்காரமும்' என்று கூறி வதையும் அவன் பரத்தை... உவமை, வழிமொழி (பின் வரு சுட்டி அதன் மூலம் அவனைப... வெளிப்படைநிலை, நோக்கும்,

தலைவன் இல்லாவிட்டாலும்... மிகைமொழியும், வார்த்தை னுடனேவாழ்கிறாள்என்றுகூறுவதை...யும் (வேற்றுப்பொருள் இப்பாடலில், அதனை உவமை இன்றி ...யும், மறுத்துமொழி அலங்காரம் இருக்காது. தச்சன் தேரினையும் ...வற்சியும், உயர் சிறார்களையும் விட்டு வேறு ஒன்றினை உவமை... கியல் மொழி அலங்காரம் இருந்திருக்கும். ஆயின் தலைவியி... ல் (கலவை) அவளது மன உணர்வோ முழுமையாக வெளிப்பட்டு... பின்வந்த யாது. பொருள் விளக்கமும் இத்துணைச் சிறப்புப் பெற்றிரு... இனி

ஏற்றமிக்க, மன உணர்வினை வெளிப்படுத்தும் உவமைகள்
அளவில் கவிதையின் உயிர்ப் பொருளாய் அமைகிற

Koviloor Digital Library

உவமை

அணி இலக்கணத்தின் ஆணிவேராக அமைந்துள்ள உவமை அங்கிங் கெனாதபடி எங்கும் சிறப்புற்றிருக்கிறது. பண்பு, தொழில், பயன் இவற்றில் ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு ஒரு பொருளை இயையவைத்து ஒப்புமை புலப்படப் பாடுதல் உவமையாகும். சீவக சிந்தாமணியில்,

சொல் அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே (53)

என ஏமாங்கத நாட்டின் வளத்தை உணர்த்த விரும்பும் திருத்தக்க தேவர் அங்கு விளையும் நெற்பயிரைச் சான்றாகக் காட்டுகிறார்.

சொல்வதற்கு அருமையான சிறப்புடைய சூல்கொண்ட பசும் பாம்பின் தோற்றம்போல் கருக்கொண்டு, சிறிது சிறிதாக வளர்ந்து நெற்கதிர்களை ஈன்றது நெல். அக்காட்சி நல்ல குடியில் பிறக்காதவர்கள் செல்வத்தால் தருக்கி நிற்றல்போல் தன் தாள்களால் தலை நிறுவி, சிறந்த நூல்களைக் கற்று அதன்படி நடக்கும் மாந்தர்போல் மிகவும் வளைந்து, விளைந்த க[illegible] களைத் தந்துள்ளமை போன்று அமைகிறது.

காப்பியங்களில் நாட்டு வருணனை, நகரவருண[illegible]
தனித்தனியான அமைப்பாகத் தோற்றுவித்து [illegible]
காப்பியத்தின் அங்கமாகவும் ஆக்கித்தந்தவர் தேவ[illegible]
யில் காப்பியத் தலைவனின் நாட்டுவளம் கூறல்[illegible]
இப்பாடலில் புலவர் வெறுமனே நெற்பயி[illegible]
உவமை கூறியிருந்தால் சிறப்பு இரு[illegible] (1703)
பிற்குக் காரணமே ஆசிரியர் உ[illegible]ந்நிலை என்றால்,
செல்வத்தின் தருக்கையும் கல்[illegible]பாடு[illegible] என நம்மைத் தன்
இருப்பதுதான். நல்ல நூல் [illegible]ளதம்ப[illegible], அதற்கு விடையும்
நடக்கும் போதுதான் [illegible]யுந்தருகிறான்.
திருத்தமாக 'தேர்[illegible]
பிட்டிருக்கும் திறம் [illegible]ன் வாய்புல்
உவமையின் [illegible]ளும் பார்ப்பினுக்கு
காட்டிப் [illegible]லஷ்ற்று ஈன்ற கன்றையும்
[illegible]வ நைந்து உருகிச் சோர்ந்ததுவே (1813)

கவின[illegible] சங்கப் [illegible]ணவில்லை. குதிரைகள் புல்லைத்தின்ன வில்லை. கிரன[illegible] பசுக்களும் தம் பார்ப்பினுக்கும் கன்றினுக்கும்

வள்ளித்தமிழ் ...
அழகப்பா பல்கலைக்கழகம்
Acession No. 16084
Koviloor Digital Library

...த்து இன்புறூஉம் இளையோர் போல
உற்றுஇன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன்புற்றனெம் செறிந்தன வளையே (61)

என அழகாகப் பாடியுள்ளார்.

பரத்தமையிற் பிரிந்த தலைவன் வாயில் வேண்டித் தூதுவிட தோழி தன் உள்ளக்கிடக்கையைத் தலைவியின் அன்புநிலையை இப்பாடலில் வெளியிடுகிறாள்.

தச்சன் செய்த சிறிய தேரில் ஏறிச் சிறார்கள் வையம் வலம் வர முடியாவிட்டாலும் அதனைக் கையாலே இழுத்துச் சென்று இன்புறுவர். அதுபோன்று நல்ல தேரினை உடையானும் வாவிகள் நிறைந்த ஊரினையும் உடைய அத்தலைவனுடன் இணைந்து வாழ்வில் இன்புறா விட்டாலும் அவ்வாழ்வைத் தம் கற்பனை யால் செய்து அவற்றின் மூலம் இன்புற்றோம். இதனால் எங்கள் வளை செறிந்தது என்பது இப்பாடல் தரும் பொருள்.

தேரில் ஊர்ந்து இன்பம் பெற முடியாவிடினும் அத்தேரினை ...டாது, சிறுவர்கள் தங்கள் கையினால் இழுத்துச் செல்வ தில் இன்பம் அடைதலைத் தோழி தலைவனுடன் இணைந்து வாழ்வதற்கு அவன் வராவிட்டாலும் அதனால் அவனை விலக் காது தம் மன உணர்வால் அவனுடன் வாழ்வதுபோன்ற மாயத் தோற்றத்தினை உண்டுபண்ணி இன்பம்அடைகிறோம் என்பதில் தலைவியின் து...ர் மிகுதியையும் கற்பனையிலாவது அவனுடன் வாழ வேண்டும் எ...ற மன உணர்வினையும் அவன் பால் கொண் டுள்ள காதல் மிகுதி...யையும் காட்டுகிறாள். இங்குத் தலைவன் தங்களை மதிக்காவிட்...லும் தாம்அவனை மதிப்பதை உணர்த்து வதையும் அவன் பரத்தை...கு உதவியாக இருக்கும் தேரினைச் சுட்டி அதன் மூலம் அவனைப்...ிப்பதையும் காண்கிறோம்.

தலைவன் இல்லாவிட்டாலும் ...லைவி கற்பனையினால் அவ னுடனேவாழ்கிறாள்என்றுகூறுவதை ...பொருளாகக்கொண்ட இப்பாடலில், அதனை உவமை இன்றி ...பாடி இருந்தால் அலங்காரம் இருக்காது. தச்சன் தேரினையும் ...ன இழுக்கும் சிறார்களையும் விட்டு வேறு ஒன்றினை உவமை...கூறினாலோ அலங்காரம் இருந்திருக்கும். ஆயின் தலைவியின் துய... மிகுதியோ அவளது மன உணர்வோ முழுமையாக வெளிப்பட்... பெற்...க்க முடி யாது. பொருள் விளக்கமும் இத்துணைச் சிறப்புப் பெ...க்காது

ஏற்றமிக்க, மன உணர்வினை வெளிப்படுத்தும் உவமை... அளவில் கவிதையின் உயிர்ப் பொருளாய் அமைந்தது,

Koviloor Digital Library

கற்பாரை ஈர்க்கிறது, கருப்பொருளுடன் இரண்டறக் கலந்து தான் வேறு அது வேறு என்ற நிலையினைக் கடந்து விடுகிறது என்பதற்கு இப்பாடல் ஓர் இனிய சான்றாம்.

உருவகம்

உவமானப் பொருளையும் உவமேயப் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று எனும் உணர்வினைத் தருவது உருவகம் ஆகும்

இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாமென
எரிநிறத்து இலவமும் முல்லையும் அன்றியும்
கரு நெடுங் குவளையும் குமிழும் பூத்தாங்கு
உள்வரிக் கோலத்து உறுதுணை தேடிக்
கள்ளக் கமலம் திரிதலும் உண்டு கொல்

(சிலம்பு5-212-217)

இந்திர விழவின்கண் மகளிரைக் கண்ட ஆடவர் எண்ணத்தை இளங்கோ இங்கே தருகிறார்.

இப்பெரிய நில உலகத்தினை ஆளுகின்ற அரசர்க்குப் பெருவளத்தின் இயல்பினைக் காட்ட வேண்டித் திருமகள் வந்து புகுந்ததுஇவ்வளமை நிறைந்த ஊர் என்று கருதிச் செந்நிறத்து இலவமும், வெண்ணிற முல்லையும், கரிய நீண்ட குவளையும் குமிழ் மலரும்பூத்தது போன்றுகள்ளக் கமலமானதுதனக்குப் பொருந்திய துணையான அத்திருமகளைத் தேடி உள்வரிக் கோலத்துடன் திரிதலும் உண்டோ என்று ஒருத்தியைக் கண்டு வி... கின்றனர் சிலர்.

இங்குப் பொருள் உவமை என்ற இரண்டில் ... எதற்கு உவமை சொல்லப்படுகின்றதோ அந்தப் பொருள் ... ன்றி உவமிக்கப்படும் பொருள் மட்டுமே கூறப்பட்டுள்ள... குவளர எறிறத்து இலவம் உதடுகளையும், முல்லைப் பற்களைய..., ... கண்களையும், குமிழ் மூக்கையும் மரபு காரணமாக ...றிக்கி... என்பதனை நாம் உணருகிறோம்.

கள்ளக்கமலம் என்...பதற்குக் கள்ளத்தனத்தை உடைய முகம் என்று பொருள் ... கூறி அதனையும் தனி அணி ஆக்கலாம். இந்திர விழவில் ... மாதவியின் ஆடல் இடம்பெற அதனால் கோவலன் ஊ...ல் கொள்வதும் கதை வளர்ச்சிக்குத் துணை புரிவதன் மூலம் ... இவ்விழவும் காப்பியத்தில் முக்கியத்துவம் பெறல் வெளிப்ப... இவ்விழவினைவிரித்தல்காப்பியப்போக்கிற்கு இன்றி...டை. எனவேஇவ்விழவினைவிரித்தல்காப்பியப்போக்கிற்கு ...யமையாததாகி இக்காட்சியும் தேவையான ஒன்றாகிறது'

Koviloor Digital Library

ஓசையினின்றோ கவிதைப் பொருளினின்றோ உருவகத்தைப் பிரிக்க இயலாதபடி அமைத்து கவிதைக்குநயத்தையும் கற்பாருக்கு இன்பத்தையும் நல்குகிறார் இளங்கோ.

தன் மேம் பாட்டுரை

ஒருவன் தன்னைத் தானே தம் பெருமை தோன்றும்படி மெய்ப்பாடுடன் கூறுவது இவ்வணி.

இராமனுக்கு அரசுரிமை இல்லை எனக் கேட்டு வெகுண்ட இலக்குவனை இராமன் அமைதிபடுத்துங்கால் சினந்தனியா இளவல்,

உதிக்கும் உலையுள் உறுதீ என ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம் எங்ஙனம் ஆற்றுவென் கோள்இழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல் வானவர்க்கும் வலி ஈதாம்
விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி (1735)

எனத் தன் பெருமை பேசுகின்றான்.

கொல்லன் உலைக்கூடத்தில் தோன்றும் மிக்கத் தீப்போல் கொதிக்கின்ற என் மனதினை எங்ஙனம் ஆற்றுவேன். இத்தீங்கு இழைத்த கைகேயிக்கு அறிவுக்கு அறிவூட்டுவதாயும் மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்ட வலியுடையவிதிக்கும்ஒருவிதியாகும் என் வில் தொழிலை நீ காண்பாயாக என்பது இக்கவியின் கருத்து.

கம்பன் காவியத்தில் இந்நிகழ்ச்சியை மீண்டும் நினைவுறுத்தாமல் இத்துடன் விட்டிருந்தால் இங்கு இவ்விடத்தில் இவ்வணி இவ்வளவு சிறப்புப் பெற்றிருக்காது. இப்பாடலைக் காவியத்தினின்று எடுத்து விட்டாலும் காவிய ஓட்டமோ நயமோ குறைந்திருக்காது. ஆனால் விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி என்ற இளைய பெருமாளின் வாய் மொழியாகவே, சீதையின் வற்புறுத்தலின் பேரில் பொய்மானைத் தொடர்ந்த தமையனைத் தொடரும் போதும், 'விஞ்சின விதியினை வெல்ல வல்லாமோ,' (3333) எனக் கூறவைத்து கற்பாரைஅவன் கூறிய இச்சொற்களையும் நினைக்க வைக்கிறான்.

இங்குக் கவிநயம் சிறப்பதையும் விதியை வெல்ல இயலாது எனும் கவிஞன் கொள்கை வெளிப்பாட்டையும், அப்பாடல் காவியத்தோடு வெகு அழகாகப் பின்னப் பட்டிருப்பதையும் காணலாம்.

தற்குறிப் பேற்றம்

இயல்பாக நிகழும் ஒன்றன் மீது புலவன் தன் கருத்து ஒன்றினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றம்.

Koviloor Digital Library

இவ்வணியும் பல புலவர்களால் போற்றி அமைக்கப்பட்டுள்ள சிறப்பினை உடைத்து. இவ்வணி கவிதையோடு சுவைபடப்பிணைந்துள்ள மாற்றைச் சிலப்பதிகாரப் புறஞ்சேரியிறுத்த காதையில் சுவைக்கலாம்.

கரு நெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலும் கனவனும் தனித்துறு துயரம்
ஐயமின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கப்
போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட (184-190)

என்பது அப்பகுதி.

மறு வாழ்வு தேடி மதுரை வரும் கோவலன் கண்ணகியரை வரவேற்கக் காத்திருப்பது அவலமே என்பதனை உள்ளுறையாகத் தற்குறிப்பேற்றம் மூலம் இங்குப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகர் அகழியின் புறத்தே வருங்கால் அகழி நீரில் மலர்ந்துள்ள குவளை, ஆம்பல், தாமரை மலர்கள், காப்பியத் தலைவன் தலைவியருக்கு வர விருக்கிற கொடுமையை ஐயத்திற்கிடமின்றி அறிந்தன போல் மிகுந்த துயர் கொண்டு தேனருந்த வரும்வண்டுகளின் ஒலியே தம் அழுகையாகத் துன்பம் தாழாது காலுற நடுங்குகின்றன. மதிலின் மேல் பறக்க விடப்பட்டுள்ள நெடுங்கொடி இங்கே வாராதீர் புறத்தே போவீர் என்று மறித்துக் கை காட்டுகின்றது என்பது இங்கு ஆசிரியர் கூற்று.

மிகஅருமையான இயற்கைக் காட்சி. கீழே அகழியில்மலர்கள். அதில் தேனருந்த வரும் பண்ணிசைக்கும் வண்டுகள் இனியகாற்று, மேலே நெடுங்கொடி- இவற்றைச் சாதாரணமாக வருணித்திருந் தால் இக் கவிச் சுவை இருந்திருக்காது. இத்தனுள் புலவன் வண்டு களின் இயல்பான ஒலியை மலர்களின் அழுகுரலாக மாற்றி யமைத்துக் காற்றில் கொடிகள் அசைவதற்கு 'வராதீர்' எனஅவை சொல்வதாகக் கற்பித்து தன் எண்ணத்தினைஅவற்றின் இயற்கை நிகழ்வில் ஏற்றியிருப்பதன் மூலம் காப்பியத்தோடு இப்பகுதி இணையவும் கற்பார் குவளை, ஆம்பல், தாமரை மலர்கள் போல் ஏங்கவும் வைத்து விட்டான்.

சுவை

உள் நிகழ் தன்மை புறத்துப் புலனாய் விளங்க எண் வகைப் பட்ட மெய்ப்பாட்டானும் இயல்வதைச் சுவை அணி என்பர்.

Koviloor Digital Library

எண் சுவையினைக் கவிதையில் வடிக்குபொழுது அச் சுவைகள் பிரதிபலிக்காவிட்டால் உயிரற்ற பொருளாய் விடும். சொல்லாலும் பொருளாலும் ஓசை நயத்தாலும் கவிதையில் அவை பிரவாகம் கொள்ளும் பொழுது அச்சுவைகள்கற்பாரையும் பற்றிக் கொள்கின்றன. புலவன் சிரித்தால் சிரித்து, சினம் கொண்டால் சிறி, அழுதால் அழுது கவிதையுடன் கற்பாரும் ஒன்ற இது உதவுகிறது.

சீகாளத்திப் புராணத்தில்,கண்ணப்பர் சருக்கத்தில்கண்ணப்பர் காளத்திநாதருக்குத் தன் கண் வழங்கிக் கொண்ட உவகையை நாமும் பெறும்படி பாடியுள்ளார் சிவப்பிரகாச மாமுனிவர்.

ஓடினான் திசைகள் எல்லாம் உடம்பெலாம் குலுங்க நக்கான்
பாடினான் வாயில் வந்தபடி எல்லாம் கைகள் கொட்டி
ஆடினான் துள்ளித்துள்ளி ஆரவாரித்தான் நின்று
நாடினான் செய்த செய்கை நன்று நன்றென வியந்தான் (169)

எளிய சொற்களால், இயல்பாக அமையும் படி பாடி நம்மைப் உவகைப் படுத்தும் சிவப்பிரகாசரைக் கண்டு நாம் வியக்கிறோம்.

அவலச்சுவைக்கு ஒரு சான்று காண்போம். கள்வன் என்ற [illegible]ழிவுடன் கொலை பட்டுக் கிடக்கும் கொழுநன் தன் உடல் இ[illegible]டு கதறுகிறாள் கண்ணகி.

[illegible]ர் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல் மேல்
கோ[illegible]ள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்ப்
புன்[illegible]தி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் [illegible] தன்னைக் காணாக் கடுந்துயரம்
என்னுறு துய[illegible]டும் இடர்உறும் இவள் என்னீர்
பொன்னுறு நறு[illegible] பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர் செலும் [illegible]றவினை அறியாதேற்கு
என்னுறு வினைகா[illegible]வென உரையாரோ
யாருமில் மருள்மாலை [illegible] தமியேன் முன்
நார்மலி மணிமார்பம் [illegible] கிடப்பதோ
பார்மிகு பழிதூற்றப் பாண்[illegible]யன் [illegible]ிழைப்ப
ஈர்வதோர் வினைகாணா இதுவென உ[illegible]யாரோ
கண்பொழி புனல்சோரும் கடுவினை உடை[illegible]யேன் முன்
புண்பொழி குருதியராய்ப் பொடியாடிக் கிடப்[illegible]தா
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணா இதுவென உரையாரோ
(வார்குழ்வரி [illegible]35-50)

Koviloor Digital Library

இங்குக் கண்ணகிபட்டுமா கதறுகிறாள். நாமும், அல்லவா நம் கண்களைக் குளமாக்குகிறோம். இதனை விடக் கண்ணகியின் நிலையைச் சிறப்பாகப் படைக்க இயலுமோ? அவலச் சுவையின் உச்சத்தை அல்லவா நாம் எட்டும்படிச் செய்து விட்டான் புலவன்.

முதல் நான்கு வரிகளுடன் புலவன் தன் காப்பியத்தைத் தொடர்ந்திருக்கலாம். காப்பிய ஓட்டமும் தடை பட்டிருக்க முடியாது. ஆயின் காப்பியத் தலைவியின் கூக்குரலை நாம் செவி மடுக்கும் பொழுது காப்பியத்திற்கும் வாசகருக்கும் இடையே சிறிதுகூட இடைவெளி இல்லாத நிலை தோன்றி ஒவ்வொருவரும் கண்ணகி ஆகவே மாறி விடுகிறோம். அதனால் முழுமையாகக் கண்ணகியின் நிலையினை உணர்கிறோம். பயில்வார் பாத்திரங்களின் இயல்பினை, நிலையினைத் தெளிவாக உணர வேண்டியது தேவையல்லவா? இங்கு இளங்கோ தன் புலமையால் வென்று விடுகின்றார்.

உயர்வு நவிற்சி

கவியால் கருதப்பட்ட ஒரு பொருளது வனப்புச் சொல்லுங்கால், உலக இயல்பு கடவாது வியப்புத் தோன்றும்படி மிகுத்துப்பாடுவது ஆகும்.

கார்முகில்வண்ணன் கானாளப் பிரிவான் எனக் கேட்ட அயோத்தி மாந்தர் விட்ட கண்ணீர், கடலாகத் தேங்கியது எனவும் வாய்விட்டுப் புலம்பிய பேரோசை வான்வரைச் சென்[illegible]று எனவும் மிகுதிப் படுத்திக் கூறியும் கம்பனால் திருப்தி அ[illegible]யாத முடியவில்லை. அஃறிணையும் அழுததாகக் காட்டுகிறான்.

ஆவும் அழுத அதன்கன்று அழுத அன்று அலர்ந்த
பூவும் அழுத புனல்புள் அழுதகள் ஒழுகும்
காவும் அழுத கன்று அழுத காலவயப் போர்
மாவும் அழுத அம்மன்னவனை மா[illegible] (1703)

[illegible]றும்,
காடாளப் போவான் என்பதனைக் கே[illegible]ந்நிலை என்றால், சென்றே விட்டால் அவை என்ன [illegible]படு[illegible] என நம்மைத் தன் கவிவன்மையால் வினவச் செய்[illegible]ம்பர், அதற்கு விடையும் உயர்வு நவிற்சியாகவே வியக்[illegible] தருகிறான்.

நீட்டில களிறு கைநீரின் வாய்புகல்
பூட்டில புரவிகள் [illegible]ளும் பார்ப்பினுக்கு
ஈட்டில இரைபுள்ற்று ஈன்ற கன்றையும்
ஊட்டில கறவை நைந்து உருகிச் சோர்ந்ததுவே (1813)

களிறு நீருண்ணவில்லை. குதிரைகள் புல்லைத்தின்ன வில்லை. பறவைகளும் பசுக்களும் தம் பார்ப்பினுக்கும் கன்றினுக்கும்

கு—

Koviloor Digital Library

பசியாரச் செய்தலை மறந்தன. அனைத்தும் துன்பக் கடலில் மூழ்கி மனம் நைந்து உருகிச் சோர்ந்து விட்டன.

காப்பியத் தலைவன் வனம்புக ஏகுவதால் ஏற்பட்ட சோகத்தினை மிகுவிக்கவும், காகுத்தன் மீது அவன்நாடு கொண்ட பற்றினைக் காட்டவும், தெய்வத் தன்மை உணர்த்தவும் கம்பனுக்கு இப்பாடல்கள் உதவுகின்றன. கம்பன் கற்பனை ஆற்றலைச் சுவைக்க நமக்குப் பயன்படுகின்றன. இதனால் காப்பியச் சுவைக்காக வெறும் அலங்காரமாக அமைக்காமல் அழகோடு, காப்பிய ஓட்டத்தில் தலைவனின் பெருமையும் துலங்கும் படியாகத் தன் புலமையைப் புலப்படுத்தியமையும் உணரப்படும்.

விடையில் வினா

அஃறிணைப் பொருள்களை அவைதம் கூற்றைக் கேட்பது போன்றும், அவற்றைச் சொல்வதுபோன்றும் உணர்வுடன், துயர், மகிழ்ச்சி இவற்றின் காரணமாக அவற்றை வினவுவது, விடை வேண்டாதே அமைவது இவ்வணி.

சங்க இலக்கியப் பாக்களில் இதனைப் பரவலாகக் காணலாம். இளங்கோ தன் கானல் வரியில் இதனைப் பயன்படுத்தியுள்ளார்.

புன் கண் கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
[illegible]ன்கள் வாய் நெய்தால் நீ எய்தும் கனவினுள்
[illegible]ன் கணார் கானல் வரக் கண்டறிதியோ (33)

தல[illegible]னைப் பிரிந்த தலைவியின் புலம்பலாக மாதவி பாடியது இப்பா[illegible]

வருத்த[illegible]தை மிகுவிக்கும் மாலைப் பொழுதிலே தலைவனைப் பிரிந்த துயரா[illegible]லம்ப[illegible] என் கண்கள் போன்று, துன்புறாமல் இனிது துயில்வத[illegible]ன்[illegible]தேனினை உடைய நெய்தலே, நீ எய்தும் கனவினுள் வ[illegible]மை உடைய என் காதலர் வரக் கண்டாயோ என நெய்தல் ம[illegible] நோக்கித் தலைவி வினவுகிறாள்.'

நெய்தல் கனவு கா[illegible]ப் பே[illegible]தும் இல்லை. அப்படியே கண்டாலும் சொல்வதற்கு[illegible] இயல[illegible]. இதனை அறிந்தும் தலைவி தன் துயர் மிகுதியால் பதிலை எதிர்பாராமலே வினாத் தொடுக்கிறாள், ஆயினும் என், நமக்கு விடையில் வினாவாக இனிய பாடல் கிடைக்கிறது.

கோவலன் மாதவியைப் பிரிவதற்குக் காரணமாய் அமைந்த பாடல்களுள் இது ஒன்று. கோவலன் மாதவி பிரிவு, மேற்கொண்டு

Koviloor Digital Library

கதையை நடத்திச் செல்வதற்கு உதவுவதுடன் காப்பியக் கதைத் திருப்பத்திற்கும் காரணமாய் அமைகிறது. ஆகவே இதன் முக்கியத்துவம் கூறாமலே பெறப்படும் ஒன்றாம்.

சிலேடை

ஒரு தொடருக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள் தருவது சிலேடையணி. பொது நிலையில் தனிப்பாடல்களில் மட்டுமின்றி பிறவகை இலக்கியங்களிலும் பரக்கக் காணலாம். இது புலவனின் கற்பனை வளத்தைச் சுவைக்கப் பெரிதும் பயன்படுவது கம்பனில் அதன் சிறப்பை இங்குக் காணலாம்.

தேவியைப் பிரிந்த துயரில் அவளைத் தேடி வரும் இராம இலக்குவரை இன்னார் என்று கிட்கிந்தை வேந்து சுக்கிரீவன் ஏவலால் காணவரும் வாயுமைந்தன், அவர்களை வரவேற்கும் சொற்களில் இரு பொருள் காண்கிறோம்.

'கவ்வை இன்றாக நுங்கள் வரவு' (3764)என்ற கூற்றில் உங்கள் வரவு துன்பம் தராதிருக்கட்டும் என்பது ஒன்று. உங்கள் துன்பம் நீங்கட்டும் என்பது மற்றொன்று.

காப்பியத்தில் இரு பொருள்களுமே உண்மை ஆதல் காண்கிறோம். சுக்கிரீவன் தன் பகை வாலி மடிய கிட்கிடந்தை அரசுரிமை பெறுகிறான் இராமன் துணையால். குரக்கினத்தின் துணையால் தன் பகை இராவணனை அழித்துத் தன் துணையைப் பெறுகின்றான் இராமன். அரக்கர்களை அழித்தால் அன்றி அயோத்தி திரும்புவதில்லை என்ற வஞ்சினமும் நிறைவேறுகிறது.

இராம இலக்குவர் வரவு இருசாராருக்குமே நன்மை பயத்தலைக் காண்கிறோம். புலவன் இரு பொருள் படப்பாடுவது பெரிதில்லை. அவை தான் எடுத்துக் கொண்ட பாடு பொருளோடு பொருந்தி வரும் பொழுதே சிறப்புறும். இங்கு இச்சிற[illegible] குறையற நிறைந்திருக்கக் காணலாம்.

[illegible]வ

[illegible]ழ்ச்சி

வேற்றுப் பொருள் வைப்பு

[illegible] பிரிந்

முன் ஒரு செய்தியைக் கூறிப் [illegible]ளர் என்று வேறொரு வலியுடைய செய்தியை [illegible] சய்தி [illegible] துச் சொல்வது வேற்று[illegible] [illegible]ளத்தில் ஊறி நிறைந்

கம்பன் இவ்வ[illegible] [illegible]ரவையில் [illegible]லியைக் குறைத்து இழினும் அனுமன் [illegible] டாக்[illegible]ன் இவ்வுரை அமைவதால் [illegible] கூறும் கூற்றி[illegible] [illegible]ன்றது.

Koviloor Digital Library

துன்பினைத் துடைத்து மாயத்தொல்வினை தன்னை நீக்கி
தென்புலத்து அன்றி மீளா நெறி உய்க்கும் தேவரோதாம்
என்பு எனக்கு உருகுகின்றது இவர்கின்றது அளவு இல் காதல்
அன்பினுக்கு அவதி இல்லை அடைவு என் கொல் அறிதின்
தேற்றேன் (3763)

வாழ்வின் துன்பங்களை, இல்லை எனும்படித் துடைத்து பழைய கர்ம வினைகளை நீக்கித் தென்புலத்துச் செலுத்தாமல் மீண்டும் பிறத்தல் இல்லாத அழியா பதத்தில்சேர்ப்பிக்கும் தேவர்களோ இவர்கள்? இவர்களைக் கண்ட அளவிலேயே எலும்புகளும் உருகுகின்றன. அளவு இல்லாத காதல் பெருகுகின்றது. அன்பிற்கு ஓர் அளவு இல்லை. இதனால் எனக்கு உண்டாகக் கூடிய நலம் யாது? எளிதில் நான் தெளியேன் என்பது இப்பாடற் பொருள்.

அஞ்சனை மைந்தன் கொண்ட அன்பினை விரிக்கப் புகுந்த கம்பன் அவன் கொண்ட காதலை முழுமையாகக் காட்ட முடியாமல் அன்பிற்கு எல்லை இல்லை என்ற உலகறி பொருளால், கற்பாரே அனுமன் கொண்ட அன்பினை உய்த்துணரும்படி வைத்து விடுகிறான். பாடல் அணிநலம் பெறுகிறது.

இராமனிடம் பற்றுக் கொண்ட பத்திரங்களுள் அனுமன் மிகவும் முக்கியமானவன். ஆண்டான் அடிமை என்ற நிலையில் அவன் கொண்ட பற்று விரிக்க இயலாததாய் அமைவதைப் பின்வரும் நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன. அனுமனின் செயற்கரிய செயல்களுக்கெல்லாம் ஆணிவேராய் நின்றிலங்கியது, இக் காதலே. 'ஆர் உதவிடுதற்கு ஒத்தார் நீ அலால்? அன்று செய்தபேர் உதவிக்கு யான் செய் செயல் பிறிது இல்லை, பைம் பூண் போர் உதவிய திண் தோளாய்'' என்று ஐயனே அவன் செயல் கண்டு வியக்க, அதற்கு அடிப்படையானத் தூய காதலைக் கணிக்க எப்படி இயலும். எனவே தான் கம்பன் இடனறிந்து ஒப்பற்ற அவன் அன்பினைப் பொது நிலையில் தந்து சிறப்பிக்கின்றான்.

காப்பிய நிலையில் மட்டுமின்றித் தனிப்பாடல் நிலையிலும் ...ணி சிறந்துள்ளமையைச் சங்க இலக்கியப் பாடல் ஒன்றின் ...ாட்டலாம்.

... குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து
... நெருநை
...

...ளியே (ஐங்-71)

... நோக்கித் தலைவி

Koviloor Digital Library

தலைவன் பரத்தையுடன் புனல் ஆடியதால் ஊரில் அலர் எழுகிறது. அவ்வலரால் உண்மை உணர்ந்த தலைவி வினவ, தலைவன் அதனை இல்லை என மறுக்கிறான். அவன் மறுப்பினைப் பொய்ம்மை என்று உறுதிப்படுத்த விரும்பும் தலைவி, பரத்தையுடன் புனலாடியதை மறைத்தாலும் அதனால் எழும் அலரினை மறைக்க முடியாது, என்று கூறி அவன் புனலாடியது உண்மை என்பதனைச் சூரியனது ஒளியை யாராலும் இல்லையெனும் படிச் செய்ய முடியாது எனும் உலகறி செயலால் வலியுறுத்தி முடிக்கின்றாள். சூரியனை மறைக்க முடியாதது எவ்வளவு உறுதிப்பாடுடையதோ அந்த அளவிற்கு அலரை மறைக்க முடியாது என்பதும் உறுதிப்பாடுடையது. அதன் காரணமாகப் புனலாடியதும் உண்மை ஆகி, தலைவனின் கூற்றுப் பொய்மைப் படுகின்றது.

இங்கு 'புதைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே' எனும் உலகறி பொருளில் இக்கவிதையின் உயிர் அமைந்து இவ் அணிக்கு மிகச் சிறந்த சான்றாகிறது. இவ்வொரு வரியினாலேயே இக் கவிதை பெருமதிப்புப் பெற்று இலக்கிய நயம் சிறக்க அமைந்துள்ளது.

நுட்பம்

தான் கூறவரும் பொருளைக் குறிப்பால் அல்லது தொழிலால் உணர்த்தல் இவ் அணியாகும்.

மிதிலைச் செல்வியைத் தேடிச் சென்ற அனுமன் தசரதன் மைந்தனிடம் மீண்டவுடன் தேவியைக் கண்டதைக் குறிப்பால் உணர்த்துகிறான்.

எய்தினன் அனுமனும் எய்தி, ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி வாழ்த்தினான் (60[illegible]

இராமனை வந்தடைந்த அனுமன் ஏந்தல் தன் கழல் [illegible] அவ வில்லை. முளரி நீங்கி வையம் வாழ்தற் பொருட்டு இப் [illegible]ழ்ச்சி தோன்றிய தையல் இருக்கும் திசை நோக்கித் தலை வைத் [illegible] பிரிந் யைத் தழுவி, கைகளைக் கூப்பி அவளை வாழ்த்துகிற[illegible]ளர் என்று

தலைவனை வணங்கிப் பின் செய்தி [illegible] மரபு. இங்குத் தலைவன் மனம் [illegible] நிலை அறியத் துடித்துக் கொ[illegible] [illegible]ள்த்தில் ஊறி நிறைந் அதே பொழுது செய்தியை[illegible] [illegible]வியைக் குறைத்து இழியும் செயல்படுத்த அனு[illegible] டாக்[illegible]ன் இவ்வுரை அமைவதால் [illegible] [illegible]ன்றது. கிறது.

Koviloor Digital Library

சீதை இருந்த திசை நோக்கித் தொழுதலால், தலைவியை வணங்குதலால், தலைவனை வணங்குதல்பெறப்படுவதுடன் அவள் உயிருடனும் கற்பில் குறைவுபடாது இருத்தலும் பெறப் படுகின்றது. கம்ப நாடகக் காட்சிகளில் ஒப்பற்ற சிறந்த காட்சி யாக இது விளங்குகிறது. இராமன் அக்குறிப்பினை உணர்ந்ததனை

தின் திறல் அவன் செயல் தெரிய நோக்கினான்
வண்டு உறை ஓதியும் வலியள் மற்று இவன்
கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று எனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்கையான் (6029)

எனும் பாடல் உணர்த்துகிறது. அனுமனின் மதிநுட்பத்தை உணர்த்த இதனை ஓர் வாய்பாகப் புலவன் பயன் கொள்கிறான்.

துன்பம்

விருப்பத்துடன் ஆரம்பித்த செயல் துயரத்துடன் முடிவதை இவ்வணி சுட்டும் இதற்குச் சான்றாக ஓர் குறட்பாவைக் காட்ட லாம்.

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (1314)

தலைவியை மகிழ்விக்கும் நோக்கில் விருப்பத்தோடு, எனக்குப் பிறரை விட உன்னிடத்தில் அதிகக் காதல் என்று தலைவன் கூறு கிறான். அது தலைவியை மகிழ்விப்பதற்குப் பதிலாக ஊடலைத் தோற்றுவிக்கிறது. எவரையும் விட என்றால், யார் அந்த எவர் உன்பாற் காதல் கொண்டவர்கள் என்று தலைவி ஊட தலைவன் மகிழ்வுடன் ஆரம்பித்த செயல் அவளுக்கே துன்பமாக முடிகிறது.

தலைவன் பொது நிலையில் யாரினும் எனக் கூற அதுவே தலைவியால் தலைவனின் பிற காதலர்களாக உட்கொள்ளப் பட்டுத் துன்பத்திற்கு ஏதுவாகிறது. இரண்டே அடிகளில் மிக அழகிய ஓர் கவிதையை இவ்வணியில் வடித்துள்ளார் ...ருவர்.

...ம்

...மானத்தை விட உவமேயத்தை உயர்வுடையதாகக் கூறு ... சங்க இலக்கியக் குறுந்தொகைப் பாடல் ஒன்றினை ...லாம்.

...னும் உயர்ந்தன்று

...நட்பே (குறுந். 3)

Koviloor Digital Library

தலைவன் வரைதலைநினையாது நாட்கடத்தும்பொழுது அவனை இயல்பழித்து தோழி மொழிகிறாள். அவளுக்கு உண்மை உணர்த்துவதற்காகத் தாங்கள் கொண்ட காதலின் அளவைக் கூறி அவனைப் பாராட்டிப் பேசுகின்றாள் தலைவி. அவன் விரைவில் தன்னை மணப்பான் என்பதனையும் அதனால் உணர்த்துகிறாள்.

மலைச் சாரலில் மலர்ந்துள்ள குறிஞ்சிப்பூக்களின் தேனைக் கவர்ந்து கொண்டு வந்து, வண்டுகள் பெரிய தேனிறாலைக் கட்டுகின்ற நாட்டை உடைய தலைவனோடு கொண்டுள்ள நட்பு அகலத்தால் நிலத்தை விடப் பெரிது. உயரத்தால் விசும்பினை விடப் பெரிது. அதன் ஆழம் கடலை விட மிகுந்தது. இவ்வாறு அதன் அளத்தற் கருமையைக் கூறி அவள் நட்பின் பெருமையை உணர்த்துகிறாள்.

இங்கு உவமையாக வரும் நிலம், விசும்பு, கடல் இவற்றின் இயல்பை விட உவமேயப் பொருளான காதல் உயர்வு உடையதாகப்பெருமை பேசப்படுதலின் இவ்வணியின் பாற்படுகிறது.

வேண்டல்

குறையுடைய ஒன்றாயினும் அதனால் குணம் கிடைப்பின் அதனையே வேண்டுவதாக அமைவது இவ்வணியின் பாற்படும்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெந்நீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மா நிலத்தே (பதி81:4)

என்ற நாவுக்கரசர் பாடலை இதற்குச் சான்றாகக் காட்டலாம். இங்குப் பொருள் வெளிப்படை.

பிறவாப் பேரின்பமே நாவுக்கரசருக்குப் பெருமையுடையது என்பது 'மனித்தப் பிறவியும்' என்று உம்மையுடன் கூறியுள்ளமையினின்று வெளிப்படும். அப்பெருமையினும் சிறுமை உடைய மானிடப் பிறவியை வேண்டுவதன் நோக்கம், தில்லைக் கூத்தனின் திருவுருவைக் காணும் பேறு கிடைப்பதால் அதனை விரும்[illegible]தாகப் பாடி இவ்வணிக்கு அணி சேர்க்கிறார். அவ [illegible]ழ்ச்சி [illegible] பிரிந்

உள்ளுறை

உவமானத்தைக் கூறி அதன் வாயிலாக உவ[illegible]ள் என்று பெறும்படி உள்ளுறுத்துப் பாடுவது.

சிலம்பின் குன்றக் குரவையில் இவ்[illegible]ளத்தில் ஊறி நிறைந்[illegible]பினைக் காணலாம்[9] குன்றக் குரவையி[illegible]லியைக் குறைத்து இழி

9. சிலம்பின் சில பரல்கள் டாக்[illegible]ன் இவ்வுரை அமைவதால் [illegible] குன்றக்குரவை. [illegible]ன்றது.

Koviloor Digital Library

பேரின்பத் தலைவி. குன்றக் குரவையில் கூறப்படுகின்ற குறிஞ்சி நிலத் தலைவி சிற்றின்பத் தலைவி. சிற்றின்பத் தலைவி தான் நினைத்த காதலனை, முருகனையும் கண்ணகியையும் வழிபட்டு அடைகின்றாள். பேரின்பத் தலைவியும் தான் நினைத்த பிணிப்பு அறுத்தோர் தம் பெற்றியை எய்துகின்றாள். இதையே உள்ளுறையாகவும், இறைச்சியாகவும் நின்று பொருள் உணர்த்துகின்றன குன்றக் குரவைப் பாடல்கள்.

எற்றொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைக்
கற்றீண்டி வந்த புதுப்புனல்
கற்றீண்டி வந்த புதுப்புனல் மற்றையார்
உற்றாடின் நோம் தோழி நெஞ்சன்றே!

என்னொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைப்
பொன்னாடி வந்த புதுப்புனல்
பொன்னாடி வந்த புதுப்புனல் மற்றையார்
முன்னாடின் நோம் தோழி நெஞ்சன்றே!

யாதொன்றும் காணேம் புலத்தல் அவர்மலைப்
போதாடி வந்தபுதுப்புனல்
போதாடி வந்தபுதுப்புனல் மற்றையார்
மீதாடின் நோம் தோழி நெஞ்சன்றே! (4-6)

தலைவனின் மலையினின்றும், கல் தீண்டி பொன் தீண்டி, போது ஆடி வந்த புதுப் புனல் மீது பிறர் 'ஆடின்' என் நெஞ்சம் நோகின்றதே ஏன் தோழி என வினவுவதாக இப்பாடல்கள் அமைகின்றன.

கல்லைத் தீண்டி வருகின்ற புனல் தலைவி ஆகிய பொன்னையும் நாடி வருகிறது. அதே வேளையில் மலை படு பொருளாகிய பொன்னோடு கலந்தும் வருகின்றது. மலர்க் கூட்டங்களை அள்ளி வருகின்ற புனல் மலர்க் கூட்டத்தைத் தழுவியும் வருகின்றது. கல்லையும் பொன்னையும் மலரையும் புனிதப்படுத்து ...ின்றது அப்புனல். ஆயின் அவைகளோடும் வருகின்றது.

...இங்கே ஒன்றாயும் வேறாயும் இருக்கின்ற தத்துவக் கருத்து ...த்தப்படுகின்றது. வினைகள் மிக்கு அமைந்த உயிராகக் ...வும் கடிய நெஞ்சேன்' என்றுகூறுவதைப் போன்று கல்லாக ...நெஞ்சு. கற்றீண்டி வந்த புதுப்புனல் கல்லைப் புறத் ...யது. வினைகள் மிக்கிருந்த உயிராகிய கல்லை ...ருவியில் நீராட்டும் போது சிறிது மென்மைத் ...யிர் பொன்னாக மாறுகின்றது. 'பொன் ...றுவதையும் கேட்டிருக்கின்றோம் ...ன் விருப்பம் போல் ஆக்குகின்ற

Koviloor Digital Library

உலோகப் பொருளாக மாற்றம் அடைந்த நெஞ்சு இன்னும் சில காலம் கழித்து சில வினைகளை நீக்கி அழுக்குகளைக்களைந்து, மென்மையான தூய்மையான பிறகு மணத்தைத் தருகின்ற பூப் போன்ற நெஞ்சாக வடிவெடுக்கின்றது. மலரால் இறைவனை வழி படுவது போன்று கல்லாயிருந்த உயிர் பொன்னாகிப் பூவாகி இறைவன்பாதத்தை அடைகின்றது. இதுவே 'பிணிப்பறுத்தோர் தம் பெற்றி' என அடிகள் கூறுவதாகத் தோன்றுகிறது.

சிற்றின்பம் காட்டிப் பேரின்பம் உணர்த்தும் நெறியை இங்கே இளங்கோ இக்குன்றக்குரவைப் பாடல்கள் மூலம் உள்ளுறைப் பொருளில் அமைத்துச் சிறப்பித்துள்ளார்.

ஆர்வமொழி

உள்ளத்தில் நிகழும் விருப்பம் காரணமாகத்தோன்றும்மொழி ஆர்வ மொழியாகும்.

அண்ணன் வாழ வேண்டும் எனும் வேணவாவில் அவனைத் திருத்த முயலும் வீடணன் இராவணனின் தவறினை எடுத் துரைத்து இராம இலக்குவரின் மேன்மையை இயம்பி அறவழிச் செல்ல வேண்டுகிறான்.

சீதையின் பால் கொண்ட காமம் கண்ணை மறைக்க, அவன் உரைத்த நீதிகளை ஏற்காத இராவணன், மாறுபட மொழி கின்றான். இம்மொழிக்குக் காரணமாக அமைவது அவனது வீரம் மட்டுமன்று; சீதையின் பால் உள்ள விருப்பும், அவளை அடைந்தே தீர வேண்டும் எனும் அடங்கா ஆவலும் ஆகும். எனவே தான், கீழ் வருமாறு பாடுகிறான்.

ஊன வில்இறுத்து ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டிக்
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து உயர் வனம் குறுகி
யான் இழைத்திட இல் இழந்து இன்னுயிர் சுமக்கும்
மானிடன் வலி நீ அலால் ஆருளர் மதிப்பார் (6179)

இராமன் இறுத்த வில் ஊனமுடையது. வீழ்த்திய மராமரங் கள் உளுத்து ஓட்டைகள் நிரம்பிநின்றன. ஆதலால் தான் அவ னுக்கு அக் காரியங்களை இழைக்க முடிந்தது. கூனியின் சூழ்ச்சி யால் அரசினை இழந்து, என் சூழ்ச்சியால் மனைவியையும் பிரிந் துள்ள அவனை, உன்னை அல்லால் மதிப்பதற்கு யார் உளர் என்று இகழ்ந்து பேசுகின்றான்.

சீதையை அடைய வேண்டும் என்றுஉள்ளத்தில் ஊறி நிறைந் துள்ள மனப் பின்னணியில் மாற்றான் வலியைக் குறைத்து இழி வாக மதிப்பிடுவதாக இராவணனின் இவ்வுரை அமைவதால் பாடல் இவ்வணியின் பாற்படுகின்றது.

Koviloor Digital Library

மேற்காட்டப்பட்ட அணிகள் பொது விளக்கங்களின் அடிப் படையில் மட்டுமே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகைப்பாடுகளைக் கொண்டுள்ளன. அவையும் ஒவ்வொரு நூலாரின் கருத்திற்கு ஏற்பவும், பார்க்கும் கோணத்திற்கு ஏற்பவும் வேறுபடுகிறது. ஒவ்வொரு அணியின் விரிந்த விளக்கங்களில் ஒவ்வொரு நூலும் மற்றொன்றிலிருந்து வேறுபடக் காணலாம். இவ்விடத்தில் அவ்வேறுபாடுகளைச் சுட்டல் தேவை அன்று ஆதலின், விளக்கத்திற்காகத் தன்மை அணி யின் வகைப்பாடுகள் மட்டும் இங்குக் காட்டப்படுகின்றன.

தன்மை மிகச் சாதாரணமான ஓர்அணிதான். எல்லாப் புலவர் களாலும் பாடப்படுவதாகும். இருப்பதை இருக்கின்றபடி வர்ணி பது இவ்வணியாகும். அணிகள் என நாம் கூறியுள்ள பிற அலங் காரங்கள் கூடுமான வரை இல்லாமல் பாடுவது என்றும் கொள்ள லாம். ஆயின் இதன் சிறப்பு வருணிக்கப்படும் பொருளைக் கற்பார் நேரிலே பார்ப்பது போன்ற தோற்றத்தைத் தருவ தாகும். சாதாரணமான ஒன்றாகக் காணப்படினும் கற்போர் கவிஞன் காட்சிப் படுத்தும் பொருளைத் தன் அகக் கண்ணாலும் படம் பிடிக்கும்படியாக அமைக்க வேண்டி இருப்பதால் இவ் வணியும் புலவனின்புலமைக்கு ஒரு அறைகூவலே ஆம். இதனை நோக்கியே அணிநூலார், இதற்குச் சிறப்பளித்து முதலாவதாக அமைத்தனர் போலும்.

தண்டியாசிரியர் இவ்வணியைப் பொருள்தன்மை நவிற்சி, சாதித் தன்மை நவிற்சி, குணத்தன்மை நவிற்சி, தொழில் தன்மை நவிற்சி என நான்காகப்பகுத்துள்ளார். அணியிலக்கண நூல் களுள் முதன்மை பெறுவது தண்டியலங்காரமாதலின் அந்நூல் கூறும் பாகுபாடுகளின் கீழ் இவ்வணி விளக்கப்படுகிறது.

பொருள் தன்மை நவிற்சி

உயர்ந்த ஒரு பொருளை அதனிடத்துள்ள பல விதமான இயல்புகள் விளங்கும்படி அழகுறக் கூறுதல் இவ்வணி ஆகும்.

போர்க்களத்தில் விடணன் இராமனுக்குக் கும்பகர்ணனை அறிமுகப்படுத்தும் பாடலில் கம்பர் இவ்வணி அமையுமாறுபாடி உள்ளார்.

ஊன் உயர்ந்த உரத்தினான்
மேல் நிமிர்ந்த மிடுக்கினான்
தான் உயர்ந்த தவத்தினான்
வான் உயர்ந்தவரத்தினான் (7391)

Koviloor Digital Library

உடல் ஆற்றலில் மிகுந்த வன்மை மிக்கவன். மிகவும் உயர்ந்த மன உறுதி கொண்டவன். தான் செய்த உயர்ந்த தவத்தின் பயனாய் வானளவு உயர்ந்த வரங்களை உடையவன்.

இங்குக் கும்பகர்ணனை அறிமுகப்படுத்தும் கம்பர் அவனது உடல் வலி, மன வலி, செய்த தவம், பெற்ற வரம் ஆகியவற்றால் அறிமுகப்படுத்துகிறார். இடம் போர்க்கள மாதலாலும் போருக்கு இன்றியமையாத் தேவை உடல் உறுதியும் மன உறுதியும் ஆதலாலும் அவற்றை முதலில் இயல்பாக எவ்வித அலங்காரமும் இன்றிக் கூறுகிறார். பின் அவற்றின் பயனாய், செய்த தவம் விளைத்த வரத்தின் அளவினையும் இயல்பாகவே கூறி அவ்வரத்தின் அதிகத்தால் அவன் அகப் புற வலிமையின் பெருமையை நாம் எளிதில் உய்த்து உணர்ந்து கொள்ளும்படி அமைத்துள்ளார். எளிய சொற்களைக் கொண்டு இயல்பான முறையில் கற்பனை முதலான அலங்காரங்களின்றித் திறம்படக் காட்டுகிறார் கம்பர். இவ்வகையில் இப்பாடல் சிறப்புப் பெறுகிறது.

சாதித் தன்மை நவிற்சி

ஒரு குறிப்பிட்ட இனம் பற்றியவருணனையே சாதித் தன்மையாம்.

பொழில் இறுத்த அனுமனைப் பிடித்து வரும்படி இராவணன் கிங்கரரை அனுப்புகின்றான். கிங்கரர் எனும் தனி இனமாகிய அவர்களைக் கம்பன்.

> கட்டிய வாளர் இட்ட கவசத்தர் கழலர் திக்கைத்
> தட்டிய தோளர் மேகம் தடவிய கையர் வானை
> எட்டிய முடியர் தாளால் இடறிய பெருாப்பர் ஈட்டிக்
> கொட்டிய பேரி என்ன மழை என குமுறும் சொல்லார்
>
> வானவர் எறிந்த தெய்வ அடுபடை வடுக்கள் மற்றைத்
> தானவர் துரந்த ஏதித் தழும் பொடு தயங்கும் தோளர்
> யானையும் பிடியும் வாரி இடும் பிலவாயர் ஈன்ற
> கூனல் வெண் பிறையின் தோன்றும் எயிற்றினர் கொதிக்கும்
> கண்ணர் (5494-5495)

என்று காட்சிப்படுத்த, அவர்களின் பிரம்மாண்டமான தோற்றத்தினைப் பார்த்துக் கற்பார் திகைக்கின்றனர்.

சாதித்தன்மைக்கும், முன்கூறிய பொருட் தன்மைக்கும் மிகுந்த வேறுபாடு இல்லை. ஒன்றன் வருணனையே அதன் தனி வருணனை ஆகும் பொழுது பொருட் தன்மை ஆகவும், அது சார்ந்த இனத்தின் வருணனையாகும் பொழுது சாதித் தன்மை ஆகவும் கொள்ளலாம்.

Koviloor Digital Library

குணத்தன்மை நவிற்சி

ஒன்றன் குணத்தை அது உள்ளபடியே வர்ணித்தல் குணத் தன்மை ஆகும்.

இராமனைக் காணவரும் பரதனைக தவறாக உணரும் குகன் கொண்ட சினத்தினை வெகு அழகாக வருணிக்கின்றான் கம்பன்.

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டியது அமர் எனக் கிளரும் தோளினான் (2511)

குகனின் சீற்றம் இங்கே நம்மை அச்சுறுத்துகிறதே! மெய்ப்பாடுகள் வருணனை நோக்கில் அமையும் பொழுது குணத்தன்மை நவிற்சி ஆகின்றன.

தொழில் தன்மை நவிற்சி

ஒரு தொழில் நடைபெறும் தோற்றத்தை இயல்பு கடவாத படி அழகுற உரைத்தல் தொழில் தன்மை ஆகும்.

இராவணனும் அனுமனும் போர்க்களத்தில் ஒருவருக் கொருவர் நெடுமொழி உரைத்துக் கொண்ட போது இராவணன் தன் உரைக் கேற்ப அனுமன் மீது குத்துகிறான் அவன் குத்துத லாகிய அத் தொழிலைப் புரிந்தமையைக் கம்பன் இயல்பட,

உறுக்கி தனி எதிர் நின்றவன் உரத்தில் தனது ஒளிபல்
இறுக்கி பல நெடுவாய் மடித்து எரிகண் தொறும் இழிய
முறுக்கிப் பொதி நிமிர் பல் விரல் நெரிய திசை முரியக்
குறுக்கிக் கரம் நெடுந்தோள் புறம் நிமிரக் கொடுகுத்த (7200)

என்று வருணிக்கின்றான்.

தன்னுடைய பலவாகிய பெரிய வாய்களை மடித்து, ஒளி விடு கின்ற பற்களை இறுகக் கடித்துக் கொண்டு, நெருப்பு விழிகள் தோறும் வெளிப்படவும், வெகுண்டு கனமான நிமிர்ந்த பலவாகிய விரல்கள் ஒன்றாக இணையுமாறு திரித்துக் கொண்டு திசைகள் நிலை கெடும்படி கைகளை நீண்ட தோள்களில் பொருந்து மாறு மடக்கிக் கொண்டு, தனித்துத் தன் எதிரில் நினறவனான அனுமனுடைய மார்பின் கண் குத்தினான் என்பது இப்பாடல் தரும் பொருள்.

இராவணன் அனுமனைக் குத்தினான் என்ற கருத்தினைக் கூற வரும் கவிஞன், அவன் எப்படிக் குத்தினான் என்பதை கற்பார் முழு அளவில் நேரே காண்பது போன்று தெளிவாகத்

Koviloor Digital Library

தம் அகக் கண்ணால் காணும்படிச் சிறப்பாகப்பாடி உள்ளான் பிற அணிகளின் உதவியின்றியே.

சில அணிகளிடையே மிகச் சிறிய வேறுபாடுகளே இருக்க அவற்றைத் தனித் தனி அணிகளாக இலக்கண நூலார் விளக்கம் அளித்துள்ளனர். சான்றாக ஐயம். மயக்கம் நினைப்பு என்ற மூன்றினையும் எடுத்துக் கொள்ளலாம்.

ஐயம்

இதுவோ அதுவோ அல்லது வேறு ஒன்றோ என்ற ஐயப் பாட்டுடன் ஒரு பொருளைக் கூறுவதே இவ்வணியின் இலக்கணம்.

பெரிய புராணத்தின் கண், பரவை யாரைக் கண்ட ஆளுடை நம்பியார் வியந்து அவர் அழகில் மயங்கி,

கற்பகத்தின் பூங்கொம்போ காமன் தன் பெருவாழ்வோ
பொற்புடை புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவன் அருளோ அறியேன் (286)

என்று தடுமாறி நிற்பது இவ்வணிக்குச் சிறந்த சான்றாம். பரவை யாரின் சிறப்பினைச் சிறப்பிக்கச் சேக்கிழாருக்கு இவ்வணி கை கொடுத்துள்ளது. கற்பாரும் பரவையாரின் அழகு இப்படி இருந்திருக்குமோ, அப்படி இருந்திருந்திருக்குமோ அன்றி எப்படி இருந்திருக்கும் என எண்ணச் செய்து, கற்பனை ஆற்றலுக்கு வழி அமைக்கிறது.

மயக்கம்

ஒரு பொருளை அதனுடன் ஒப்புடைய வேறு ஒன்றாகக் கருது வது மயக்க அணியின் பாற்படும்.

கரியமலர் நெடுங்கட் காரிகை முன் கடல் தெய்வம் காட்டிக் காட்டி
அரிய சூள் பொய்த்தார் அறனிலர் என்றே ஏழையம் யாங்கு அறிவோம் ஐய
விரிகதிர் வெண்மதியும் மீன் கணமும் ஆம் என்றே விளங்கு வெள்ளைப்
புரிவளையும் முத்தும் கண்டு ஆம்பல் பொதி அவிழ்க்கும் புகாரே, எம்மூர். (கானல்:5)

கானல் வரியாகக் கோவலன் பாடிய இவ்வகப் பாடலில் இளங் கோவடிகள் மயக்கத்தை அமைத்து, அதன் மூலம் மாதவியின் மதி யையும் மன்னும் ஓர் குறிப்புண்டு இவன் தன் நிலை மயங்கினான் என மயக்கிக் காப்பியத்தையே திசை திருப்பிய சாதனையைப் புரிந்துள்ளார்.

Koviloor Digital Library

சருங்குவளை. மலர்போன்ற நெடிதான கண்களை உடைய வள் எம் தலைவி அவள் முன்னர் இக்கடல் தெய்வத்தைக் காட்டிச் செய்த அரிய சூள்களை எல்லாம் பொய்த்தான் தலைவன். அறன் இலாதவன் அவன் என்பதனை ஏழையாகிய யாம் எப்படி அறி வோம். விரிகதிர்களை உடைய வெண்மதியினையும், மீன்கணங் களையும் கண்டு மலரும் ஆம்பல் மலர்கள் ஒளிவிடும் வெண்மை நிறமுடையப் புரிகளைச் சந்திரனின் கதிர்களாகவும் அதனை வழங்கும் சங்கங்கினை மதியாகவும், வெண்முத்துக்களை விண் மீன்களாகவும் எண்ணிப் பகற் பொழுதிலேயே மலரும் புகார் அன்றோ எம்மூர் என்பது பாடற்பொருள்.

எங்ஙனம் ஆம்பல் சங்கினையும் முத்துகளையும் வெண்மதி யாகவும் விண் மீன்களாகவும் தவறாக எண்ணி மயங்கியதே அஃதே போன்று தலைவியும் அறனில்லாத் தலைவனை அறன் உடையவனாக அவனது பொய்ச் சூளை உண்மைச் சூள் என்று நம்பி மயங்கியதை உணர்த்துகிறார் இளங்கோ இவ்வணியின் உதவியால்.

நினைப்பு

ஒரு பொருளைக் கண்டு ஒப்புமையினாலே மற்று ஒரு பொருளை நினைத்தலை இவ்வணி குறிக்கும்.

விரிந்த குவளை சேதாம்பல் விரைமென் கமலம் கொடி வள்ளை
தரங்கம் கெண்டை வரால் ஆமை என்று இத்தகையதமை
நோக்கி மருந்தின் அனையாள் அவயவங்கள் அவை நிற்கண்டேன் வல்அரக்கன்
அருந்தி அகல்வான் சிந்தினவோ? ஆவி உரைந்தி ஆம் அன்றே(3733)

பாதக அரக்கன் செய்கையால் பிரிவுத்துயரில் ஆழ்ந்த இராக வனுக்குப் பம்பைப் பொய்கையில் மலர்ந்துள்ள குவளை, சேதாம் பல், கமலம், வள்ளை முதலிய மலர்கள் முறையே காதற் கிழத்தி யின் கண்களையும் இதழ்களையும் முகத்தினையும் செவிகளையும் நினைவூட்டுகின்றன. அலைகள் வயிற்றின் மடிப்பினையும் வரால் கணைக்கால்களையும் ஆமை புறவடிகளையும் நினைவூட்டி மனக் கலக்கத்தை மேலும் மிகுவிக்கின்றன; நமக்கு நினப்பு அணியின் பாற்படும் சிறந்த பாடலைத் தருகின்றன.

உவமை அணியின் மூன்று வேறுபட்ட நிலைகளின் வெளியீடு களாகவே இவ்வணிகள் அமைந்துள்ளன. ஐய அணியை ஐய உவமையாகவே வீரசோழியம், தண்டி, இலக்கண விளக்கம், தொன் னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகியன கூறும், மாறன் அலங்காரம்

Koviloor Digital Library

சந்திரா லோகம். குவலயானந்தம் 1,2 ஆகியனத் தனி அணியாக நவில்கின்றன. இம்மூன்றினையும் தொடர்புடையதாக முதன் முதலில் குவலயானந்தம்—1அமைத்தது.

இதுகாறும் பொருணிகளுள் சில இலக்கியத்துள் சிறப்பிடம் பெற்றுள்ளமை சிறிது விளக்கப்பட்டது. இப்பொருள் அணிகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது தனித்து வருவன அல்ல. ஒன்றின் தாக்கம் மற்று ஒன்றிலும் காணலாம். சான்றாகத் தற்குறிப்பேற்றம் உவமையிலும், சிலேடை, உவமை, உருவகம், விலக்கு, வேற்றுமை, வேற்றுப், பொருள் வைப்பு எனப்பல அணி களில் வரக் காணலாம்,

இது தவிர ஒன்றுக்கு மேற்பட்ட அணிகளின் பாற்படும்படி இப்பொருளணிகள் பல பாடல்களில் அமைதலுண்டு. இதனையே சங்கீரணம் என்று தனி அணியாக இலக்கண நூல்கள்நவில்கின்றன குவலயானந்தம்-2 இவ்வணியை விரிவாகப் பேசுகிறது.

பஞ்சு பூத்த விரல் பதுமம் பவளம் பூத்த அடியாள் என்
நெஞ்சு பூத்த தாமரையின் நிலையம் பூத்தாள் நிறம்பூத்த
மஞ்சு பூத்த மழை அனைய குழலாள் கண்போல் மணிக் குவளாய்
நஞ்சு பூத்ததாம் அன்ன நகையால் என்னை நலிவாயோ(3739)

எனும் கம்பன் பாடலில் நான்கு அணிகள் இடம் பெற்றுள்ளன பூத்த எனும் ஒரே சொல் ஏழு முறை வந்து பின்வருநிலை அணி யாக அமைகிறது. மஞ்சு பூத்த மழை அனைய குழலாள், நஞ்சு பூத்ததாம் அன்ன நகை என உவமைகள் அமைந்து உவமை அணி யின் பாற்படுகிறது. கண்போல் மணிக் குவளாய் என்பதால் உவமிக்க வரும் பொருளான குவளையையும் உவமேயப் பொருளான கண்ணையும் மாற்றிக் கண்ணை உவமானமாகவும் குவளையை உவமேயமாகவும் அமைத்துள்ளதால் எதிர் நிலை ஆகின்றது. விடை வேண்டாதே அஃறிணைப் பொருளான குவளையிடம் நஞ்சு பூத்தது போன்ற நகையால் என்னைத் துன் புறுத்துவாயோ? அது அழகோ? தருமமோ? என வினவுவதால் வினவில் விடை யணியாகவும் வருகிறது.

இவ்வாறு நான்கு அணிகளை இணைத்துக் கற்பார் களி கொளும்படிச் சிறப்பாகப் பாடியுள்ளான் கவிஞன்.

பொருள் அணிகள் சிறப்புற அமைவதற்கு அவை அமைந் துள்ள இடம் அதன் தேவை, புலவனின் புலமைத்திறம் ஆகியன காரணமாய் அமைகின்றன. படைப்பாளனின் அற்றலைஅணியின் சிறப்பு உட்கொண்டிருப்பதால் கவிநயம் தருவதில் ஒன்றிலிருந்து மற்று ஒன்று வேறுபட்டு அமைகின்றது.

Koviloor Digital Library

இனி, சொல்லணிகளில் மடக்கின் வழியே சித்திரகவிகள் அமைவதால் இங்கு மடக்கிற்கு மட்டும் சான்றுகள் காண்போம்.

மடக்கு

எழுத்துகளது தொகுதி பிற எழுத்தானும் சொல்லானும், இடைவிடாது தாமே பெயர்ந்தும் வேறு பொருள் தருமாயின் அது மடக்கு என்பது பொது இலக்கணம்,

தனிப்பாடல்களைப் பெருமளவு பாடியுள்ள காளமேகப் புலவர் மடக்குப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

சங்கரர்க்கும் ஆறுதலை சண்முகர்க்கும் ஆறுதலை
ஐங்கரர்க்கும் மாறுதலை ஆனதே—சங்கைப்
பிடித்தோர்க்கும் மாறுதலை பித்தா நின் பாதம்
படித்தோர்க்கும் ஆறுதலை பார்

என்பது அவர் பாடிய தொரு எளிய பாடல்.[10]

இங்குச் சங்கரர்க்கும் ஆறுதலை என்பதில்.கங்கை ஆற்றினைக் கொண்டுள்ள தலை எனப் பொருள் ப்டுகிறது. சண்முகர்க்கும் ஆறுதலை என்பதில் எண்ணிக்கை அளவில் ஆறுதலைகளை உடையவன் ஆகிறான். ஐங்கரர்க்கும் மாறுதலை என்பதில், ஆறுதலை மகர மெய் பெற்று மாறுதலை என்றாகி வேறுபட்ட முகமான யானையின் தலையைக் கொண்டவன் என்பதாகிறது. இதுபோன்றே சங்கைப் பிடித்தோர்க்கும் மாறுதலை என்பதில் மகர ஒற்றுப் பெறுவதனுல் திருமால் தன் அவதாரங்களில் வராகம், மச்சம் என மாறுபட்ட தலைகள் பெற்றமை சுட்டப் படுகிறது. இறுதியில் உள்ள பித்தா நின்பாதம் படித்தோர்க்கும் ஆறுதலை பார் என்பது, சங்கரனே உன்பாதங்களில் சரண் அடைந்தோர்க்குப் பிறவிப் பயன் நீக்குவதாகிய ஆறுதலை நல்கு வதைப் பார் எனும் வேண்டுகோளாகிறது.

இங்ஙனம் ஆறுதலை எனும் எழுத்துகளின் தொகுதி மகர மெய்யாலும், தானே பெயர்ந்தும் வேறு பொருள் தந்து மடக்கு அணியின் பாற்படுகிறது,

மடக்கு, கலம்பக உறுப்புகளுள் ஒன்று என்பதும் இங்குச் சுட்டத் தக்கது. திருக்கண்ணபுரக் கலம்பகத்தினின்றும் அதற்கு ஒரு சான்று காண்போம்.

மண்ணில் நோய்ந்நதும் பன்னக மலையே
  மாந்த துங்கரும் பன்னக மலையே
நண்ணி உறைவது மத்த கிரியே
  நாடி உயர்ப்பது மத்திகிரியே

10. தனிப்பாடல் திரட்டு-பகுதி 1 கழக வெளியீடு, பாடல் எண் 421.

Koviloor Digital Library

பண்ணிற் பெற்றதும் மாறனற் பாவையே
மார்பு பெற்றதும் பானற் பாவையே
கன்ன புரத்தவன் பொற்பினாகமே
காக்கும் உரத்தது பொற்பினாகமே. (27)

இங்கு பன்னகமலை என்பது முதலில் திருவேங்கடமலை ஆகிய சேஷசைலத்தையும் இரண்டாவதாகக் கரும்பு அன்ன கமலையே என 'கரும்' :எனும் சொல் இணைவில் கரும்பு அன்ன இனிய இலக்குமியே என்றும் பொருள் பெறுகிறது. அத்திகிரி முதலில் காஞ்சியையும் பின் அத்திகிரி எனப் பிரிந்து திருமாலின் சக்கரத் தையும் குறிக்கிறது. இதுபோன்றே மாறன் நற்பாவை மாறனின் பாக்களையும், பால் தன் நற்பாவை என எழுத்து மாற்றத்தில் பாற்கடலில் தோன்றிய பிராட்டியாரையும் இயம்புகிறது. பொற்பினாகம் முதலில் பொற்பின் ஆகம் ஆகி பொன்போல் அழகிய மார்பினையும் பொற்பினாகம் என பரமசிவனின் வில்லையும் உணர்த்துகிறது.

இங்குபன்னகமலை எனும் எழுத்துகளின் தொகுதி கரும் எனும் சொல்லானும், மாறன் நற்பாவை, பகர மெய்யாலும், அத்திகிரியும், பொற்பின் நாகமும் தாமே பெயர்தலாலும் மடக்கைத் தோற்றுவிக்கின்றன.

கவிஞனின் வெளியீட்டு முறையினை இலக்கண நூலார் இரு நிலைகளாகப் பிரித்துள்ளனர். கவிஞன் பொருட்செறிவுக்கு முக்கியத்துவம் அளித்தால் அவற்றைப் பொருளணி ஆகவும், சொற்களுக்கும் எழுத்துகளுக்கும் முதன்மை அளித்துப் பொருள் சிறப்பினை இரண்டாவதாக்கின் சொல்லணி ஆகவும் கொண் டனர்.

அணிகளை இலக்கணநூலார் வெளியீட்டு முறையாகத்தான் கருதினர் என்பதற்கு நமக்குத் துணைபுரிவது செய்யுட்களின் இயல்பு பற்றிய விளக்கத்தினை அணி விளக்கத்தின் முன் கூறி யுள்ளமையும் (இதனைக் குண அணி என்றே இலக்கண விளக்கம் கூறுகிறது). இறுதியில் செய்யுட்களுக்குப் பொருந்தாத வழுவும் மலைவும் பற்றிய விளக்கம் அமைந்துள்ளமையும் ஆகும்.

இவ்வாறாயின் புலவர்களின் வெளியீட்டு முறைகள் அனைத் திற்கும் இலக்கணம் வரையறுக்கப்பட்டு விட்டதா? நமது புலவர் களின் புலமையைக் குறிப்பிட்ட இவ்வணி வகைகளுக்குள் அடக்கி விட முடியுமா? இவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய இலக்கண நூலார் கருத்து என்ன? என்பது போன்ற வினாக்கள் எழுதல் இயல்பு.

Koviloor Digital Library

வெளியிட்டு முறையினைக் கணிக்க எழுந்த ஒரு முயற்சிதான் இவ்வணி இலக்கணம். எழுத்து, சொல், பொருள், யாப்பு போன்று முழுமையான நிலையில் வரையறுக்கப்படவில்லை. வரையறுக்கப் பட்டுள்ளவற்றிலும் குழப்பங்களும் ஐயப்பாடுகளும் உள. தமிழ் இலக்கியப்பரப்புள் ஆழ்ந்து செல்லுங்கால் இன்னும்பல புதிய அணிகள் தோன்றப் பெருமளவு வாய்ப்பு உள்ளது.

சான்றாகச் சிலம்பில் இளங்கோ படைக்கும் மண்ணக மடந் தையைக் காட்டலாம்.[10] காப்பியம் முழுமையிலும் மண்ணக மடந்தையை இளங்கோ படைக்கும் இடங்களை எல்லாம் தொகுத்து நோக்குங்கால், அவருக்கெனத் தனித்ததோர் வருண னைப் பாங்கு நிலவியது தெளிவுபடுகின்றது. மண்ணக மடந் தையின் தோற்றம் முதலில் அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையில் இடம்பெறுகின்றது.

விரிகதிர் பரப்பி உலகம் முழுதாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன்
அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்
திங்களம் செல்வன் யாண்டுளன் கொல் (4:1-4)

கணவனையும் பிரிந்து மைந்தனையும் காணாது கலங்கும் மண்ணக மடந்தையை அடிகள், கண்ணகியையே எண்ணிப் படைத்தாரோ என்று எண்ணும் அளவிற்குக் கலக்கம் என்னும் மெய்ப்பாடு இருவருக்கும் பொதுவாகிறது. அடுத்த காதையின் தொடக்க அடிகளில்,

அலைநீராடை மலை முலையாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தல்
தண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருள் படாஅம் போகநீக்கி
உதைய மால்வரை உச்சித் தோன்றி (5:1-5)

எனக் கதிரவனைப் போன்று கோவலனும் கண்ணகியின் பிரிவாகிய இருட் போர்வையை நீக்கி வாழ்வாகிய ஒளியைத் தர வருவான் என்பது சுட்டப்படுகிறது.

புறஞ்சேரி இறுத்த காதையில் முன்பு வேனிற்காலத்தில் வாழ்ந்த கண்ணகி வாழ்வையும் தற்போது வேனிற்காலத்தில் கண்ணகி வாழ்வையும் கண்டு பெருமூச்சுவிட்டு மயங்குகிறாள் மண்ணக மடந்தை. கோவலன் பிரிந்த வேனிற்காலத்தில் கண்ணகி வேனிற்காலத்திற்குரிய அணிகள், மலர்கள் இவையின்றி இருந்த

10. சிலம்பின் சிலபரல்கள், டாக்டர். ச.வே. சுப்பிரமணியன், சிலம்பில்— மண்ணக மடந்தை கட்டுரை.

Koviloor Digital Library

நிலையும் இப்போது, கணவனுடன் இருந்தாலும் அதற்குரிய சூழல் இன்மையும் உணர்ந்து பார்மகள் அயாவுயிர்த்து அடங்குகின்றாள் (13:19-29).

இவ்வாறு மயங்கிக்கிடந்த மண்மடந்தையைத் தண்ணீர், தெளித்து எழுப்ப முயல்கிறாள் கண்ணகி (16:40-41). கற்பின் கொழுந்தாகக் கனிந்து நிற்கும் துயர எரியைக்கண்டு மண்ணக மடந்தை அவலமுறுகிறாள் (16:215-217). இம்மண்மகள் மறுபடியும் மகிழ்ந்தாளா என்ற கேள்வியை நம்மிடம் தோற்றுவிக்கும் ஆசிரியர், சேர அரசனால் மகிழ்ந்தாள் என்று குறிப்பால் 'மண்களி நெடுவேல் மன்னவன்' (25:64) என்பதால் உணர்த்துகிறார்.

இவ்வாறு தொடர்நிலைச் செய்யுளில் ஒரே பாத்திரத்திற்குத் தகுந்தாற்போல், ஒன்றினையே பின்னணியாகப் படைத்துள்ள இலக்கிய வெளியீட்டை எவ்அணியின் பாற்படுத்துவது?.

கம்பனில் இராமனைத் தசரதனின் உயிராக ஆரம்பம் முதல் இறுதிவரை உவமித்து வருதலைக் கண்டு மகிழலாம் (324, 1050) 1281, 1285), இதற்கும் அணிவிளக்கம் காணமுடியவில்லை. தொடர்உவமையாக இதனை நாம் கொள்ளலாம். இது போன்ற பல அமைப்புகளைச் சான்றாகக் காட்டலாம்.

இவற்றை நோக்கும்போது, தனிநிலையில் ஒரு பாட்டினை அல்லது ஒரு பகுதியை மட்டுமே கொண்டு அணிநூலார் வெளியீட்டை ஆய்ந்தனர் என்றும்முழுமைநிலையில் பரந்த அளவினைக் காண முயற்சிக்கவில்லையோ என்ற எண்ணமும் எழுகிறது. எனவே தமிழில் அணியிலக்கணம் இன்னும் முதிர்ச்சிபெற வேண்டிய நிலையிலுள்ளது என்ற முடிவிற்கே வரவேண்டியதாகிறது.

Koviloor Digital Library

முந்நூல்களின் அறிமுகம்

தமிழ் இலக்கண நூல்கள் பல பெயரளவில் தான் அறியப் பட்டுள்ளன. பல பெயரளவில் கூட அறிய முடியாமல் இருக் கின்றன. அவைபற்றிய தெளிந்த அறிவிற்கு அந்நூல்கள் வழக் கிறந்தமையும் அச்சில் பதிக்கப்படாமையும் காரணங்களாகும். அத்தகைய நூல்களை அச்சில் கொண்டுவந்து வெளி உலகம் காணும்படி செய்யவேண்டும் என்ற நோக்கில் இங்கு மூன்று நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவை அணியிலக்கண நூல்கள் என்பதாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன என்பதாலும் ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் சந்திராலோகம் குவலயாநந்தம் -2 என்பன அச்சில் வந்தவை. குவலயானந்தம்-1 ஏட்டிலக்கணமாகவே இருந்து முதல் முறையாகத் தற்போது பதிப்பிக்கப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது. இந்நூல்கள் பற்றிய சிறிய விளக்கம் அறிமுகமாக இங்குத் தரப்படுகிறது.

குவலயானந்தம்-1

முதன் முறையாக வெளிவருவதுடன் பிற அணி இலக்கண நூல்களினின்றும் தனித்து நிற்கும் சிறப்பினையும் உடையது இந் நூல்.

இதன் ஆசிரியர் மாணிக்கவாசகர் என்பது அதன் பாயிரத்தா லும் சிறப்புப் பாயிரத்தாலும் அறியப்படுகிறது. இவர் சைவர்.

சிறப்புப்பாயிரத்தில் மண்டலம் சொல் வரகுண பாண்டியன், வடமொழியில் வழங்கும் அலங்கார நூலைத் தமிழில் தருமாறு வேண்ட, பாடியதாகக் குறிக்கப்படுகிறது. இப்பாண்டியன் யார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே காலம் பற்றிய தெளிந்த வரையறை செய்ய இயலவில்லை.

Koviloor Digital Library

துதிவுறு வடநூல் சொல் அணி ஆகி
மருவிய மீமாங்கிசைக் கடல் அமுதத்து
அருள் பொருள் ஆகி அருந்தவ ஞானக்
குருபரன் அனைய குறுமுனிக் குரிசில்
இருநிலம் அதனில் இயல் தமிழான்
தொன்னூல் செய்த சிவ வியாகரணம்
முன்னூல் பயனை முழுதும் எடுத்துப்
பின்னூல் ஆகப் பிறங்கு அலங்கார
நன்னூல் பெயரும் குவலயானந்தம்

என வரும் சிறப்புப் பாயிரத்தால் வடமொழி மீமாங்கிசையை அகத்தியர் சிவவியாகரணம் என மொழிபெயர்த்த நூலே இந் நூலின் முதல்நூல் எனத் தெரிகிறது.

இந்நூலாசிரியர் குறிப்பிடும் சிவ வியாகரணம் பற்றிய பிற செய்திகள் தெரியவில்லை. உரையின் மிகப் பல இடங்களில் நூற்பாக்கள் கொடுத்து அவற்றை, 'என்றார் அகத்தியனார் ஆதலின்' என வரக் காண்கின்றோம். சான்றாக, பொருளே பதார்த்தம் திரவியம் என்பது இரு திணையானும் வரு பெயர், எனப் பெறும்—என்றார் அகத்தியனாரும் எனக் கண்டு கொள்க (உறுப்பியல்.9); 'கானலை நீரெனக் கண்டு நாடுதல் மயக்கம், என்றார் அகத்தியனாரும் (அணியியல், 22); 'முன்னும் சிவ வியா கரணத்தில் அறிஞோர் புகழ்ச்சி ஆறு விதமென அகத்தியனார் சுருக்கிச் சூத்திரம் காட்டப் பெற்றமையானும் இரண்டு புகழ்ச்சி ஆறுவிதமாக அகத்தியனாரால் காட்டப்பெற்ற மதமே பெருமை ஆகச் சொன்னபடியினால் குற்றம் ஆகாது எனக் கண்டு கொள்க, (அணியியல். 28) போன்றவற்றைக் காணலாம்.

தொன்னூல் விளக்கம் போல் இந்நூலுக்கும் நூலாசிரியரே உரையாசிரியர் என்பதைச் சிறப்புப் பாயிரத்தில் வரும் 'நன்னூல் பெயரும் குவலயானந்தம் எனவும் வழங்க இலக்கியம் காட்டி அனைவரும் உணர ஆக்கினன்' என்பதால் உணரலாம். இதனை அப்பாயிரத்தின் உரையில் 'குருமுனிக் குரிசிலானவன் பூமியின் கண்ணிற்றென நூலாற் செய்கின்ற சிவ வியாகரணம் என்கின்ற முன்னூலின் பயனைத் திரட்டி எடுத்து வழிநூலாக இலக்கணச் சூத்திரமும் இலக்கியச் செய்யுளும் விளக்கமாக வர வல்லதாகி மாணிக்கவாசக சுவாமியாரால் செய்யப்பெற்ற குவலயானந்தம் என்னும் அலங்கார நூல் எனக் கண்டுகொள்க' என வரும் சொற்றொடர் தெளிவாக்கியுள்ளது.

Koviloor Digital Library

இந்நூல் மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. உறுப்பியல், அணியியல், சித்திரவியல் எனும் அவைமுறையே 150, 120, 29 நூற்பாக்களைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் சிவனை வாழ்த்தும் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

இந்நூல் முடிவடைந்த ஒன்றாகத் தெரியவில்லை. சித்திரவியலின் 11 ஆம் நூற்பா உரையில், இப்பெற்றியாவது சித்திரகவி எனப்பெறும். இவ்வகை விகற்பமெல்லா மேற்சொல்லுதும்' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வியலின் முதல் நூற்பாவில் கூறியுள்ள பொருள்களை ஒவ்வொன்றாக விளக்கிக் கொண்டு வருகையில் அகட கடனம் என்பதன் விளக்கத்துடன் நூல் நின்றுள்ளது. எனவே மேற்கண்ட முடிவிற்கு வரவேண்டியதாகிறது.

உறுப்பியலில் அலங்காரங்களுக்கு உறுப்பாவன சொல் ஆகும் என்ற கருத்தால் சொல் இலக்கணம் சுருங்கச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வியலின் முதல் நூற்பா உரையுள் 'மேல் அலங்காரத்து வேண்டி வரப் பெற்ற சொல் அனைத்தும் அலங்காரத்து உறுப்பு என்று பெயரிட்டுத் தொகுத்து உரைத்தவாறு எனின் அலங்காரத்து உறுப்பாவதுவே சொல் என்றமையால் அலங்காரத்து உறுப்பு சொல்லிலக்கணம் எனக் கண்டு கொள்க. சொல் எனினும் சந்தம் எனினும் ஒக்கும்', என்று கூறப்பட்டுள்ளது. இதனின்றும் அணிகளுக்கு அடிப்படை ஆக அமைவது சொல் என்பது இந்நூலாசிரியர் கருத்து எனப்புலப்படும்.

சொல்லின் இறுதியில் இலக்கியப் பொருள் பற்றியும் யாப்புப் பற்றியும் பேசுகிறார். 'கருத்து எனப்பெறுவதை தொகை வகை விரியால் சொல்லிய பயனைத்தோற்றுவிப்பதே பொருள்' (உறுப். 113) என்று பொருளுக்கு விளக்கம் தருகிறார். 'பொருள் என வல்லோர் புகல்வது கருத்து, (உறுப். 112) என்பது நூலாசிரியர் கொள்கை. தொகை, வகை, விரி பற்றிய விளக்கங்களையும் உடன் தந்துள்ளார்.

யாப்பினைப் பொது, சிறப்பு என இருபாலாகப் பிரித்து அணியுடன் தொடர்பு படுத்துகிறார். பொருளும் அலங்காரமும் யாப்புப் பொது என்பதை,

> பொருள் அலங்காரம் எனும் இருபாலும்
> யாப்புப் பொது என அறைந்தனர் புலவர் (உறுப். 138)

என்றும், யாப்புச் சிறப்பினை,

> அலங்காரத்தின் அலங்காரத் தொனி
> அங்கம் குறிப்பு யாப்புச் சிறப்பே (உறுப்.139)

Koviloor Digital Library

எனவும் கூறுகிறார். இதற்கு ஒரு வகையாகிய பொருளாயினும் அலங்காரமாயினும் பொருந்தி யாப்புச் செய்யப்பெறின் அவற்றுள் சிறப்பாகிய நால் வகை அலங்காரமும் தொனி ஆகி வரப்பெறும் என்று விளக்கம் தருகிறார்.

இலக்கண மரபின் நின்றும் மாறுபடும் விளக்கத்தைப் பொருள், யாப்பிற்கு அளித்துள்ளார்.

அணியியலில் 87 வகையான அணிகள் பற்றிய விளக்கம் தரப் பட்டுள்ளது. இலக்கியப் புலமைக்கு அணி அடிப்படை என்பதனை 'வளம் பெறு புலமை வரும் அணி உரைத்தல்' (அணி. 2) என்பதால் உணர்த்துகிறார்.

சித்திரவியலில் நால்வகைப் புலமை, நால்வகைக் கவிதை,எண் கணப் பொருத்தம், சங்கை விகற்பம், பத்துக் குற்றம், அகட கடனம்,எழுவகை மதம், முப்பத்திருவகை உத்தி முதலியவற்றை விளக்குகிறார்,

'சத்தம், தர்க்கம், மீமாங்கிசை என்கின்ற மூவகை நூலும் காட்ட வேண்டியதன் பொருட்டு குவலயானந்தம் எனப் பெயரிட்டவாறு' என்று பெயர்க்காரணத்தை உறுப்பியல்முதல் சூத்திரஉரையால் அறிய முடிகின்றது.

உறுப்பியல் சத்தமாகவும், அணியியல் என்பது மீமாங்கிசையாகவும் சித்திரவியல் என்பது தர்க்கமாகவும் வரப்பெறும் எனக் கண்டு கொள்க என்றும் விளக்கம் அதனுள் காணப்படுகிறது.

உறுப்பியலிலும் சித்திரவியலிலும் முதற் நூற்பாவில் அவ்வியலில் கூற இருப்பன பற்றித் தொகுத்துரைத்துள்ளமையைக் காணலாம். அணியியலில் இத்தகையதொரு நூற்பா இல்லை. பொருளணி, சொல்லணி எனும் பாகுபாடும் சுட்டப்படவில்லை.

இனி இந்நூலின் சிறப்பியல்புகளாகக் காண்பவற்றுள் ஒரு சிலவற்றினைக் காணலாம்.

இலக்கண இலக்கியத்திற்கு உள்ள தொடர்பினை அழகாக 'இலக்கணம் கருத்து இலக்கியம் அதில் நெறி' (உறுப்.111) என்று கூறுகிறார்.

உறுப்பியலின் 15-ஆம் நூற்பா உரையில், 'இன்று நூல் செய்வோன் முன்னோர் செய்த நூலின் பொருள் எடுத்துக்காட்ட வேண்டி என்னையோ எனின் முன்னோர் நூலின் மொழிப் பொருள் காட்டிப் பின்னூற் பயனைப் பிரிப்பது பெருமை என்பவாகலின்' என்று இலக்கியம் பற்றிய தன் எண்ணத்தைக் காட்டியுள்ளார்.

Koviloor Digital Library

உவமேய, உவமானப் பொருள்களை 'ஒப்பனை கொள்வது உபமேயப்பொருள் ஒப்பனை ஆவது உபமானப் பொருள்' (உறுப். 109) என்று விளக்கி உள்ளார்.

சொல்லியலை அணியின் உறுப்பு ஆகக் கூறி அதன் விளக்கத்தினை இந்நூல் தவிர வேறு எந்த அணியிலக்கணமும் அளிக்கவில்லை.

பிற அணிகளுக்கு உவமையே அடிப்படை என்பதனை 'அலங்காரப் பொருள் ஆகிய கிளைகள் அணிந்திடும் மூலம் உவமை அது ஆகும்' (அணி.4) என உணர்த்தி உள்ளார்.

விரித்தல், தொகுத்தல் உவமைகள் பற்றிப் பேசும்பொழுது பிற அணி நூல்கள் உவமானம், உவமேயம், உவமை உருபு, பொதுத்தன்மை எனும் நான்கினையும் உட்கொண்டு விதி அமைக்க இவர் உவம உருபுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து உவம உருபு வெளிப்படவரின் விரித்தல் என்றும், ஒன்றாதுதொக்கி வரல் தொகை என்றும் விதியமைக்கிறார்.

உவம உருபுகளுள் சிலவற்றை உவமையின் வசனமாகக் கூறியுள்ளார்.

இதுபோன்ற விளக்க வேறுபாடுகளைப் பல அணிகளில் காணலாம். தீபகம், விபாவனை முதலியற்றைச் சான்றாக்கலாம்.

அணிகளுக்கு வடமொழிப் பெயரையே சூட்டி உள்ளார். நிதர்சனம், துல்லிய யோக்தை, வியதிரேகம், பரிகாரம், பரிகாராங்குரம் எனப் பலவாக அவை உள.

பிற வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறியுள்ள அணியை நிந்தையில் துதி, துதிவினில் நிந்தை என இரு அணிகளாகக் கூறியுள்ளார்.

தகுதி இன்மை, துன்பம் ஆகிய இரு அணியின் இயல்புகளையும் விடம் எனும் ஒரே அணி வகைக்குள் அடக்கி உள்ளார்.

தற்குறிப்பு (புகழ்ச்சி), தன்மை (சுபாவகரு) ஆகியவற்றில் பிற இலக்கணங்கள் கூறுபவற்றுள் ஒருபகுதி மட்டுமே இந்நூலில் இலக்கணமாய் அமைந்துள்ளது.

இந்நூல் கூறும் மறைத்துக் காட்டல் அணி தொல்காப்பியம், மாறனலங்காரம் கூறும் உள்ளுறையையும், கற்பிசைப் புனைவு இல்பொருள் உவமையையும் நினைவூட்டுகின்றவ.

காவியப்பொருள் ஒழி என்னும் அணிக்குத் தரும் விளக்கம் தெளிவாக இல்லை. ஆயம் எனும் மற்றொரு அணியின் (105)விளக்கம் கையெழுத்துப் பிரதியில் விடுபட்டுள்ளது. அதன் உரை விளக்

Koviloor Digital Library

கத்தினின்றும் தெளிவு கிடைக்கவில்லை. அப்பகுதி அவ்வாறே நூலுள் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர், கடல், மலை, வான்வெளி ஆகியவற்றை உவமானம் ஆகக் கொள்ளும் பாடல்களைத் தனித்தனியே நிறைவுப் புனைதல், குறைவுப் புனைதல், வளர்ச்சிப் புனைதல் எனத் தனித்தனி அணிகளாகக் கொள்வது ஏன் என்ற வினா இவண் எழுகிறது. இவை பெரும்பான்மை பயின்றுவரல் நோக்கியே தனித்து அமைத்திருக்கலாம்.

இவ்வாறே கற்பனைப்பொருளைப் படைத்து, அதற்குக் கற்பனைப்பொருளை உவமை ஆக்கல் அருகிக் காணப்படுவதாலும், கற்பனைக்கு மேன்மை அளிப்பதாக அமைவதாலும் அதனைத் தனி அணியாகக் கொண்டனர் போலும்.

இவ்வாசிரியரின் தனிச் சிறப்புகளுள் ஒன்றாக மிளிர்வது எழிற்பொருள் உவமையாகும். எழிலாய் இருக்கின்ற பொருள்களை உவமைப்படுத்தி அல்லது இயல்பாய்க் கூறுவது இவ்வணி ஆகும். இது இயற்கை வருணனையின் பாற்படும் என்பதில் ஐயமில்லை. வருணனையையும் அணியாக்கி இலக்கியத்தில் முக்கியத்துவம்பெற்றுள்ள வருணனைக்குச் சிறப்பு அளித்துள்ளார். இவ்வணியினை வேறு எந்த அணி இலக்கணமும் குறிப்பிடவில்லை என்பது சுட்டத்தக்கது.

இந்நூலின் மற்றொரு சிறப்பு, குறிப்பிட்ட ஒரு பொருளோடு இணைந்து வரும் பொருள் பொதிந்த சொல் அல்லது சொற்களான அடைகளுக்குச் சிறப்பிடம் அளித்து அவற்றையும் இரு அணிகளாக்கி உள்ளமையே. அவை பரிகாரம், பரிகாராங்குரம், என்பன.

இங்கு இதன் குறைபாடு ஒன்றும் சுட்டத்தக்கது. உருவகம் அதிகம் எனும் இரு அணிகளை அவற்றின் முதல் பகுதியை ஓரிடத்திலும் (15, 73) அடுத்தபகுதியை வேறு சில அணிகளை விளக்கி விட்டும் தொடர்ந்துள்ளார். (42, 77) ஆசிரியர் இவ்வாறு அமைப்பதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை.

அணியியல் 28-ஆம் நூற்பா உரையில் 'இந்நூல் அருமறைக் குரிசில் ஆகிய குறுமுனிக் கடவுளால் செய்யப்பெற்ற சிவ வியாகரணம் என்கின்ற நூலை முன்னூலாகக் கொண்டு அதன் கருத்தாகி வருகின்ற தந்திரவுத்தியைத் தேடி வழிநூலாகிய அலங்காரம் செய்யப் பெற்றமையானும் அருக தேவதை மதம் புனைந்தோரால் செய்யப்பெற்ற தந்திரக்கருத்து அனைத்தும் கண்டித்துப் பரமதகண்டனமெனும் சிறப்பாகப் பெற்றமையானும்,என்று காணப்படுகிறது. இங்கு ஆசிரியர் குறிப்பிடும் சமண நூல் எது என்

Koviloor Digital Library

பது தெரியவில்லை. ஒருக்கால் உரையாசிரியர்கள் குறிப்பிடும் அணிநூலாய் இருக்கலாம்.

இந்நூல் குறிப்பிடும் 87 வகை அணிகளுள் முற்பட்ட நூல்கள் கூறுவன 30 அணிகளே. ஏனைய இவர் புதியதாகக் கூறியுள்ளன ஆகும். முதனூல் வடமொழி நூலாதலின் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். இவர் புதியனவாகக் கூறுபவற்றுள் ஏழினை மட்டுமே பின்வந்த சந்திராலோகமும் குவலயானந்தமும் ஏற்றுக் கொண்டுள்ளன.

கடலை, மலையை, வான்வெளியை உவமித்துக் கூறலைக் கூடத் தனித்தனி அணிகளாக இவர் கூறி இருப்பினும் சுமார் 50 அணிகளைத் தமிழ் இலக்கண வரலாற்றில் இவர் மட்டுமே புதியனவாகக் கூறுகிறார் என்ற பெருமையை இந்நூல் பெறுகின்றது.

பிற அணி நூல்கள் கூறியுள்ள பல அணிகளை இந்நூல் விட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சான்றாக நுட்பம், இலேசம், வேற்றுப் பொருள் வைப்பு, குறிப்பு நவிற்சி, வீறுகோள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றைவிட்டுள்ளமை சிந்தனைக்குரியதே.

இந்நூல் தரும் சித்திர கவிகள் எண்ணிக்கை 16 ஆகும். பாத மயக்கு, பாவினம் புணர்ப்பு, விகற்பநடை எனும் மூன்றைப் புதிதாகத் தந்துள்ளார். சித்திரகவிகள் பற்றிய ஆசிரியரின் விளக்கத்தை இழந்துள்ளமையால் இவற்றின் பெருமையை உணரமுடியவில்லை.

இனி இந்நூல் புதிதாகக் கூறும் அணிகள் சிலவற்றினை இலக்கியப் பகுதிகளுடன் இணைத்துச் சுவைக்கலாம்.

வியோகக் கருத்து

ஒரு குணம் இன்மையால் ஒரு பொருளுக்கு அழகு இல்லை என்று கூறுவது இவ்வணி.

புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்து உறுப்பு அன்பு இல் அவர்க்கு (79)

எனும் குறட் பாவை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

உடம்பின் அக உறுப்பு ஆகிய அன்பு இல்லாதவர் களுக்குப் புறத்து உறுப்புகள் எல்லாம் என்ன செய்யும்? அவற்றால் பயன் இல்லை என்பதே இக்குறள் கூறும் கருத்து.

இங்கே அன்பாகிய குணம் இன்மையால் உடம்பாகிய பொருள் சோபனமாகிய வாழ்த்தோ அழகோ அதனால் பயன் இன்மையால் பெறுவதில்லை எனப் பெறுவதால்

Koviloor Digital Library

பொருந்திவரக் காணலாம். அன்பின் பெருமையை எதிர் நிலையில் இவ்வணியின் மூலம் அழகாக விளக்கி உள்ளார்.

ஒரு பொருள் இல்லாமையால் ஒரு பொருள் சிறப்புற்றதாகச் சொல்லுதலும் இவ்வணியின் பாற்படும்.

கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லை தம் சிந்தையின் செம்மையால்
ஆற்றல் நல் அறம் அல்லது இலாமையால்
ஏற்றம் அல்லது இழிதகவு இல்லையே (70)

எனும் பாடல் இவ்வணி ஆம்.

கோசல நாட்டின் வளம் கூறப்புகுந்த புலவர் இவ்வாறு பாடுகிறார். அந்நாட்டில் ஒரு குற்றம் கூட இல்லாமையினால் அங்கே கூற்றுவனுக்கும் வேலை இல்லாமல் இறப்பு என்ற அமங்கலம் இன்றி மங்கலமே நிகழ்கிறது. சிந்தையின் சிறப்பினால் அங்கு சீற்றம் கொள்வார் இல்லை. நல்ல அறங்களை மட்டுமே செய்வார் இன்றி மற்ற தீயவற்றைச் செய்வார் இன்மையால் அங்கு இழிதகவு என்பது இல்லை ஏற்றமே உண்டு என்பது இப்பாடற் பொருள்.

இங்கு குற்றம் இன்மையால் கூற்றுவன் நுழையாத மேன்மையும், தீ அறம் இன்மையால் ஏற்றமே அடையும் சிறப்பினையும் கம்பன் படைத்த கோசல நாட்டில் நாம் காண்பது இவ்வணிக்கும் பொருத்தமுற இருக்கக் காணலாம்.

கூற்றுவனுக்கு வேலை இல்லை என்பதால் கோசலத்தில் பிறந்த ஒருவரும் இறப்பினை அடைவதே இல்லையாயின், அவர்களின் முடிவு என்ன என்ற கேள்வி பிறக்கக் கூடும். அவர்கள் காலம் வந்ததும் இறப்பு என்பதின்றிப் பரமபதத்தினை நேரிடையாக அடையும் சிறப்பினைப் பெறுகின்றனர் என்பதே கருத்தாம்.

புற்புதம்

ஒரு காரணத்தினால் பல காரியங்கள் தோன்றலை இவ்வணி குறிக்கிறது.

வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டு ஒருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்க இக்காசினியில்
அல்லார் பொழில் தில்லை அம்பல வாணர்க்கு ஓர் அன்னை பிதா
இல்லாத தாழ்வு அல்லவோ இங்ஙனே எளிதானதுவே* (154)

*தனிப்பாடல் திரட்டு பகுதி-1. கழக வெளியீடு,

Koviloor Digital Library

எனும் காளமேகப் புலவரின் பாடல் இவ்வணியை உட்கொண் டிருக்கக் காணலாம்.

இருள் நிறைந்த பொழில் சூழ்ந்த தில்லை அம்பலவாணரை அர்ச்சுனன் வில்லால் அடிக்கவும், கண்ணப்ப நாயனார் செருப் பால் உதைக்கவும், கோபம் கொண்டு சாக்கிய நாயனார் கல்லால் எறியவும், பாண்டியன் பிரம்பால் அடிக்கவும் செய்ததற்குக் காரணம் அவருக்கு அன்னையும் பிதாவும் இல்லாத தாழ்வுதான்: அதுவே அவரை இங்ஙனம் பலரால் துன்பப்படும் எளிதான வராக்கி விட்டது என்பது இப்பாடலின் கருத்து.

இங்கு ஆதிநாயகனுக்குப் பெற்றோர் என்று யாரும் இல்லை என்கின்ற ஒரே காரணத்தினால் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடந்தன என்று நயம்பட நவிலும் புலவர், தாம் கூற விரும்பிய அவிர் சடை நாயகனின் திருவிளையாடல்களைப் பல காரியங்களாகச் செப்பி நம்மைக் களிப்படைய வைக்கிறார்.

இறந்தது விலக்கல்

தான் உணர்ந்து கூறிய ஒரு கருத்திற்குத் தானே தடை கண்டு, அத்தடைக்குப் பின் விடையும் கூறல் இறந்தது விலக்கலாம்.

ஈசன் பசுவாகி ஏமன் இளங் கன்றாகி
விசு புகழ் ஆருரின் வீதி வந்தார் அம்மானை
விசு புகழ் ஆருரின் வீதி வந்தார் ஆமாகில்
காசளவு பால்தான் கறக்குமோ அம்மானை
கன்றை உதைகாலி கற வாதே அம்மானை

சிவபெருமான் பசுவாகவும், எமன் இளைய கன்றாகவும் புகழ் சிறந்த திருவாரூரின் வீதி வந்தார் அம்மானை. அவ்வாறு வலம். வந்தால் அப்பசு சிறிதளவாவது பால் கறக்குமோ அம்மானை கன்றினை உதைக்கும், பால் சுரப்பது வற்றிய பசு,பால் கறக்குமோ அம்மானை என்பது இதன் பொருள்.

திருவாரூரில் மனுநீதிச் சோழனைச்சோதனை செய்வதற்காக, ஈசனார் பசுவாகவும் எமன் கன்றாகவும் வீதிவிடங்கன் திருவீதி உலா வருங்கால் இடையே வந்த கதையினையும், மார்க்கண்டேய ருக்காக எமனைச் சிவபெருமான் உதைத்த புராணத்தையும் இப் பாடலில் இரட்டையர்கள் சுட்டி உள்ளனர்.

இங்கே சிவனும் எமனும் பசுவாகவும் கன்றாகவும் தோன்றி வீதியில் வந்தது புலவர்கள் உணர்ந்து கூறியது. அதில் பசு தன் கன்றினுக்குச் சிறிதளவாவது பால் தருமோ என வினவியது அவர்களே ஏற்படுத்திய தடை. இத்தடைக்குக் கன்றினை உதைக்

Koviloor Digital Library

கும் பால் சுரப்பது வற்றிய பசு பால்கறக்குமோ, கறக்காது என்பது விடைஎன இவ்வணி இவண் சிறப்புற்றுள்ளது.

இறைவனின் இருவேறுபட்ட திருவிளையாடல்களிடையே ஒற்றுமை தோன்றும் வண்ணம் இணைத்துப் பாடி உள்ளமை இப்பாடற் சிறப்பாம்.

வியாசத்துதி

ஒரு பொருளை அதன் கோட்பொருள் (உறுப்.43) (கொள் பொருள்) அல்லது புனைபொருள் இவற்றால் போற்றுதல் செய்யின் இவ்வணி ஆகும்.

இதற்குச் சிறந்த சான்றினை இளங்கோ தருகிறார். கண்ணகியைப் புகழ்ந்து உரைக்கும் கோவலன்,

மாயிரும் பீலி மணிநிற மஞ்ஞை நின்
சாயற்கு இடைந்து தண் கான் அடையவும்
அன்ன நன்னுதல் மென்னடைக்கு அழிந்து
நன்னீர்ப் பண்ணை நளிமலர் செறியவும், (2:53-56)

என்று கூறுகிறான்.

அழகிய நெற்றியினை உடைய கண்ணகியே, மயிற் குலம் நின் சாயற்கு எதிர்ந்துவந்து பொறாது தோற்றுத் தண்ணிய காட்டிடத்தே போய் ஒடுங்கியது. அன்னமானது உன்மென் நடையினைக் கண்டு எதிர்த்துவந்து தோற்றுத் தனது நடை அழிந்து நல்ல நீர் பொருந்திய பண்ணையில் செறிந்த மலர்களிடையே புகுந்து மறைந்தன என்பது இப்பாடல் தரும் பொருள்.

இங்கு கோவலன், பொருள் ஆகிய கண்ணகியின் சாயல், நடை எனும் புனை பொருட்களைப் போற்றி அமைத்துள்ளமையின் இவ்வணியின் பாற்படுகிறது.

காரியம் கொள்ளல்

ஒரு காரியம் யாரால் நிகழ்த்தப்பட்டாலும் பரவாயில்லை. அக்காரியம் நிகழ்தலே வேண்டியது என்ற கருத்தினைக் கொண்டது இவ்வணி.

அரக்கனே ஆக வேறு ஓர் அமரனே ஆக அன்றிக்
குரக்கினத்து ஒருவனே தான் ஆகுக கொடுமை ஆக
இரக்கமே ஆக வந்து இங்கு எம்பிரான் நாமம் சொல்லி
உருக்கினன் உணர்வை தந்தான் உயிர் இதன் உதவி
உண்டோ (5254)

Koviloor Digital Library

இங்குத் தூதுவந்த அநுமனை மிதிலைச்செல்வி அவன் அரக்கனாய் இருப்பினும் சரி, அமரனாய் அமைந்தாலும் சரி, குரக்கினத்தவனாகவே இருப்பினும் சரி, நல்லவனோ, கொடிய வனோ யாராயினும் இங்கு வந்து என் தலைவனின் நாமம் சொல்லி உணர்வினை உருக்கி உயிர் தருதலாகிய காரியம் செய்தான். இதனை விடப் பெரிய உதவி வேறு இருக்க முடியுமோ? எனப் பேசுகிறாள்.

மாற்றான் சிறையாலும், மணவாளன் பிரிவாலும் சிந்தை நைந்து செய்வகை அறியாது தவிக்கும் சீதைக்கு அரக்கர் கோனின் கொடுமையினின்றும் விடுபட உயிர்விடுதலே ஏற்புடைத் தாகத் தோன்ற அதற்கு முயல்கிறாள். அஞ்ஞான்று அவள் வாழ்வு மீண்டும் மலரப் போவதற்கு அறிகுறியாக, நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றுகிறான் வாயு மைந்தன், வாழ்வின் முடிவுநாடிச் சென்றவளை வாழ்க்கை அவளைத் தேடிவந்து கொண்டிருப்பதை அறிகையில் எவ்வளவுஇன்பம்ஏற்படும்? அவள் கொண்ட அந்த எல்லையற்ற இன்பத்தின்அளவினை நாம் எப்படி உணர்வது? நாம் அதனை உணர்ந்தால்தானே கவிதை முழுமை பெறும்! கவிஞனின் புலமையும்பெருமைபெறும். இங்கேசீதையின் சொற்களாலேயே அவள்கொண்ட இன்பத்தின் எல்லையைக் கோடிட்டுக் காட்டி விடுகிறான் கம்பன். அவன் யாராயிருப்பினும் எப்படிப்பட்டவனாய் இருப்பினும் தனக்கு உயிர் தந்தவனாகச் சீதை உரைப்பதால் நாமும் அவள் இன்பத்தின் முழுமையை எளிதாக உய்த்துணர்ந்து கொள்கிறோம். புலவனின் புலமையைப் பாராட்டுகிறோம்.

வியாச நிந்தை

ஒரு பொருளை அதன் கோட்பொருள் அல்லது புனை பொருளால் வெறுத்தல் செய்யின் அது வியாச நிந்தையாம்; வியாசத்துதியின் எதிர்நிலை இவ்வணி.

சிலம்பின் கானல் வரி அகப்பாடல்களால் நிறைந்தது. அப் பாடல்களில் ஒன்று.

ஓடுந்திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து உயிர் கொல்வைமன் நீயும்
பீடும் பிறர் எவ்வம் பாராய் முலை சுமந்து
வாடும் சிறுமென் மருங்கு இழவல் கண்டாய் (19)

களவுக் காலத்தில் தலைவியை நினைக்கும் போதெல்லாம் கண்டு பேசி இன்புறுதலை விரும்பும் தலைவனுக்கு அஃது இயலா மையின் அவனது ஆற்றாமை 'நங்கையே உன் தமையன்மார் நீரில் இயங்குகின்ற படகினைக் கருவியாகக் கொண்டு அங்கு வாழும்

Koviloor Digital Library

ALAGAPPA ... LIBRARY KARAIKUDI 38167

உயிர்களைக் கொல்வர். நீ அத்தொழிலில் அவர்களினும் திறன் உடையவளாக அமைந்துள்ளாய். எவ்வாறெனின் நீயோ நினது வளைந்த புருவங்களையே கருவியாகக் கொண்டு உயிரினைக் கொல்வாய். பிறருடைய துன்பத்தினை உணராத நினது பருத்த நகில்களை சுமத்தலாலே நின்னுடைய சிறிய மெலலிய இடை வருந்தி வாட்டமுடையதாகிறது. அதனையும் இழந்து விடாதே கொள்' என்று தலைவியின் பால் வெறுப்பாக உருக்கொள்கிறது. இங்கு அவளது புருவம் தன் உயிரைக் கொன்று விட்டதாகக் கூறி அப்புனை பொருளால் பிறர்படும் துன்பத்தை அவள் உணரமாட் டாள் என நிந்தித்துத் தன் ஏக்கத்தினை முழுமையாக உணர்த்தி விடுகிறான் தலைவன். உன்னைக் காணாவிடில் காமம் காரணமாக என் உயிர் பிரிய நேரிடும் எனத் தலைவிக்கு எச்சரிக்கை விடுத்து, அதன் மூலம் அவர்கள் இணைய அவள் வழி வகுக்கும்படி செய்து விடுகிறான். தன்னைத் தன் தலைவனாக ஏற்க மறுக்கும் தலைவியை ஏற்கும்படியும் செய்து விடுகிறான் எனவும் பொருள் கொள்ளலாம்.

விசேடக் கரு

ஒரு காரணம் இருப்பதால் காரியம் முடியவில்லை என்பதைக் காட்டுவது இவ்வணி.

கொடிய இரு வரத்தால் காகுத்தன் காடேகுமாறு செய்த கைகேயியின்பால் கோபம் கொள்ளும் பரதன்

நீ இனம் இருந்தனை யானும் நின்றனென்
ஏ எனும் மாத்திரத்து எற்றுகிற்றிலென்
ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாய் எனும் பெயர் எனைத் தடுக்கற் பாலதோ (2173)

என்று அவளிடம் வினவுவதாகப் பாடல் அமைகிறது.

ஏ எனும் அளவில் உன்னை உயிரற்று விழச் செய்வேன். அவ் வாறு செய்யாமல் நீயும் உயிருடன் இன்னும் நிற்கின்றாய்; நானும் அதனைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றேன். அதற் குக் காரணம் நீஎன் தாய் என்பதால் அன்று. தருமத்தின் தனிமை தீர்ப்பவனான இராமன் அக்காரியத்தால் கோபம் கொள்வான் என்றுதான். அவனுக்கு அஞ்சுவதால்தான் தடுக்கப்பட்டுள்ளது என்று இயம்புகிறான் இளவல்.

இங்கு பரதன் கைகேயியைக் கொல்லுவதாகிய காரியம் இராமன் கோபம் கொள்வான் எனும் காரணத்தால் நடை பெற வில்லை என்று கூறுவதால் இப்பாடல் இவ்வணியின் பாற்படக் காணலாம். 'ஆயிரம் இராமர் நின் கேள் ஆவரோ?' என்று

Koviloor Digital Library

கோசலையே வினவும் சிறப்புடைய பரதன் இராமன்பால் கொண்டுள்ள ஒப்பற்ற அன்பினை' மதிப்பினைக் காட்டுவதாக அழகுற அமைந்து காப்பியத்துள் இப்பாடல் முக்கியத்துவம் பெறக் காணலாம்.

ஏதுத்துநி

காரணம் காட்டி ஒரு பொருளைப் போற்றி உரைத்தலை இவ்வணி சுட்டும்.

சிலம்பில் நாவலந்தணன் ஆகிய மாடலமறையோன் கோவலனைப் பாராட்டி உரைக்கும் பகுதியை இதற்குச் சான்றாக்கலாம். அதில் ஒரு பகுதி இங்கு விளக்கம் பெறுகிறது.

பத்தினி ஒருத்தி படிற்று உரை எய்த
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த்து அறைந்து உணும்பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிது சென்றெய்தி
என் உயிர் கொண்டு ஈங்கு இவன் உயிர் தா என
நல் நெடும் பூதம் நல்காது ஆகி
நரகன் உயிர்க்கு நல் உயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை
ஒழிக நின் கருத்து என உயிர் முன் புடைப்ப
அழி நரும் உள்ளத்து அவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரில் பசிப்பிணி அறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல் (15;76-90)

இங்கு வறியவர்க்கு உதவும் செம்மல் எனக் கோவலனைப் புகழ விரும்பும் மாடலன் அதற்கு ஒரு காரணமாகக் கோவலன் செய்த ஓர் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறான்.

பத்தினி ஒருத்தி பழி எய்தும் படி பொய்ச்சான்று கூறிய பாதகனை, அதனைக் கண்டிக்கும் பூதம் தன் கரிய பாசத்தின் அகப் படுத்தியது. அதனால் அவன் தாய் அடைந்த துயர் கண்ட கோவலன் விரைந்து சென்று 'இவன் உயிரினை விடுத்து என் உயிர் கொள்க' என வேண்ட 'நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு பரகதி இழக்கும் பண்பு இல்லை' என்று மறுத்த பூதம் அவன் முன் பாகவே அவனைப் புடைத்து உண்டது. இதனால் துயருற்ற அவன் தாயோடும் சென்று அவளது சுற்றத்தார்க்கும், தொடர்

Koviloor Digital Library

புடைய கிளைகட்கும் பசிப்பிணித் துன்பத்தை நீக்கிப் பல்லாண்டு புரந்தான் என்பதே அவன் செயல்.

கோவலன் காப்பியத் தலைவன். அவன் விரைவில் பழி சூடிக் கொலைப் பட இருக்கின்றான். தாய் தந்தையரைத் துறந்து எல்லையற்ற தன் செல்வத்தையும் இழந்து வாழ்வு நாடி வந்து கொண்டிருக்கும் இந்நிலையில், இதனை நினைவுறுத்துவதால் கற்பாருக்குக் கோவலன் மீது ஏற்படும் இரக்க உணர்வு அதிகரிக்கிறது. இந்நல்லவனுக்கா இப்படி ஓர் இழி முடிவு என்று அவன் பிரிவின் துக்கமும் கூடுகிறது. மேலும் ஓர் பொருளைப் புகழும் போது காரணம் காட்டுவதால் புகழுரை வெற்றுரையன்று பொருளுரையே என்றாகிறது. இதனை உணர்ந்தே அடிகளார் ஏற்ற இடனறிந்து இப்பாடலை அமைத்துத் தன் நோக்கில் வெற்றி பெறுகிறார். காப்பியத்துள் முக்கியத்துவமும் பெறச் செய்து விட்டார்.

நன்னியல் தருமத்துதி

ஒரு பொருளின் இயல்பினைப் போற்றுதலாகச் சொல்வது இஃதாகும்.

ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பல நாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ
இழை அணி இயல்தேர் அஞ்சி
அதியமான் (புறம்101:1-5)

எனும் ஔவையாரின் சங்கப் பாடலில் இவ்வணி பொருந்தி வரக் காணலாம்.

இரவலர்க்கு ஈதலாகிய அதியமானின் இயல்பினை ஔவையார் இங்கே, 'ஒரு நாள் அல்ல இருநாள் அல்ல ஒருவர்இருவர் ஆக அல்ல பலரோடு பலநாள் சென்றாலும் முதல் நான் பார்த்தது போன்ற விருப்போடு அருள்வான்' என்று போற்றுதலாகப் பாடி இவ்வணியின்பாற்படுத்துகிறார். ஒன்றின் சிறப்பினை மிகைப் படுத்தாது உள்ளபடியே போற்றும்போது அது மேலும் உயர்வுடையதாகத் தோன்றுமல்லவா? எனவே ஔவையும் தன்னைப் புரந்தானைப் பாராட்ட இவ்வுத்தியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

Koviloor Digital Library

அதிசய பேதகம்

ஒரு பொருளை எல்லாவற்றினும் மேலதாக, ஒப்பு அதற்கு இல்லை என்று தனித்து நிற்கச் செய்தால் அது அதிசய பேதகம் ஆய்விடும்.

முன்கையே ஒப்பதும் ஒன்று உண்டு மூன்று உலகத்துள்ளும்
என் கையே இழுக்கம் அன்றே இயம்பினும் காந்தள் என்றல்
வன்கை யாழ் மணிக்கை என்றல் மற்று ஒன்றை உணர்த்தல் அன்றி
நன்கையாள் தடக்கைக்கு ஆமா நலத்தின் மேல் நலம் உண்டாமோ (4491)

சீதையைத் தேடித் தென் திசை செல்லும் அஞ்சனை புதல்வனுக்கு அவளின் அடையாளங்களை உணர்த்த விரும்பும் இராமன், சனகன் மகளின் முன்கை பற்றிக் கூறுங்கால் இவ்வாறு கூறுகிறான்.

மூன்று உலகங்களிலும் முன்கை ஒப்பது ஒன்றும் உண்டு என்று கூறுவதே குறைவு உடையதாகும். உவமை கூறினாலும் அவளது அழகிய மணிக்கையினைக் காந்தள் மலர் எனில் வலிய கூற்று ஆகும். யாழ் எனக் கூறின் அது பிறிது ஒன்றை அறிவுறுத்துமே அல்லாமல் பிராட்டியின் கைகளுக்கு உவமை ஆகாது. அழகிற்கு விஞ்சிய பிறிது ஓர் அழகும் உண்டோ? இல்லையே என்பது இப் பாடல் தரும் பொருள்.

சீதையின் முன்கையினுக்கு உவமை கூற வரும் புலவன் உவமை கூறவேண்டும் என நினைத்தலே குறையுடையது என்றும், கூறினும் அவ் உவமைப் பொருட்கள் பொருந்தா என்றும் அதற்கு உவமையே இல்லை என்று அறுதியிட்டும் கூறுகிறான். இவ்வாறு அப்பொருளை மிக உயர்த்திக் கூறி உவமை காட்டாது தனித்து நிற்கச் செய்து சிறப்பித்துள்ளமையின் இவ் வணியின் பாற்பட்டு இலக்கிய இன்பம் பயக்கிறது.

சாமிதை

கற்பனை ஆக ஒருபொருள் செய்து, கற்பனையான மற்றொரு பொருளையே உவமையாகக் கூறுவது சாமிதை ஆகும்.

கற்பனைக் கடலாக விளங்கும் கம்பனில் இருந்தே இதற்கும் சான்று காணலாம்.

கவந்தன் என்பது ஓர் கற்பனைப் படைப்பு. தலையோ, கால்களோ இல்லாத, மிகப் பேரளவினதான வடிவுடையவன்

Koviloor Digital Library

கவந்தன், இக் கற்பனைக்கு ஓர் கற்பனையினையே உவமை ஆக்குகிறான் கவியரசு.

ஓதநீர் மண் இவை முதல ஒநிய
பூதம் ஓர் ஐந்தினில் பொருந்திற்று அன்றியே
வேதநூல் வரன்முறை விதிக்கும் ஐம்பெரும்
பாதகம் திரண்டு உயிர் படைத்த பண்பினான் (3657)

பஞ்ச பூதங்களினால் ஆகிய இக்கவந்தனின் உடல் வேத நூல்கள் வரன்முறை அமைத்துள்ள ஐம் பெரும் பாதகமும் ஒன்று சேர்ந்து உருக்கொண்டு உயிர் பெற்றது போன்ற தன்மையைக் கொண்டது என்கிறான் கம்பன்.

இங்கு கவந்தன் ஓர் கற்பனைப் படைப்பு. அதில் ஐம் பெரும் பாதகங்களையும் இணைத்து ஓர் உருவம் ஆக்கி உயிர் ஊட்டல் மற்றொரு கற்பனை. கற்பனையான கவந்தன் படைப் பிற்குக் கற்பனையான உருவத்தை உவமையாகக் காட்டி அதனை நாமும் கற்பனையிலேயே காணும்படி செய்துள்ளான்.

பரிகாரம்

கொடுக்கப்படும் அடை அப்பொருளுக்கு இயல்பானதாய்ப் பொருந்திவரின் பரிகாரம் ஆகும்.

'தாதவிழ் புரிகுழல் மாதவி' (3: 8) என்பதில் தாதவிழ் புரிகுழல் என்பன மாதவியைக் குறிப்பிடும் அடையாக வந்துள்ளன. இங்கு தாது அவிழ்கின்ற பூக்களைச் சூடிய குழலை உடைய என்று இயல்பு நிலையாக உணர்த்தப் பட்டு இவ்வணிக்குச் சான்றாய் நிற்கிறது.

பரிகாராங்குரம்

பொருளுக்குத் தரும் அடை சிறப்பாக ஒன்றனை உணர்த்துவ தாக வருவது பரிகாராங்குரம் எனப்படும்.

கம்பன் குகனைக் குறிப்பிடும் பொழுது 'தாயின் நல்லான்' என்கிறான் (1964). இங்கே நாட்டைத் துறந்து காடு வந்துள்ள தசரதன் மைந்தனைக் காண வரும் குகன் அவனுக்கு உணவு வகைகள் கொண்டு வருகின்றான். குழந்தையின் பசியினைத் தீர்ப்பவள் தாய் அல்லவா? எனவே குகன் இராமனிடம் கொண்டுள்ள உயர்ந்த அன்பு கைம்மாறு கருதாது, தாய் தன் சேயிடம் கொள்ளும் அன்பிற்கு ஈடானது என்பது புலப்படும்படித் தாயின் 'நல்லான் என்று அடை கொடுக்கிறான்' இராமனைச் சரண் புகுந்தோரில் இவன் ஒருவனே, இராமனிடமிருந்து சுக்கிரீவன் கிட்கிந்தை அரசைப் பெற்றதைப் போன்றோ,

Koviloor Digital Library

வீடணன் இலங்கை அரசைப் பெற்றதைப் போன்றோ எதனையும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே இவ் வடை மிக்கச் சிறப்புடன் பொருத்த முற அமைகிறது.

இந்நூலினை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் தன் சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்னும் நூலில் 'குவலயானந்தம் என்ற அணி இலக்கணம் மாணிக்கவாசகர் என்னும் பெயருள்ள ஒரு புலவரால் செய்யப்பட்டது. சூத்திரங் களால் அமைந்தது. 100 அணிகள் கொண்டது' எனக் குறிப் பிட்டுள்ளார். ஆனால் நமக்கு இந்நூல் தருவது 87 அணிகளே.

சந்திராலோகம்

வடமொழி அணி இலக்கண நூலான சந்திராலோகம் தமிழ் வடிவில் மலரக் காரணமாய் அமைந்தது விசாகப் பெருமாளைய ரின் அணியிலக்கண நூலாகும். வடமொழிச் சந்திராலோகத்தை முதலில் இவர் உரைநடையில் மொழி பெயர்த்தார். அதற்குக் கவிதை உருவத்தை முத்துச்சாமி ஐயங்கார் என்பார் அளித்தார். இப்பெரியார் இந்நூற்றாண்டைச் சார்ந்த, தமிழ் வளர்ந்த நம் முன்னோர்களில் ஒருவரான மு.இராகவையங்காரின் தந்தையார் ஆவார். இந்நூல் 1909 இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் பதிப்பிக்கப்பட்டது.

வடமொழிச் சந்திராலோகத்தைக் காளிதாசர் இயற்றிய தாகக் குவலயானந்தம் -2-இன் முன்னுரையில் காணப்படுகிறது' ஆயின் ஜயதேவன் என்பவரால் எழுதப் பட்டதாக பி. எஸ். எஸ்' சாஸ்திரி என்பார் தமது வடமொழிநூல் வரலாற்றில் குறித் துள்ளார்.

இந்நூல் 126 நூற்பாக்களால் அமைந்துள்ளது. நம்மாழ் வாரை வாழ்த்தித் தொடங்கி உள்ள இந்நூல் மூன்றாம் நூற்பா வில் பொருளணிகள் நூறினையும் தொகுத்துரைக்கிறது.

அணிகளை மரபுப்படி பொருளணி, சொல்லணி என இரு வகைப் படுத்தி, பொருளணி மட்டுமே சிறப்புடையன எனக் கூறு வது, தான் சொல்லணிக்கு இலக்கணம் வகுக்காமைக்குக் காரணம் காட்டுவது போல் அமைகிறது.

இவர் விசாகப் பெருமாளையரின் அணி இலக்கண நூலைப் பின்பற்றினும் அவர் இறுதியில் விளக்கம் அளித்துள்ள சேர்வை கலவை எனும் இரு அணிகள் பற்றிக் குறிப்பிடவில்லை, மூலநூல் அவற்றைக் குறிப்பிடாமைக் காரணமாகலாம்.

தொகுப்பில் தமிழ்ப்படுத்தி அணியின் பெயரைக் கூறி யிருப்பவர் விளக்கத்தில் (நூற்பா) வடமொழிப் பெயரைக் குறிப்

Koviloor Digital Library

பிட்டுள்ளார். திரிபு (பரிணாமம்), ஒன்றற் கொன்று உதவி (அன்னியோன்னியம்) என்பன அவை. இக் குறைபாட்டினை நீக்கியிருப்பின் இச் செய்தி அறியாத கற்பாருக்குக் குழப்பம் ஏற்பட்டிருக்காது.

ஆயின் பொது நிலையில் பெரும் பான்மை அணிகளின் பெயரைத் தமிழ்ப் படுத்திக் கொடுத்துள்ளார். பரிகாரத்தை கருத்துடை அடையாகவும், பரிகாராங்குரம் கருத்துடை அடைகொளி ஆகவும், விசேடக்கரு காரணஆராய்ச்சி ஆகவும், சாரம் மேன் மேல் உயர்ச்சி ஆகவும் மாறி உள்ளமையைக் குறிப்பிடலாம் குவலயாநந்தம் -2-உம் இவ்வாறே கூறியுள்ளது.

குவலயாநந்தம்-2

மகாகவி காளிதாசர் உவமை அணி முதல் ஏது அணி ஈறாக நூறு அணிகள் விளங்க இலக்கண இலக்கியம் அமைந்த ஸ்லோகங்களாக இயற்றிச் சந்திராலோகம் எனப் பெயரிட்டனர். அந் நூலுக்குப் பெயர் பெற்ற மகா வித்துவான் அப்பைய தீட்சிதர் உரையிட்டு ஆங்காங்கு உற்ற பல சுலோகங்களை உதாரணங்களாகக் காட்டியும், அவற்றிற்கு இன்றியமையாத அலங்காரங்களை வாக்கிய ரூபமாகத் தெரிவித்தும் இரஸவதஅலங்காரம் முதல் ஏகவாசகா நுப்பிரவேசஸங்காரம் ஈறாக இருபது அணியலங்காரங்களைச் சேர்த்தும் குவலயாநந்தம் எனப் பெயர் உள்ள ஓர் நூலாக முடித்தனர். இவ்வாறு வடமொழிக் குவலயாநந்தத்தின் வரலாறு இந்நூலின் முதல் அச்சுப்பதிப்பின் முகவுரையில் காணப் படுகிறது.

அவ்வட நூலே தமிழில் குவலயாநந்தமாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. எட்டையபுர ராஜா இராஜஸ்ரீ ஜகத்வீர ராம குமார எட்டப்ப மகாராஜர் அவர்கள் தன் சமஸ்தான சபையில் வடமொழிப் பண்டிதரான சங்கரநாராயண சாஸ்திரிகளைக் கொண்டு 1889இல் தமிழில் மொழி பெயர்த்தனர். சபையின் தமிழ் வித்துவான் முகவூர் மீனாட்சிசுந்தரக் கவிராயர் அவர்கள் சுலோகங்களின் மொழி பெயர்ப்புகளைச் செய்யுட்களாக அமைத்தனர். இவ்வாறாக இருவரின் முயற்சியில் இந்நூல் தோன்றியது.

1895 இல் எட்டையபுர ராஜாவின் மகனார் வேங்கடேசுவர பாண்டியன் அவர்களின் தூண்டுதலின் பேரில் உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியராலும், ஆனூர் சிங்காரவேலு முதலியாராலும் பதிப்பிக்கப் பட்டு உலகிற்கு வழங்கப்பட்டது.

இல்விலக்கண நூல் கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

எட்டையபுர சமஸ்தானத்தினின்றும் வெளிப்பட்டமை தோன்ற அச்சமஸ்தானத்து அரசனை முன்னிலைப் படுத்தி அமைந்துள்ளது. அவ்வரச பரம்பரையினரின் ஆதரவில் சுப்பிர மணியர் தலமாகிய கழுகு மலையையும் திருமால் தலமாகிய சாத்தூரையும் ஆங்காங்கு குறித்திருக்கிறது.

மாடக்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும் ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும் போல் இயற்கையின் விளக்கும் சொற்பொருள் இயைந்த யாப்பிற்குப் பன்னூல் ஆராய்ச்சி உடையார் மனமகிழ்விக்கத் தக்க பல சதுரப் பாட்டால் அணி பெறச் செய்வது பற்றி அணி இலக்கணம் எனக் காரணக்குறி பெற்றது என்று இந்நூலின் முன்னுரையில் அணி என்பதைக் காரணப் பெயராகக் காட்டியிருத்தல் சிறப்பு.

ஒவ்வொரு அணியின் விளக்கத்துடன் உதாரணத்தையும் அமைத்துள்ளார். சுவை முதல் எடுத்துக்காட்டுப் பிரமாணம் வரை உள்ள 15 அணிகளுக்கு சான்று இன்றி அவ்அணி பற்றிய விளக்கம் மட்டுமே அமைந்துள்ளது. இறுதி ஐந்து அணிகளின் விளக்கம் நூற்பாவில் அமைக்காமல் உதாரணப் பாடல்களின் மூலம் விளக்கப்பட்டுள்ளது. உரையாசிரியரே இறுதி 20 அணி களுக்குக் காரணம் ஆதலின் இந்நிலை எனலாம்.

இறுதி ஐந்து அணிகள் சங்கிரண அணியின் விரிவுகளாக அமைந்துள்ளன.

இந்நூலுள் மொத்தம் 160+7 நூற்பாக்கள் அமைந்துள்ளன.

சந்திராலோகம், குவலயாநந்தம்-2 எனும் இவ் இரு நூல் களுக்கும் மூலம் ஒரே நூல்ஆதலின் பெரும்பான்மை விளக்கங் களில் அவை ஒன்றி வருகின்றன. வேறுபாடு சிறிதளவே .ஆகவே இருநூல்களுக்கும் ஒன்றாகவே, பொது நிலையில் அவற்றின் சிறப் புகளும் புதிய சில அணிகளின் விளக்கங்களும் இங்குத் தரப்படு கின்றன.

இவ்விரு நூல்களும் பிற அணி இலக்கணங்கள் கூறும் அணி களில் பெரும் பகுதியைக் குறிப்பிட்டிருப்பினும் விளக்க நிலையில் வேறுபடுகின்றன. தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி ஆகியவற் றைச் சான்றாக்கலாம்.

தன்மை அணியினை இந்நூல்கள் தவிர ஏனைய முதலாவ தாகக் கூற இவை இறுதியில் நவின்றுள்ளன. முதன்மைப்படுத்தும் அளவு அத்துணைச் சிறப்பின்று என்ற காரணம் போலும்.

தீவக அணியின் ஒழிவு மாலை விளக்காகஇவண் மாறியுள்ளது பிறர் விரிவாக இலக்கணம் அமைக்கத் தாம் சுருககமாகவும்

Koviloor Digital Library

(சிலேடை, விலக்கு) சுருங்கக் கூறியதை விரித்தும் (அவநுதி) அமைத்துள்ளன.

இவை புதிதாகக் கூறும் அணிகளில் சில உவமையின் விரியாகப் பிறவற்றில் காணப்படுகிறது. இதரேதர உவமை எனும் விரி புகழ் பொருள் உவமை ஆகவும் பொது நீங்கு உவமை விரி, பொது நீங்கு உவமை அணி ஆகவும் (குவலயாநந்தத்தில் இயைபின்மை) வந்துள்ளமையைக் குறிப்பாடலாம்.

உவமை உருபுகள் எவை எவை என்பதை இந்நூலிரண்டும் நவிலவில்லை. விளக்கம் தேவையில்லை எனக் கருதின போலும்.

இந்நூல்கள் நிகழ்வின் நவிற்சி என்றுகூறும் அணி முன் நிகழ்ந்ததைப் பின் நினைவு கூறுவதாக அமையும் உத்தியையும் பின் நிகழ இருப்பதனை முன் சுட்டுதலாகிய உத்தியையும் குறிப்பது போல் தோற்றம் அளிக்கிறது. இறந்த அல்லது எதிர் கால நிகழ்ச்சிகளை நிகழ்காலத்தில் நிகழ்வதாகக் கூறுதல் என்பது இவ்வணிக்கு அவை தரும் விளக்கம்.

தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் மலர்ந்து மணம் பரப்பும் மலர்கள் சிலவற்றிற்கு இந்நூல்கள் பெயர் சூட்டியுள்ளமையைக், காண்பாம்.

உய்த்துணர்வு

இவ்வாறு செய்தால் இவ்வாறு ஆகும் என்று ஒரு காரிய முடிவினை உணர்வது உய்த்துணர்வு ஆகும்.

கடை ஏழு வள்ளல்களுள் ஒருவனான ஆய் அண்டிரனின் கொடைப் பண்பினைப் பாராட்ட வந்த உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் எனும் புலவர்.

ஆஅய் அண்டிரன் அடுபோர் அண்ணல்
இரவலர்க்கு ஈத்த யானையில் கரவின்று
வான் மீன் பல பூப்பின் ஆனாது
ஒரு வழிக் கருவழி இன்றிப்
பெருவெள் என்னில் பிழையாது மன்னே (புறம்129-5-9)

ஆய் இதுவரைப் பிறருக்கு வழங்கி உள்ள யானைகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று ஒருவர் கேட்டுவிட்டார், அவன் காதலரான முடமோசியாரிடம். விடை தெரியாது என்றா கூறுவார்? புலவரன்றே! தன் புலமையும் அவன் பெருமையும் கேட்டவர் புரிந்து கொள்ளும்படி அழகாகப் பாடிக் காண்பித்து விட்டார், அவர்,

Koviloor Digital Library

ஆய் கொடுத்த யானைகளின் தொகையினைக் கணக்கிட்டால், மேகத்தின் மறைத்தல் இன்றி விண் மீன்கள் மலர்ந்தால் எத்தனை இருக்குமோ அவ்வளவு கூட ஒத்துவராது. விண்ணில் ஒரு சிறு கருமை கூட இன்றி முழுமையும் ஒளிக் கூட்டம் ஆமாறு வானமீன்கள் நிறைந்திருப்பின் அவற்றின் தொகை தப்பாமல் ஒக்கும் என்று கேட்டவர்க்குப் பதிலளித்துள்ளார்.

இரண்டாம் நிலையாகக் கூறியுள்ள விண் மீன்களை எண்ண முடியுமானால் அதாவது அவ்வாறுசெய்தால், அவன் கொடையை அளவிடுதலாகிய காரிய முடிவு அவ்வெண்ணிக்கையுடன் தப்பாமல் ஒத்து வருதலாகிய 'இவ்வாறு ஆகும்' என்பதன் பாற்படும். எண்ணிக்கை கேட்டவருக்குப் புலவன் ஒரு எண்ணிக்கையைக் காட்டிக் கொடுத்துத் தன் வேலையை முடித்துக் கொண்டான். ஆனால் கேட்டவனுக்கோ அது நேரிடையான பதிலாக இல்லாமல் உய்த்து உணர வேண்டியதாக அமைந்துள்ளது, இவ்வாறு இம்மலர் இவ்வணியின் மணம் கொண்டதாகிறது.

மாற்று நிலை

ஒரு பொருள் கொடுத்து வேறு ஒரு பொருள் பெறுவதனைப் பிற அணி இலக்கண நூல்கள் இவ்வணியின் விளக்கமாக அமைக்க இவை சிறிய தொன்றைக் கொடுத்துப் பெரியது ஒன்றைப் பெறுதல் என்று சிறப்பித்துக் கூறுகின்றன.

மற்று இனி உதவி உண்டோ வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ நின்னை என்னைக் கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கினோடும் தெரிவு உறச் செய்த செய்கை
வெற்றரசு எய்தி எம்பி விட்டு அரசு எனக்கு விட்டான் (4067)

எனும் கம்பன் பாடல் வாலியின் கூற்றாக வருகிறது.

வானைவிட உயர்ந்த கொற்றவனான இராமனைத் தன்னைக் கொல்ல அழைத்து வந்த சுக்கிரீவன் வெற்றரசு எய்தித் தனக்கு பெறுதற்கரியவும், யாவராலும் வேண்டப்படுவதுமாகிய வீட்டரசு பெறும்படி வைத்து விட்டான். இதனை விடப்பெரிய உதவி வேறு இருக்க முடியுமோ எனக் கேட்கும் வாலியின வினாவால் அவன் சிறுமைப் பொருளான நாட்டரசைக் கொடுத்துப் பெருமைப் பொருளான விட்டரசைப் பெற்றமை பெறப்பட்டு இவ்வணிக்குச் சிறந்த சான்றாய் அமைந்துள்ளது.

கரவு வெளிப்படுப்பு

ஒருவர் மறைவாகச் செய்த செய்கையை அறிந்த மற்றொருவர் தான் அதனை அறிந்தமையைக் குறிப்பாக ஒரு செயலால் வெளிப்படுத்தலைத் தன் இயல்பாகக் கொண்டது இவ்வணி.

Koviloor Digital Library

எழா அய் ஆகலின் எழில் நலம் தொலைய
அழா அது ஈமோ தொது மலர் தலையே
ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக்கண்
நல்ல பெருந்தோ ளோயே கொல்லன்
எறிபொற் பிதிரில் சிறு பல தா அய்
வேங்கை விஉகும் ஓங்கு மலைக் கட்சி
மயிலறிபு அறியா மன்னோ
பயில் குரல் கவரும் பைம்புறக் கிளியே (நற்றிணை 13)

தலைவி தலைவனுடன் களவு ஒழுக்கம் கொண்டதை உணர்கிறாள் தோழி. தோழி அதனை அறியாள் என்று அவளிடம் தன் களவொழுக்கத்தை மறைத்த தலைவியிடம் தான் அதனை உணர்ந்ததை, கிளிகளின் செயல்களை உணர்த்துவதன் வாயிலாகக் குறிப்பாகத் தோழி உணர்த்துவதாக வருவது இப்பாடல்.

'தினைப் புனம் காவலை உடைய மழவர் ஆண்டு அவற்றை அழிக்க வந்த பன்றி முதலான விலங்குகளை வீழ்த்தி அவற்றி னின்றும் பறித்த பகழி போன்று செவ்வரி பரந்த, கண்களையும் நல்ல பெரிய தோள்களையும் உடையவளே கொல்லனது உலைக் களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறுவது போன்று வேங்கை யின் மலர்கள் உதிர்கின்ற உயர்ந்த மலையின் கூட்டில் இருக்கும் மயில்கள் பார்த்துக் கொண்டிருக்கவும், கிளிகள் மயில் தன்னைக் கவனிக்க வில்லை என்று தினையைக் கவர்ந்து செல்கின்றன. அவற்றை ஓட்ட வேண்டிய நீ இவ்விடத்து இருந்து எழுந்தாய் அல்லை. அங்ஙனம் அவற்றை விரட்ட நீ எழாதிருப்பினும் உன் அழகிய நலம் கெடும்படி அயலார் இருக்கும் இடத்து அழாது இருத்தலையேனும் செய்வாயாக எனப் பொருள்படும் இப்பாட லில் இவ்வணியின் அழகு பொருந்தியுள்ள அழகினை இனிக் காண்பாம்.

தினைப் புனம் காக்க வந்த தலைவி அத்தொழிலைப் புரியாது இருத்தலாலும், கண்கள் அதிகப்படியாகச் சிவக்க அழுது கொண் டிருப்பதனாலும் பிறவற்றாலும் அவளது களவொழுக்கத்தை ஐயமறப் புரிந்து கொண்ட தோழி நயம்பட தலைவி தன்னிடம் மறைத்த அவளது கரவினை வெளிப்படுத்துகிறாள். மயில் பார்த் துக் கொண்டிருக்க அது தங்களைப் பார்க்கவில்லை என்று கிளிகள் தினையைக் கவர்ந்து கொண்டிருக்கின்றன, எனக் கிளி களின் செயலினைக் காட்டுவதன் மூலம் தன்னை மயிலாகவும் தலைவன் தலைவியரைக் கிளிகளாகவும், தினை கவர்வதனைக் களவொழுக்கமாகவும் உருவகப்படுத்தித் தலைவிக்குத் தான் அறிந்தமையை உணர்த்தி விடுகிறாள்.

Koviloor Digital Library

இவ்வாறாகத் தலைவியின் களவு ஆகிய கரவு கிளிகளின் தினை கவருதலாகிய செயலால் மயில் பார்த்துக் கொண்டிருக் கின்றது எனும் குறிப்பின் மூலம் தோழி அறிந்தமை வெளிப் படுத்தப்பட்டு நமக்கு ஓர் இனிய பாடல் கிடைக்கிறது. தலைவி யின் நிலை தோழியின் செயல் திறம் இவற்றைச் சுவைபட உணர்த் தும் இவ் அழகிய பாடலைக் கபிலர் உருவாக்கியுள்ளார்.

மடங்குதல் நவிற்சி

ஒருவன் ஒரு பொருளை அறிவுறுத்துதற்குச் சொல்லிய சொற் களுக்கு மற்று ஒருவன் சிலேடை அல்லது ஒலி வேற்றுமையால் மற்று ஒரு பொருள் தரல் மடங்குதல் நவிற்சி ஆம்.

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்
குரவர் பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி
என்றவள் எழுதிய இசைமொழி உணர்ந்து
தன் தீதிலள் எனத் தளர்ச்சி நீங்கி
என் தீது என்றே எய்தியது உணர்ந்தாங்கு
எற்பயந்தோற்கு இம்மண்ணுடை முடங்கல்
பொற்புடைத்தாகப் பொருளுரை பொருந்தியது
மாசில் குரவர் மலரடி தொழுதேன்
கோசிக மாணி காட்டெனக் கொடுத்து (13:87-99)

எனும் சிலப்பதிகாரக் காட்சி இவ்வணியின் பாற்படும்.

தன்னை விட்டுப் பிரிந்த கோவலனுக்குக் கோசிய மாணியிடம் மாதவி கொடுத்தனுப்பிய மடலைக் கோவலன் தான் விட்டுப் பிரிந்து வந்த பெற்றோர்க்கு ஏற்புடைத்தாகஅவர்களுக்கு அனுப்பு வதன் மூலம் இப்பகுதி மடங்குதல் நவிற்சி ஆகிறது.

மாதவி கோவலனின்பாதங்களில் வீழ்ந்து வணக்கம் செலுத்த கோவலன் அதனைத் தான் தன் பெற்றோர்க்கு அளிக்கும் வந்த னம் ஆக்குகிறான். தேர்ந்து தெளிந்து எழுதப்படாத இம்மொழி களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று அவள் கோவலனை வேண்ட அவன் தன் மனநிலையினைப் பெற்றோர்க்கு உணர்த்து மாற்றான் அவர்களை வேண்டுகிறான்.

பெற்றோர்களாகிய அம்முது குரவர்களின் ஏவல் இல்லா மலும் குலமகளான கண்ணகியுடன் நகரை விட்டு இரவில் கழிந்த தற்கு நேர்ந்த பிழையாது என்று அறியாது என் பிழையோ

Koviloor Digital Library

என்று மயங்கி அதற்குத் தவிக்கிறது. தவறு என்னுடைய தாயின் என் கையறு நெஞ்சத்தைப் பொறுத்தல் வேண்டும் என மாதவி கேட்கிறாள். அதனையே கோவலன் பெற்றோர்களாகிய உங்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்யாமலும் துணைவியுடன் இரவிடைக் கழிதலும் ஆகிய இரு குற்றங்களையும் புரிந்த என் பிழைப்பினைப் பாராட்டாது அதனால் துன்பம் கொண்டுள்ள உங்கள் இதயம் என்னை மன்னித்தருள வேண்டும் எனும் பொருளில் பெற்றோர்க்கு ஆக்குகின்றான்.

இங்கே மாதவி நேர்ந்தவற்றிற்குத் தன்பிழையோ காரணம் என ஐயுறுகின்றாள். கோவலன் தன் பிழை என ஏற்றுக் கொள்கிறான். மாதவி தன் குற்றமோ எனும் ஐயத்தால் மனக்கலக்கம் கொள்வதாகக் கூற, கோவலன் தன் பிரிவாலும் செயலாலும் தன் பெற்றோர் கொண்டுள்ள மனக் கலக்கத்தை உணர்த்துகிறான்.

இறுதியில் தனக்கு மாதவி செலுத்திய வணக்கத்தையும் அவர்களுக்கு உரித்தாகுமாறு கொள்கிறான்.

கோவலன் இவ்வாறு மாதவியின் மடலுக்கு மாற்றிப்பொருள் கொண்டுள்ளமையைத் தெளிவாக 'ஏற்பயந்தோர்க்கு இம் மண்ணுடை முடங்கல் பொற்புடைத்தாகப் பொருந்தியது' எனும் அடிகளில் உணர்த்துகிறார் அடிகளார். இவ்வாறு இவண் இவ்வணி மிகச் சிறப்பாகப் பொருந்துமாறு பாடியுள்ளார் இளங்கோ.

இவ்வணியைப் பயன்படுத்தி அடிகள் மாதவியின் மாண்பு வெளிப்படுமாறும், காப்பியத்தில் கோவலன் மாதவிக்கு இடையே ஏற்பட்ட ஊடலாகிய சிக்கல் தீருமாறும், இரு நிலைகளில் ஒரு பொருள் ஒன்றுமாறு அமைக்கும் தம் புலமைத் திறம் புலப்படுமாறும் சிறப்பித்துள்ளார்.

வஞ்சப் பழிப்பு

ஒருவர் கூறும் நிந்தையால் நிந்தையே தோன்றுவது. இவ்வணி வஞ்சப் புகழ்ச்சியினின்றும் மாறுபட்டது.

தன் வரத்தால் கைகேயி கணவன் வீடேகவும், மைந்தன் காடேகவும் செய்தாள் என்பதனை உணர்ந்தபரதன் சீற்றத்துடன் அவளை நோக்கிச் சிதறும் மொழிகளில் இவ்வணியின் இயல்பு அமைகிறது.

நேயிர் அல்லீர் நும் கணவன் தன் உயிர் உண்பீர்
பேயிரே நீர் இன்னம் இருக்கப் பெறுவீரே
மாயிர் மாயா வன்பழி தந்தீர் முலை தந்தீர்
தாயிரே நீர் இன்னும் எனக்கு என் தருவீரே (2177)

Koviloor Digital Library

பரதன் 'பாலூட்டிய தாயான நீயே எனக்கு என்றும் மாளாத கொடும் பழியையும் தேடிக் கொடுத்துள்ளாய். இதற்கு மேலும் எனக்கு கொடுக்க இருக்கின்றாயோ? நோயாக இல்லாமலே உன் கணவரின் உயிரை உண்டாய் ஆதலின் நீ ஒரு பேயே. சாகாமல் இன்னும் உயிருடன் இருப்பதற்கு உனக்குத் தகுதி உண்டோ' என நிந்திப்பதில் நிந்தையே அன்றி பிறிதொன்றினையும் காணல் இயலாது. தன்னை ஈன்றாளை நோக்கிப் பரதன் எய்யும் இச் சொல் அம்புகளின் கூர்மையில் அவன் மனப்புண்ணின் ஆழத்தைக் காட்டிச் சிறப்பிக்கின்றார் கம்பர்.

மிகுதி நவிற்சி

வியப்பும் பொய்ம்மையும் (நிகழ்வதற்கு அரிய கற்பனை) இணைய ஒருவனின் வீரத்தை அல்லது கொடையைப் புகழ்தலை இவ்வணி சுட்டும்.

அனுமனின் நிகரற்ற ஆற்றலைக் காட்ட விரும்பும் கம்பர்,

காய்எரி முளிபுல் கானில் கலந்தென, காற்றின் செம்மல்
ஏ எனும் அளவில் கொல்லும் நிருதர்க்கு ஓர் எல்லை இல்லை
போயவர் உயிரும் போகித் தென்புலம் படர்தல் பொய்யாது
ஆயிர கோடி தூதர் உளர் கொலோ நமனுக்கு அம்மா! (5693)

என்று இவ்வணி அமையப் பாடுகிறார்.

உலர்ந்து போன புற்காட்டில் தீய்க்கும் நெருப்புச் சேர்ந்தது போல காற்றின் செம்மல் ஏய் என்று சொல்லும் கால அளவிற்குள் அழிக்கும் நிருதர்களுக்கு ஓர் கணக்கு இல்லை. அவனை எதிர்க்கும் அந்நிருதர்களின் உயிரும் தென்புலம் போய்ச் சேர்தலில் ஐயமில்லை. நமனுக்கு ஆயிரம் கோடி தூதுவர் உளரோ அம்மா! என்பது இப்பாடற் பொருள்.

அனுமன் தனி ஒருவனாக நின்று தன்னை அழிக்க வந்துள்ள அரக்கர் கூட்டத்தை எதிர்த்துக் கொண்டிருக்கிறான் எனும் வியப்புடன், உயிர்களைப் பறிக்கும் எமனுக்கு ஆயிரம் கோடி தூதர் உளரோ என எண்ணும்படி ஏ எனும் மிகச் குறுகிய கால அளவில் கணக்கற்ற அரக்கர்களை அழித்தான் என்ற கற்பனையும் இணையும்படி அமைத்து, வீரத்தால் தோன்றும் மிகுதி நவிற்சி யைக் காட்டி உள்ளார்.

தன்னை ஆதரித்த அண்ணாமலை ரெட்டியாரின் வள்ளன் மையைக் காட்ட விரும்பும் புலவர் சிவப்பிரகாசர் மிக அழகாக அதனை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

Koviloor Digital Library

கலச யோனியா முனிவரன் குடித்த அக்கார் கோள்
அலை பெரும் புனல் மறித்தும் விட்டான் என்பர் அதுபொய்
புலமை அந்தணர் பெறத் தரு பொருளொடு அப்பொன்மா
மலை யனான் பொழி தானநீர் நிறைந்தன்று மன்னோ
(சோ. நக். 36)

அகத்தியர் தான் குடித்த கடலை மீண்டும் கடலாகுமாறு விட்டார் என்பர். அது பொய். புலமை உடைய அந்தணருக்குப் பொருள் அளிக்கும்போது அண்ணாமலை ரெட்டியார் அவற்றுடன் விட்ட நீரே பெருக்கெடுத்து கடலாக உருக்கொண்டது. அது தான் மெய் என்பது இப்பாடற் கருத்து.

அண்ணாமலை ரெட்டியார் செய்த கொடையின் அளவால் ஒரு கடலே உருவாயிற்று என்று நம்மை வியக்க வைக்கும் புலவர், புராணக் கதையான அகத்தியர் கடல் உண்டதுடன் இணைத்துத் தன் கற்பனை ஆற்றலை வெளிப்படுத்தி, தன் செய்ந்நன்றி மறவாமையைப் புலப்படுத்தி நமக்கு இனிய கவிச்சுவை விருந்து அளிக்கிறார். இப்பாடல் கொடையின் பாற்படும் மிகுதி நவிற்சியாம்.

தமிழரின் இருகண்களாகக் கருதப்படும் வீரத்தையும், கொடையையும் கருத்துட் கொண்டு இவ் அணி அமைந்திருப்பதனை அதன் தனிச் சிறப்பாகக் கொள்ளலாம்.

அரதன மாலை

தான் சொல்லக் கருதிய பொருளை வரிசையாக முறை வழுவாது கூறுதல் அரதனமாலை.

ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈர்இரு திங்களின் பேர் இருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும் (போற்றித் 15-25)

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சிசுவின் தோற்றத்தில் உள்ள இடர்ப்பாடுகளை உணர்த்த விரும்பி, அதனை வரிசையாக ஒன்று முதல் பத்துத் திங்கள் ஈறாக முறை வழுவாது கூறி இவ் வணியின் பாற்படுமாறு அமைத்துள்ளார்.

Koviloor Digital Library

இவ்வணி நூல்கள் மூன்றும் வடமொழி இலக்கணங்களின் மொழி பெயர்ப்பாக அமைந்த போதிலும் தமிழ் இலக்கியங்களின் பல சுவையான பகுதிகளுக்கு அணி அமைத்துள்ளமையை மேற் காட்டிய சான்றுகள் நவில்கின்றன.

இவை மூன்றும் சுவை அணி பற்றிக் கூறவில்லை. குவலயா நந்தம் 2—இல் மூல நூலின் உரையாசிரியர் தான் அதனைக் குறிப் பிட்டுள்ளார். மெய்ப்பாடுகள் உணர்வின் வெளிப்பாடு என்பதால் அதனை அணியாகக் கொள்ளவில்லை போலும்.

இந்நூல்கள் தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேறு, தொடர்நிலைச் செய்யுட்குறி (சந், குவ. 2) காவியலிங்கம், காவியப் பொருள் ஒழி (குவ. 1) எனச் சில அணிகளைக் குறிப்பிடுகின்றன. இவை தரும் விளக்கத்திற்கும் காப்பியத்திற்கும் எவ்வித தொடர் பும் இல்லை. பின் ஏன் இப்படிப் பெயரளித்தன என்பது புரியாத புதிராய் உள்ளது. காவியலிங்க அணியை மாறன் அலங்காரமும் கூறுகிறது.

நுண்ணிய வேறுபாடுகளுடனே பல அணிகள் அமைந்திருப் பினும், ஒன்றின் மாறுபட்டது பிறிதொரு அணியாகக் காட்டினும் (பெருமை-சிறுமை; பிறிதின் குணம்—பிறிதின் குணம் பெருமை; நன்மையைக் காட்டித் தின்மையை நீக்கல்-தின்மையைக் காட்டி நன்மையை நீக்கல்) இன்னும் பெரும்பான்மையான அணிகளுக்கு நாம் இலக்கியச் சான்றுகளைக் காட்ட முடியும். அந்நிலையில் இந்நூல்கள் தமிழ் இலக்கண உலகிற்குத் தகுதிப் பொருள்களாக அமைகின்றன.

Koviloor Digital Library

குவலயானந்தம்—1

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில் உள்ள இதன் கையெழுத்துப் பிரதியை ஒப்புமைக்காக வெளியிட அனுமதி அளித்த, ஐயரவர்களின் பேரர், நூலகத்தின் கௌரவப் பாதுகாவலர் உயர்திரு க. சுப்பிரமணியன் அவர்கட்கு என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையெழுத்துப் பிரதியை ஏட்டுச்சுவடியுடன் ஒப்பு நோக்கிச் சில திருத்தங்களை உணர்த்திய நூலக உதவிப் பாதுகாவலர் திரு. மு. கோ இராமன் அவர்கட்கும் என் நன்றி.

இதனைப் பிரதி செய்தவர் 'திருமயிலை அம்மை ஆண்டியப்பக் கிராமணி குமாரர், அண்ணாசாமி உபாத்தியாயர்' என்று நூலுள் காணப்படுகிறது.

Koviloor Digital Library

Koviloor Digital Library

குவலயானந்தம்-1

கடவுள் வணக்கம்

1. கயவதனன் ஐந்துகரன் கங்கை சுதன் ஈறிருதிண்
புயன் அயன் மால் பரவ வரும் புனிதன் மலர்ப்பதம்
நினைவாம்

2. ஐந்தலை அகிதலனை அணியும் வேணியோன்
ஐந்து எனும் மானனன் அறியொணாப் பயன்
ஐந்து எழுத்து உறைபவன் அறியொணாப் பொருள்
ஐந்து என வளர்பவன் அடியைப் போற்றுவாம்

சிறப்புப் பாயிரம்

3. பொற்புள வடஆல் நிழல் தவிசு இருந்து
சிற்பரன் ஆகத் தென்திசை நோக்கி
அற்புத ஞானம் அரும்தவ முனிவோர்க்கு
உற்பணம் ஆக உரைத்து அருள் புரிவோன்
பதமலர் இறைஞ்சிப் பண்ணு செந்தமிழின்
கதி தவறாமல் கற்று உணர்ந்தோரை
அதிசய முறுவல் அணிந்திட வேண்டித்
துதி உறு வடநூல் சொல் அணியாகி
மருவிய மீமாங்கிசைக் கடல் அமுதத்து
அருள் பொருள்ஆகி அருந்தவ ஞானக்
குருபரன் அனைய குறுமுனிக் குரிசில்
இருநிலம் அதனில் இயல்தமிழ் ஆன
தொன்னூல் செய்த சிவ வியாகரண
முன்னூல் பயனை முழுதும் எடுத்துப்
பின்னூல் ஆகப் பிறங்கு அலங்கார
நன்னூல் பெயரும் குவலயானந்தம்

Koviloor Digital Library

எனவும் வழங்க இலக்கியம் காட்டி
அனைவரும் உணர ஆக்கினன் இலக்கணத்
தினகர மேனிச் சிவன் உபதேசம்
மனதினில் உணர்ந்த வாதவூரானே

வடமொழி அலங்கார நூலாகிய மீமாங்கிஸையின் பொருள் உணர்ந்து அகத்திய முனிவர் யாத்த சிவவியாகரணம் எனும் நூலை முதல் நூலாகக் கொண்டு மாணிக்கவாசக சுவாமிகளால் குவலயானந்தம் என்றபெயருடன், இலக்கணத்திற்கு இலக்கியமும் உரையுடன் இயற்றப் பட்டது.

4. நடவாத மொழிகளை நடத்தவும் பிளை ஒருவர்
நடவாதது எனத் தட்டிலோ
நாலுடன் இரண்டாகும் ஆறு அங்கம் அதன்நிலை
நடந்திடும் எனச் செய்யவும்
படிமிசையிலே ஒருவர் கல்வி வல்லமையினால்
பாடி வருகவி அதனைப்
பழுதுஎனத் தட்டியே பகடனம் செய்ததைப்
பண்ணினி மையாற் பார்க்கவும்
கடிகைதனில் ஊறு கற்பனைகள் பல செய்யவும்
காசியின் முன்னூல் எனக்
கருதிடும் இலக்கணம் ஆனதுஓர் நூலினைக்
கண்டித்து நீக்கி விடவும்
திடம் உதவும் குவலயானந்தம் எனும் நூலினைச்
செய்தனன் சகலகலையும்
தேர்ந்து வளர் மாணிக்கவாசகன் எனும் ஞான
தேசிகச் சிவயோகியே

5. மண்டலம் சொல் வரகுண பாண்டியன் முன் ஞான
மாமறையோர் அலங்கார வடசொல் ஆகக்
கொண்டியலால் உரைப்பதனால் கூடல் வாழும்
கொற்றவன் மீனத்துவசக் குரிசில் நன்பாய்த்
தண்டமிழால் விளக்கும்என வாதவூரன்
சாற்றினான் வடமொழியால் திரித்து உலாவும்
எண்டிசை என் மீமாங்கிசை எனும்நூலின்
இயல்பு அனைத்தும் குவலயானந்தம் என்றே

உறுப்பியல் அணி வகுப்பு

1. உயர்திணை அஃறிணை பெயர்ச்சொல் வினைச்சொல்
பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் வகை
ஆண்பால் பெண்பால் பலர்பால் வேற்றுமை
இறப்பு எதிர்வு நிகழ்வு எனும் காலம் மூன்று

Koviloor Digital Library

தன்மை முன்னிலை படர்க்கை மூவிடம்
கோட்பொருள் புனைபொருள் இடுகுறி காரணம்
இடுகுறிப் பொதுவும் இடுகுறிச் சிறப்பும்
காரணப் பொதுவும் காரணச் சிறப்பும்
பகுபதம் பகாப்பதம் விகாரத்து ஒற்றுமை
ஆறு வழக்கியல் இயற்சொல் திரிசொல்
திசைச்சொல் வடசொல் முன்மொழி பின்மொழி
மறுமொழி இணைமொழி காரணச் செலவு
காரியச் செலவு காரணம் காரியம்
உபமேயப் பொருள் உபமானப் பொருள்
உதாரணச் செலவு விசேடணம் விசேடியம்
கருத்தன் கரும முடிவு சொல் சொற்பயன்
பொருள் பொதுச் சிறப்பு உளக்குணம் மெய்க்குணம்
ஐவகைப் புணர்வு யோகம் வியோகம்
ஆதாரப் பொருள் ஆதேயப் பொருள்
உயர்ச்சி தாழ்ச்சி சமம் என அறைதல்
அறுவகை அலங்காரத்து உறுப்புஎன் என
அறியப் பெறல் என அறைந்தனர் புலவர்

உயர்திணை

2. ஆண்பால் பெண்பால் ஒருமொழி பெருமொழி
திரள்மொழி ஆவது உயர்திணை ஆகும்

அஃறிணை

3. பலபால் பெயரில் ஒன்றும் பலவும்
அஃறிணை எனவே அறைந்தனர் புலவர்

பெயர்ச்சொல்

4. பல பொருள் பெயரே பெயர்ச்சொல் என்ப

வினைச்சொல்

5. பல தொழில் பெயரே வினைச்சொல் என்ப

பொருள்

6. உயர்திணை அஃறிணை இருதிணை தனிலும்
வரும் பெயர் பலவும் பொருள் என அறையும்
7. உயிர்ப்பொருள் உயிர்இலாப் பொருள் என்று இருவகை.

உயிர்ப் பொருள்

8. ஊருதல் பறப்புதல் நடப்புதல் எனவே
மூவகை ஆகும் உயிர்ப் பொருள் இனமே

Koviloor Digital Library

உயிரிலாப் பொருள்

9. இயற்கை செயற்கை இருவகை இனமும்
உயிரிலாப் பொருள் என்று உரைத்தனர் புலவர்

உயிர்ப்பொருள் பொதுக்குணம்

10. ஆகாரம் நித்திரை மைதுனம் பயம்
ஏகுதல் வருதல் இருப்புதல் ஆக்கம்
துக்கம் சினம் மனம் வலிவு நோக்கம்
கேள்வி துவேடம் இளமை நோவு
மூப்பு வளர்ச்சி எனப் பத்தொன்பதும்
உயிர்ப் பொருள் இனத்துப் பொதுக் குணமாகும்

மானிடர் சிறப்புக்குணம்

11. பாடல் படித்தல் கொள்ளல் கொடுத்தல்
அணிதல் புனைதல் முதல் தொழில் பலவும்
மானிடர் சிறப்புக் குணமெனஅறையும்

பொருள் உணர் காரியம்

12. உருவம் இரசம் வாசம் பரிசம்
சத்தம் எண்ணல் அளவு புத்தி
எனும் இரு நான்கும் பொருள் உணர் காரியம்

13. கண்ணால் அறிதல் நிறமுடன் நெடுமை
குறுமை தூரம் சமீபம் வடிவு
கூடல் பிரித்தல் அவை உளப் பொருளே

நாவினால் அறிவது

14. சுவையும் பொருளின் விதமாகும்மே

நாசியால் அறிவது

15. நற்கந்தம் துர்க்கந்தம் இவை அணி பொருளாகும்

பரிசம் அதனால் அறிவது

16. பாரம் வலிமை மெலிமை சூடு
குளிர்ச்சி கூர்மை மழுங்கலோடு அணி பொருள்

சத்தம் அதனால் அறிவது

17. சத்தம் அதனால் அறிவது புவியின்
மற்றோர் உரைக்கும் வசனம் ஒலி பொருள்

எண்ணத்தினால் அறிவது

18. கூட்டம் இத்தனை இவ் அளவு எனும் குணிதம்
19. அளவின் அதினால் அறிவது நீளம்
அகலம் இராசிக் குவியலும் ஆகும்

Koviloor Digital Library

புத்தியினால் அறிவது

20. நன்மை தின்மை துவேடம் சின்மனம்
உறவோடு ஆசை அணியும் பொருள் ஆகும்மே

21. சமம் விசேடம் சமுவாயம் எனமூ
வகைப் பொருளாலும் அறிவதும் உளதே

சமம்

22. இம்மனை போல் இம்மனை எனவும்
இம் மாட்டைப் போல் இம்மாடு எனவும்
வரும் இவை பலவும் சமம்என அறையும்

விசேடம்

23. இம்மனைக்கு இம்மனை விசேடம் சித்திரம்
இம்மணிக்கு இம்மணி விசேடம் சோதி
எனவே வழங்கும் விசேடத்தின் பொருள்

சமுவாயம்

24. மண்ணோர் செயலால் கடன் எனும் பொருளாய்
நூலோர் செயலால் படம் எனும் பொருளாய்த்
திரிந்து வருதல் சமுவாயம் எனும்

இடம்

25. மண் விண் புனல் அனல் வாயு திசை மனம்
காலமோடு ஆன்மா ஒன்பதும் பொருள் இடம்

காலம்

26. இருள் பகல் விரகம் இளமை மூப்புக்
கோடை குளிர் பனி ஆவது காலம்

சினை

27. கை கால் கண் செவி மார்பு புயம் முலை
தலை முகம் இதழ் விரல் இவை சினையாகும்

குணம்

28. செம்மை கருமை வலிவு மெலிவு
குறுமை நெடுமை சிறுமை பெருமை
பழமை புதுமை இவை பல குணமே

தொழில்

29. போக்குவரத்து முதல் ஆகிய செயலாம்
வினை அனைத்தினையும் தொழில் என அறையும்

ஆண்பால் ஆவன

30. அன் ஆன் அர் ஆர் என வரு விகுதியும்
விறல் திறல் ஏந்தல் தோன்றல் கடவுள்

Koviloor Digital Library

நம்பி ஆடூஉ விடலை கோ வேள்
குரிசில் ஏறு சியம் மங்குல்
வெற்புக் கெப்புலி வேந்து தரு களிறு
இன்னவை பலவும் ஆண்பாற்கு உரித்தே

பெண்பால் ஆவன

31. அள் ஆள் ஆர் எனவே வரு விகுதியும்
மின் கொடி கொம்பு மதி மணி மயில் குயில்
மான் கன்னி மலர் மது வஞ்சி மாது
சுரிகுழல் மகடூஉக் காந்தை வனிதை
சுந்தரி அமுதை நாரி சிறுமி
அணங்கு கார் இழை ஏந்திழை தோகை
கோதை ஆயிழை காரிகை பேதை
பெதும்பை மங்கை மடந்தை அரிவை
தெரிவை அபிலை வல்லி மானினி
காமினி மோகினி மாலினி நிதம்பினி
அங்கனை பூவை பாவை நங்கை
உத்தமை பிரமணி இராமை தோழி
செவிலி தையல் மெல்லியல் என வரும்
இன்னவை பலவும் பெண்பாற்கு உரித்தே

பலர் பால் ஆவன

32. ஆண் பெண் அறிமொழி நிலை ஆகிப்
பகுபதம் ஆயினும் பகாப்பதம் ஆயினும்
இ உ ஐ இவை ஈறு ஆகவும்
மரலளயண்ன இவை ஈறு ஆகவும்
வரும் பெயர் யாவும் பலர்பாற்கு உரித்தே

வேற்றுமை

33. எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்த் தோன்றி
இணங்கிய வேற்றுமையே ஏழு என அறையும்

முதல் வேற்றுமை

34. அவன் இவன் அவள் இவள் அது இது ஒன்றே

இரண்டாம் வேற்றுமை

35. ஐகாரம் ஈறாய் ஆவது இரண்டே

மூன்றாம் வேற்றுமை

36. ஆவே ஒடே ஆவது மூன்றே

நான்காம் வேற்றுமை

37. குப் பொருட்டுக்.கொள்வது நான்கே

Koviloor Digital Library

ஐந்தாம் வேற்றுமை

38. நின்றும் காட்டிலும் நிமித்தம் இன்னும்
ஐந்தாம் வேற்றுமை ஆகி வருமே

ஆறாம் வேற்றுமை

39. துவ்வும் உடையவும் ஆறாம் வேற்றுமை

ஏழாம் வேற்றுமை

40. இலும் இலேயும் ஏழாம் வேற்றுமை

காலம்

41. இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே

மூவிடம்

42. தன்மை முன்னிலை படர்க்கை என்ன
மூவிடம் உளது என மொழிந்தனர் புலவர்

தன்மை

யான் என் எம் எனல் தன்மை ஆகும்

முன்னிலை

நீ உன் உம் எனல் முன்னிலைக் குறியே

படர்க்கை

அவன் அங்கு என்பது படர்க்கை ஆகும்

வினா

யார் எவன் என்பது வினா மொழி ஆகும்
அவன் இவன் என்பது வினாவுத் தரமாம்
இவன் என வருதல் முன்னிலைக் குறியாம்
அவன் என வருதல் படர்க்கைக் குறியாம்
ஏ ஆ ஓ எனும் உயிரீறு முன்னிலை
வினா வினாலே மொழியப் பெறுமே

காரியம்

43. புனைதல் கொள்ளல் என இரு காரியம்

44. பிறப்புதல் புனைதல் சேருதல்கொள்ளல்

45. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும்
காரணம் ஆறும் புனைதல் கொள்ளல்
என வரும் காரியம் இரண்டினும் பிரிவாம்

Koviloor Digital Library

ஆண்பால் கோட் பொருள்

46. அருந்துதல் அணிதல் வாகனம் விருதும்
ஆயுதம் ஆடை காதலி தோற்றம்
தந்தை தாய் கிளை ஆதிபம் செல்வம்
இசை என வரும் ஈரேழு இவை ஆண்பாற்
கோட் பொருள் எனவே கூறப் பெறுமே

ஆண்பால்புனைபொருள்

47. வடிவு நிறமும் குணமும் அவயவமும்
நீதியும் கல்வியும் வலியும் கருமமும்
கருணையும் வாய்மையும் மென்மை பதினொன்றும்
ஆண்பால் துதிமை அனையும் புனை பொருள்

பெண்பால் கோட் பொருள்

48. அருந்துதல் அணிதல் வாகனம் ஆடை
கணவன் தேற்றம் தந்தை தாய் கிளை
செல்வம் எனும் இவை பெண்பால் கோட் பொருளே

பெண்பால்புனைபொருள்

49. வடிவு நிறம் குணம் அவயவம் நடை நகை
பார்வை வசனம் எனும் இரு நான்கும்
பெண்பால் துதிமை அணியும் புனை பொருள்

பலபால் புனை பொருள்

50. பண்பு புனை வளம் காலம் உறுப்பு இடம்
ஐந்தும் பலபால் துதிமைப் புனை பொருள்

51. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும்
ஆறு காரணமும் புனை இடம் கொள்ளல்

இடுகுறி

52. ஒரு மொழி தொடர் மொழி பொது மொழி என வரும்
இருதிணைப் பொருள் பெயர் இடுகுறி ஆமே

53. இடுகுறி பொது சிறப்பு என இரு பாலே

பொது

54. எப்பால் பொருளினும் பொதுக் குறிப்பு ஆகி
இயம்பும் பொதுச்மொழி இடுகுறிப் பொதுவே

சிறப்பு

55. தனது சாதி இனக் குறிப்பு ஆகி
வரு மொழியும் தொடர்மொழிப் பெயரும்
இடுகுறிச் சிறப்பு என்று இயம்பப் பெறுமே

Koviloor Digital Library

காரணப்பெயர்

56. தொகை நிலை காட்டிப் பகுபதம் ஆகி
வருமொழி பலவும் காரணம் எனப் பெறும்
57. காரணம் என்பது சிறப்பைப் பற்றியுங்
காரணப் பொதுவைப் பற்றியும் வரப்பெறும்

காரணப் பொது

58. பொருள் இடம் காலம் சினைகுணம் தொழில் என
வரும் இவை ஆறும் காரணப் பொதுவாய்த்
திரிசொல் எழுமெனச் செப்பினர் புலவர்

காரணச் சிறப்பு

59. கோட் பொருள் புனைபொருள் எனும் இருவகையும்
உயர்திணைப் பெயரில் காரணச் சிறப்பாய்த்
திரிசொல் எழுமெனச் செப்பினர் புலவர்

பகுபதம்

60. காரணப் பொதுவில் இருதிணைப் பெயரும்
சிறப்பைப் பற்றிய உயர்திணைப் பெயரும்
காலம் தோற்றிய வினையும் பகுபதம்
61. பகுதி விகுதி செய்து தொகுக்கப்
பயன்உறும் பொருளே பகுபதம் ஆகும்

பகுதி, விகுதி

62. முதல் இடை கடை எனத்தான் மூன்றும்
பகுபதப் பாலாய்ப் பகரப் பெறுமே
63. பகுதி முதல் கடை விகுதி யாகும்
இடைநிலை சாரியை சந்தி விகாரம்
நான்கும் இடை என நவிலப் பெறுமே

பகுதி

64. காரணப் பொதுவும் சிறப்பும் பெயர்ச் சொல்
பகுதி எனவே பகரப் பெறுமே

விகுதி

65. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் இ ஐ
ஆய் ஒய் அம் ஒன் ஓய் ஓர் போல்வன
பிறவும் வருகுறில் நெடிலோடு ஒற்று அணி
நேரசை தோன்றுதல் விகுதி எனப் பெறும்

இடைநிலை

66. பகுதி முதலும் விகுதி கடையும்
ஆகி நடுக்கண் தோன்றுதல் இடைநிலை

Koviloor Digital Library

சாரியை

67. அ உ ஐ எ அற்று இற்று அத்து அம்
தம் நம் நும் கு அன் ஆன் இன் என்
இன்னவை பலவும் சாரியை பொதுவே

சந்தி

68. தோன்றல் திரிதல் கெடுதல் எனவரு
மூன்று வகையும் சந்திக்கு உரித்தே

விகாரம்

69. தன் ஒற்று இரட்டலும் தன் இனம் மிகுதலும்
ஆதி நீடலும் தோன்றலும் திரிதலும்
ஈற்றில் உயிர்மெய் தனியே கெடுதலும்
ஈற்றுஉயிர் மெய்யோடு ஈற்றயல் உயிரும்
கெடுதலும் ஈற்றுயிர் உடலாய்த் திரிதலும்
விகாரச் செயலென விளம்பப் பெறுமே

70. பகுதி விகுதி பகுத்துணர்வு ஆகுதல்
ஆண் பெண் பலர்எனும் முப்பால் ஆகும்

ஆண்பால் புணர்ப்பு

71. அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என வரு
விகுதி ஆறும் ஆண்பால் புணர்ப்பாம்

72. ஒருமொழி பெருமொழி திரள்மொழி எனவே
மும்மொழி யெனவே மொழிவதும் உளதே

ஒரு மொழி

73. அவன் இவன் என்பதாகும் ஒருமொழி

பெருமொழி

74. அவர் இவர் என்பதாகும் பெருமொழி

திரள்மொழி

75. அவர்கள் இவர்கள் என்று ஆவது திரள்மொழி

76. அள்எனும் விகுதி திரள்மொழி ஆண்பால்
ஆள் எனும் விகுதி ஒருமொழி ஆகும்

77. ஒன் ஓர் விகுதியும் உறும் ஆண்பாலில்

பெண்பால் விகுதி

78. அள் ஆள் அர் ஆர் எனும் இவை நான்கும்
பெண்பால் புணரும் விகுதி எனப் பெறும்

Koviloor Digital Library

79. காரணம் ஒன்றிய காரியத் திரிவில்
இ ஐ என வரும் ஈருயிர் விகுதி
ஆண் பெண் தனிலும் அணியப் பெறுமே

80. பெண்பால் அதனில் முன்னிலை மொழியால்
ஆய் ஆகும் என்று அறைந்தனர் புலவர்

81. ஆய் ஓய் விகுதி ஆண்பால் முன்னிலை
அணையப் பெறும் என்று அறைந்தனர் புலவர்.

82. காரணம் ஒன்றிய காரியப் பலபால்
அம் எனும் விகுதி அணையப் பெறுமே

83 ஆகார உயிர் முன்னிலை வினாவில்
ஆண்பால் பகுபத விகுதி ஆகும்

84, ஆண் பெண் இரண்டினும் முன்னிலை வினாவில்
பெருமொழிப் பெயரில் ஏகாரம் வருமே

85. இருதிணைப் பெயரினும் ஐய மொழியில்
ஓகார விகுதி ஒன்றப் பெறுமே

86. வடமொழித் திரிவின் அல் என மொழிதனில்
அன் சாரியையும் அகரமும் முன்வரும்

87. பிறப்பு என மொழிதல் வடமொழித் திரிவில்
உகர எழுவாய் ஒகாரம் பெறும்

88. உளைவு எழுவாய் வடமொழித் திரிவில்
பெறுமென வருதலில் ஔகாரம் பெறும்

89. அ ஆ எழுவாய் வடமொழி யானது
அல்என மொழிதலில் நிர்எனும் சாரியை

பகாப்பதம்

90. இடுகுறி ஆகிப் பகுக்கப் பயனற்று
இயலாய் வருபெயர் வினைப் பகாப்பதமே

விகாரம்

91. வலித்தல் மெலித்தல் தொகுத்தல் விரித்தல்
நீட்டல் குறுக்கல் ஆறும் விகாரம்

வழக்கு

92. இயல்பு தகுதி என வழக்கு இருவகை

இயல்பு வழக்கு

93. இலக்கணம் உடையது இலக்கணப்போலி
மரூஉ என மூவகை வழக்கு இயல்பே

Koviloor Digital Library

தகுதி வழக்கு

94. இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
மூன்றும் தகுதி வழக்கு என மொழிப

இயல்பு வழக்கு

95. தேசம் தொழில் முறைசாதி எனவே
வரும் இவை நான்கும் இயல் வழக்குஆகும்

இயற்சொல்

96. காரணத் திரிவுஅற்று இடுகுறி ஆகித்
தம்பொருள் விளங்கும் தமிழ்மொழி இயற்சொல்

திரிசொல்

97. ஒருபொருள் குறித்து வரும் பலமொழியும்
பலபொருள் குறித்து வரும் ஒரு மொழியும்
திரிசொல் என்னச் செப்பப் பெறுமே

திசைச்சொல்

98. பன்னிரு நிலம் எனும் செந்தமிழ் அளவினும்
தமிழ்மொழி பதினேழ் நிலத்தினும் தோன்றித்
தன்குறிப்பு ஆகி வருமொழி திசைச்சொல்

வடமொழி

99. கூறிய இயலினும் திரிவினும் புணர
தனது சிறப்பாய்த் தமிழெனும் பொதுவாய்
வரும் எழுத்து ஒன்றி எழுமொழி வடசொல்

100. இகர எழுவாய் வடமொழிப் புணர்வில்
ஐகார உயிராய் ஆகிவரப் பெறும்

101. யகர எழுவாய் வடமொழி, தமிழில்
இகர உயிர் முன்னிலை புனையப் பெறுமே

102. ரகர எழுவாய் வடமொழி, தமிழில்
அ, இ, உம்முதல் அணியப் பெறுமே

103. லகர எழுவாய் வடமொழி, தமிழில்
இகரமும் உகரமும் முன்னிலை யாகும்

104. முன்மொழி பின்மொழி மறுமொழி இணைமொழி
எனும் இவை நான்கும் காரணம் மாறினும்
செய்யுள் இடத்தும் வழக்கு மொழியினும்
வரப்பெறும் என்று வழங்கினர் புலவர்

காரணச்சொல்

105. பெயர்ச் சொல் பலவும் காரணச் சொல்லே

Koviloor Digital Library

காரியச் சொல்

106. போக்கு வரத்து முதல்பல செயலாம்
வினைச்சொல் அனைத்தும் காரியச் சொல்லே

காரண காரியச் சொல் ஆவன

107. பொருள்இடம் காலம் சினை குணம் தொழில் என
வரும் இவை ஈறாய் முன்தோன்றிடும் மொழி
காரண காரியச் சொல்என அறையும்

காரிய காரணச் சொல்

108. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என
வரும் இவை முதலால் இறுதி தோன்றிடு மொழி
காரிய காரணச் சொல் என்ப பெறுமே

உபமேய, உபமானப் பொருள்

109. ஒப்பனை கொள்வது உபமேயப் பொருள்
ஒப்பனை ஆவது உபமானப் பொருள்

உதாரணச் சொல்

110. இலக்கணம் வந்தவைக்கு இலக்கியம் இது என
இலக்கியம் வந்தவைக்கு இலக்கணம் இது என
எடுத்துக் காட்டல் உதாரணச் சொல்லாம்

இலக்கண, இலக்கியம்

111. இலக்கணம் கருத்து இலக்கியம் அதில் நெறி

கருத்து

112. பொருள் என வல்லோர் புகல்வது கருத்து

பொருள்

113. கருத்து எனப் பெறுவதைத் தொகை வகை விரியால்
சொல்லிய பயனைத் தோற்றுவதேபொருள்

தொகை

114. பொதுமொழிப் பிண்டம் எனவே கருத்தைப்
புகலப் பெறுவது தொகை என அறையும்

வகை

115. கருத்தின் விரிவைக் கற்றோர்க்கு இனிதாய்
வகுத்துக் காட்டல் வகைஎன அறையும்

விரி

116. இலக்கியம் வழக்கம் உடனே கருத்தின்
விதப் பயன் உரைப்பது விரிவு ஆகும்மே

Koviloor Digital Library

தொகை

117. உயர்திணை அஃறிணை இருதிணை தனிலும்
வருபெயர் பொருள்என உரைப்பது தொகையாம்

வகை

118. உயிர்ப் பொருள் உயிர் இலாப் பொருள் என இருவகை
எனப் பிரிவு உரைப்பது வகை ஆகும்மே

விரிவு

119. ஊருதல் பறப்புதல் நடப்புதல் எனவே
மூவகை ஆகும் உயிர்ப் பொருள் தன்இனம்
இயற்கை செயற்கை இருவகை அஃறிணை
உயிர்இலாப் பொருள் என உரைப்பது விரியே

பெயர்

120. உயிர்ப் பொருள் மூன்றும் உயிர்இலாது இரண்டும்
ஐவகை இனமும் பெயர்என அறையும்

ஐம்பூதங்கள்

121. ஐவகை இனமே ஐம்பூதங்களும்

122. நிலநீர் தேயுவாயு ஆகாசம்
எனும் அவை பஞ்சபூதம் எனப் பெறும்

123. நீர் தேயு வாயு மூன்றும் உயிர்ப் பொருள்
நிலம் விண் இரண்டும் உயிர் இலாப் பொருளே

124. ஊருதல் நீர் தேயு நடப்புதல் வாயு
பறப்புதல் என்றும் பகர்ந்தனர் புலவர்

இயற்கை, செயற்கை

125. இயற்கை விண்ணே செயற்கை மண்ணே

126. அவற்றுள்
மாமண் தோல் நூல் எழுவகை உலோகம்
இவையால் செய்வது செயற்கைப் பொருளே

127. தன் தோற்றம் போல் தரிப்பது பலவும்
இயற்கைப் பொருள் என்று இயம்பினர் புலவர்

விசேடம்

128. ஒரு பொருள் உணர்த்தும் சிறப்பு இன மொழியாய்
முன் வரத்து ஆகிப் பகுபதம் பகாப்பதம்
ஒன்றாய்ப் புணரினும் பலவாய்ப் புணரினும்
விசேடணம் என்று விளம்பினர் புலவர்

Koviloor Digital Library

விசேடியம்

129. ஒருபொருள் விளக்கும் இடுகுறி காரணம்
ஆகிய கருத்தன விசேடியம் ஆகும்

130. அதிகாரப் பயன் ஆவது கருத்தன்
அச்செயல் ஆகி வருவது கருமம்
திரக்கடையான கிரியாபதம் முடிவு

131. சொல் சொல்பயன் என்றறிவதும் உளதே

சொற்பயன்

132. கடம் எனும் ஒலி சொல் கடம் எனும் ஒலியைக்
குடம் என அறிவது சொற்பயன் ஆகும்

பொருட் பொதுசிறப்பு

133. இயலாய் மொழிவது பொருள் பதவியலைப்
பண்பு முன் மொழிவதாவது சிறப்பே

குணம்

134. உட்குணம் மெய்க்குணம் என இரு குணமே

மெய்க் குணம்

135. எழுத்துசொல் பொருள் யாப்பு அலங்காரம்
என வருகின்ற பொது மொழி ஆனது
இவை ஐந்தும் மெய்க்குணம் ஆகும் எனப் பெறும்

உட்குணம்

136. தாற்பரியப் பயன் சாதித்து ஒன்றைச்
சாற்றப் பெறும் பொருள் உட்குணம் ஆகும்

யாப்பு

137. யாப்புப் பொது சிறப்பு என இருபாலே

யாப்புப் பொது

138. பொருள் அலங்காரம் எனும் இருபாலும்
யாப்புப் பொது என அறைந்தனர் புலவர்

யாப்புச் சிறப்பு

139. அலங்காரத்தின் அலங்காரத் தொனி
அங்கம் குறிப்பு யாப்புச் சிறப்பே

ஐவகைப் புணர்வு

140. இயற்கருமக் கருத்தன் புணர்வு என
துணைக் கருமக் கருத்தன் புணர்வு என
விடுகருமக் கருத்தன் புணர்வு என

Koviloor Digital Library

கருமணிப் புணர்வு என கருத்துப் புணர்வு என
இவ் ஐந்து வகையானும் எவ்வகை யாப்பும் வருமே

141. முதல் வேற்றுமை ஆகிக் கரும
முடிவு வருதல் இயல்பு எனப் பெறுமே

துணை

142 முதல் வேற்றுமை ஆகவும் கருத்தன்
இரண்டாம் வேற்றுமை ஆகவும் கருமம்
இரண்டாய் முடிவது துணை எனப் பெறுமே

விடுதல்

143. முதல் வேற்றுமை ஆகிக் கருத்தன்
கருமம் அறவே முடிவு வருதல்
விடுதல் எனவும் விளம்பினர் புலவர்

கருமணி

144. மூன்றும் வேற்றுமை ஆகிக் கருத்தன்
முதல் வேற்றுமையாய் ஆகிக் கருமம்
முடிவு வருதல் கருமணிப் புணர்வாம்

கருத்து

145. மூன்றாம் வேற்றுமை ஆகிக் கருத்தன்
முடிவு வருதல் கருத்துப் புணர்வாம்

யோகம், வியோகம்

146. கூடாது ஒன்றிக் கூடுதல் யோகம்
பிரியாது ஈண்டுப் பிரிதல் வியோகம்

ஆதாரம், ஆதேயம்

147. தாங்கல் பெறுதல் ஆதாரப் பொருள்
தரிக்கப் பெறுதல் ஆதேயப் பொருள்

உயர்ச்சி, தாழ்ச்சி, சமம்

148. ஒருபொருட்கு ஒருபொருள் ஒன்றிடு காலை
பெருமை உயர்ச்சி, குறைவது தாழ்ச்சி
பெருமையும் குறைவதும் அல்லது சமமே

149. தன்னிடு குறியும் காரணப் பெயரும்
முன்னிலை ஆகி மொழியப் பெறுமே

150. தன்னிடு குறியும் காரணப் பெயரும்
தன்இயல் தருமம் முன்னிலை ஆகும்

Koviloor Digital Library

2. அணியியல்

வாழ்த்து

1. திங்கள் அணிவேணிச் செழு மறை தன் செம்சரணப்
பங்கயம் முன்கொண்டு அணியைப் பன்னு தமிழில்
செய்வாம்

அணி

2. வளம் பெறு புலமை வரும் அணி உணர்தல்

உவமை

3. இருவகைப் பொருளுக்கு ஒரு புணர்வாக
ஒப்பனை செய்தல் உவமைஅது ஆகும்
4. அலங்காரப் பொருள் ஆகிய கிளைகள்
அணிந்திடும் மூலம் உவமை அது ஆகும்

5. விரித்தல் தொகுத்தல் எனும் இருவகை கொண்டு
உவமை வரும் என ஓதினர் புலவர்

விரித்தல் உவமை

6. உவமையின் வசனம் ஒன்றி வருதல்
விரித்தல் எனவும் விளம்பப் பெறுமே

உவமையின் வசனம்

7. அன்ன அனைய ஆன போல
என்ன நிகர என ஒத்த ஒப்ப
என வரும் இவை பல உவமையின் வசனம்

தொகுத்தல் உவமை

8. உவமையின் வசனம் ஒன்றாது உவமை
தொகுத்தல் எனவே சொல்லப் பெறுமே

அன்னுவயம்

9. ஒருமொழி ஆகிய உவமையின் பொருள்
அதுவே உவமானப் பொருள் ஆகில்
அன்னுவயம் எனவே அறைந்தனர் புலவர்

உபமேய உவமை

10. பிரியாது இரண்டு வகைகொண்டு சமானச்
சொல்லும் உவமை சொல்லுச் சொல்லும்
வரப் பெறில் அதன் பெயர் உபமேய உவமை

பிரதீபகம்

11. உபமான பொருட்கு உபமேயப் பொருள்
ஒன்றி வருதல் பிரதீபகம் ஆகும்

Koviloor Digital Library

12. இப்பொருள் தனக்கு ஓர் இணைப் பொருள் உவமை
இலை என மொழிதலும் ஆகும் பிரதீபகம்

13. உபமானத்தின் ஆதாயத்தால்
உபமேயத்தை அனாதர வாக்குதல்
பிரதீபகம் எனப் பேசினர் புலவர்

14. உபமேயப் பொருள் ஆகும் இவை போல்
உபமானப் பொருள் ஆம் அவள் முகமென
மொழிய வருதலும் பிரதீபகம் என்ப

உருவகம்

15. ஒரு பொருள் உருவம் ஒரு பொருள் செய்து
ஒன்றப் பெறுதல் உருவகம் ஆகும்

16. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும்
காரணம் ஆறினில் வந்தவை தன்னின்
இரண்டு பொருளினும் எய்திடக் காட்டி
ஒன்று படுத்தில் உருவகம் ஆகும்

17. உயர்ச்சி தாழ்ச்சி சமம் எனும் மூன்று
வகையாம் காரணம் அதனின் உருவகம்
பேதகம் தற்குறி எனும் இரு காரியம்
அதனில் பிரிவுற்று ஆறு விதமாம்

பரிநாமம்

18. உபமானப் பொருள் உபமேயம் ஆகி
அடையப் பெற்று ஒரு காரியம் தரும் எனில்
பரிநாமம் எனப் பகரப் பெறுமே

உல்லேகம்

19. ஒரு பொருள் பலவகைப் புனை பொருள் அதனால்
துதிவு செயப் பெறில் உல்லேகமாகும்

20. நினைவு மயக்கம் ஐயம் எனவும்
மூன்று அலங்காரம் மொழிவதும் உளதே

நினைவு

21. ஒரு பொருள் கண்டு இதுக்கு இணை அது எனவே
ஒன்றை நினைத்தல் நினைவு எனப் பெறுமே

மயக்கம்

22. ஒரு பொருள் நோக்கி மற்று ஓர் பொருள் என
மயங்கி வரப் பெறின் மயக்கம் ஆகும்

Koviloor Digital Library

ஐயம்

23. ஒரு பொருள் நோக்கி அதுவோ இதுவோ
என வேறு ஆக எண்ணுதல் ஐயம்

பன்னுதி

24. ஒரு பொருள் தன் இயற் பெயரை நீக்கி
மற்று ஓர் பொருளின் இயற்பெயர் செய்தல்
பன்னுதி எனவும் பகர்ந்தனர் புலவர்

கைதவம்

25. ஓரிடம் வளர் பொருள் மற்றோர் பொருட்பால்
எய்திப் பெயரைப் புனைந்து வரப் பெறில்
கைதவம் ஆம் எனவும் கருதப் பெறுமே

புகழ்ச்சி

26. பொருள் காரியம் பலம் எனும் இவை மூன்றும்
புகழ்ச்சிக்கு உரிய குறிப்பு எனப் பெறுமே

பொருள் புகழ்ச்சி

27. அவற்றுள்
கண்டவை காணாதவை என இருவகை
புனைந்து பிறிதல் பொருளின் புகழ்ச்சி

காரியம் பல புகழ்ச்சி

28. காரியம் பலம் என வரும் இருகுறி அவை
பொய் பாராட்டல் மெய் பாராட்டல்
ஆகிப் பிரிவு அவற்று ஒரு நான்கு ஆகும்

காட்சி

29. உபமேயப் பொருள் ஒன்றி எழாமல்
உபமானப் பொருள் ஓதப் பெறின் அவை
காட்சி எனும் மொழி காட்டினர் புலவர்

அதிசய உருவகம்

30, உபமானத்தில் உபமேயத்தின்
விடயம் செப்புதல் அதிசய உருவகம்

அதிசயம்

31. ஒரு பொருள் மேவிய உச்சித வளமை
மற்றொரு பொருளின் வரவழைத்து ஏற்றித்
தலை தடுமாற்றம் தந்து உரை செய்தல்
அதிசயம் எனவும் அறைந்தனர் புலவர்

ஒரு பொருளின் கண் உள்ள சிறப்பினை மற்றொருபொருளில் உள்ளாதாக ஏற்றித் தலை தடுமாற்றமாகக் கூறல்.

Koviloor Digital Library

அதிசய யோகம்

32. கூடாப் பொருளைக் கூட்டா உரைத்தல்
அதிசய யோகம் அது ஆகப் பெறுமே

அதிசய பலம்

33. காரிய காரணம் தோன்றி வரும் முன்
னதின் பால் ஏது அறியப் பெற்றிடில்
அதிசய பலம் அதாகப் பெறுமே

காரணமும் காரியமும் தோன்றிய பின் வரவேண்டிய ஏது, அவை தோன்றுவதற்கு முன் வரல்.

துல்லிய யோக்கியதை

34. இரு வகைப் பொருளில் ஒரு காலம் தனில்
கருமம் ஒன்றி வந்தால் துல்லிய யோக்கியதை

35. இரு பொருள் குணத்தில் ஒரு பொருள் குணத்தை
உத்தமம் செய்தலும் துல்லிய யோக்கியதை

36. பகையின் இடத்தினும் உறவின் இடத்தினும்
சமம் எனப் பெறுவதும் துல்லிய யோக்கியதை

37. பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் எனும்
ஆறினும் புணரும் துல்லிய யோக்கியதை

38. உலகினில் வழங்கும் உத்தமப் பொருள் தன்
ஒன்று எனச் செய்தலும் துல்லிய யோக்கியதை

39. உபமானத்தில் ஒரு குறை காட்டி
உபமேய்த்தின் உயர்ச்சியது ஆகக்
காரணம் பொருத்திக் காரியமாகச்
செய்யப் பெறுவதும் துல்லிய யோக்கியதை

தீபகம்

40. [illegible]ப் பொருளுக்கு ஒரு புணர்ப்பு ஆகக்
[illegible]ப் பொருள் காட்டிக் கூட்டப் பெறுவது
[illegible]னவே செப்பினர் புலவர்

41. இருவகைப் பொருளுக்கு ஒரு புணர்ப்பு ஆக
[illegible]ணை பொருள் காட்டிப் பொருந்தச் செய்வதும்
தீப[illegible] என்று செப்பப் பெறுமே

உருவகம்

42. ஒரு பொருட்கு ஒரு குணம் எய்திடச் செய்து
மற்று ஓர் பொருளின் மருவும் குணத்தைக்
கூறப் பெறுவது உருவகம் ஆகும்

Koviloor Digital Library

நிதரிசனம்

43. உபமானப் பொருளின் மேவிய இயலை
உபமேயப் பொருள் மேவியதாகச்
செய்யப் பெறுவது நிதரிசனம் ஆகும்

44. காரணம் பெறவே இருவகைப் பொருளின்
ஒரு பொருள் தொழிலைக் காரணம் காட்டிக்
காரியம் வரப் பெறின் நிதரிசனம் என்றனர்

ஒரு பொருளின் தொழில் முன் வேறு ஒருபொருளின் தொழிலைக் காரணம் காட்டி, காரியமாகப் பெறல்.

வியதிரேகம்

45. உவமானத்தில் பொதுவைக் காட்டி
உபமேயத்தில் சிறப்பு காட்டுதல்
வியதிரேகம் என விளம்பப் பெறுமே

புணர்க் கருத்து

46. இருவகைப் பொருளின் ஒரு தொழில் ஒன்றி
இயலாய் விளங்குதல் புணர்க் கருத்து ஆகும்

வியோகக் கருத்து

47. ஒருபொருள் அன்றி ஒருபொருள் ஆனவை
சோபனம் உற்றதெனச் சொல் பெறுதல்
வியோகக் கருத்து என விளம்பினர் புலவர்

48. ஒருகுணம் அன்றி ஒருபொருள் ஆனவை
சோபனம் இலை எனச் சொல்லப் பெறுதல்
வியோகக் கருத்து என விளம்பினர் புலவர்

பரிகாரம்

49. விசேடணம் ஒன்றிய பயன் வரப் பெற்றவை
பரிகாரம் எனவே பகர்ந்தனர் புலவர்
விசேடணம்-இயல்பு அடை

பரிகாராங்குரம்

50. விசேடியம் ஒன்றிய பயன் வரப் பெற்றவை
பரிகாராங் குரமாகப் பகரும்
விசேடியம்-சிறப்பு அடை

புற்புதம்

51. காரணம் ஒன்றாக் காரியம் பல பல
தோன்றப் பெறுவது புற்புதம் ஆகும்

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI CENTRAL LIBRARY 15346 494.8 Cm6

Koviloor Digital Library

சிலேடை

52. ஒரு பொருளின் பெயர் பல பொருள் பெயராய்ப்
பிரிந்து பயன்தரப் பெறுதல் சிலேடை

மறைத்துக் காட்டல்

53. ஒரு பொருள் பயனை வேறு ஓர் பொருளின்
வழியால் தோன்றி வரப் பெறில் அதனை
மறைத்துக் காட்டல் என்மனார் புலவர்

பரியாயம்

54. ஒரு பொருள் இடு குறி ஆகிய பெயரைக்
காரணத் திரிவால் காணப் பெறுவது
பரியாயம் எனவே பகர்ந்தனர் புலவர்

55. ஒரு தொழில் நடத்த உள்ளம் நினைவாய்
வேறு ஓர் தொழிலை விரும்பிப் புரிதல்
பரியாயம் எனப் பகர்ந்தனர் புலவர்

நிந்தையில் துதி

56. நிந்தனை செய் மொழி துதிவு செய் மொழியாய்ப்
பயன்வரப் பெறில் அவை நிந்தையில் துதிவு

துதிவினில் நிந்தை

57. துதிவினைச் செயும் மொழி நிந்தை செய் மொழியாய்ப்
பயன் வரப் பெறின் அவை துதிவினில் நிந்தை

இறந்தது விலக்கல்

58. தன்னுணர்வு அதனால் சமைத்த பொருளைத்
தன் கருத்தாலே தட்டி, நிறுத்தல்
இறந்தது விலக்கல் என்மனார் புலவர்

தான் உணர்ந்து கூறிய ஒரு கருத்தினைத் தானே அதற்குத் தடைகண்டு அத்தடைக்குப் பின் விடையும் கூறல்.

விரோதம்

59. அணியாது இருக்கும் எனும் பொருள் வளமை
அணியப் பெற்றது எனப் பயன் வருதல்
விரோதம் எனவே விளம்பினர் புலவர்

ஒருபொருள் ஒன்றைப் புனைந்து சிறப்புப்பெற வேண்டியிருக்க அதனைப் புனையாதபோதும் சிறப்புப் பெற்றதாகில் விரோதம்.

விபாவனை

60. காரணம் அன்றிக் காரியம் செப்புதல்
விபாவனை எனவே விளம்பினர் புலவர்

Koviloor Digital Library

61. ஓரிடம் உதிப்பது வேறு ஓர் இடத்தில்
உதிக்கப் பெறுதல் விபாவனை ஆகும்

62. ஒரு காலத்தின் ஆகும் பயனை
மற்றொரு காலம் வழங்கப் பெறுதல்
விபாவனை எனவே விளம்பினர் புலவர்

63. ஒரு சினை தரித்த காரியம் அதனில்
காரணம் ஒன்று தோன்றியது விபாவனை

64. ஒரு குணம் கொண்டது மற்று ஒரு குணத்தின்
தொழிலைப் புரிதல் விபாவனை ஆகும்

வியாச நிந்தை

65. கோட் பொருள் புனைபொருள் இருவகை அதனால்
வெறுத்தல் செயப் பெறில் வியாச நிந்தையது ஆகும்

வியாசத்துதிவு

66. கோட் பொருள் புனை பொருள் இருவகை அதனால்
துதிவு செயப் பெறில் வியாசத் துதிவு ஆம்

பண்பிற்துதிவு

67. பண்பு ஒப்பு உவமையால் துதி செய்யப் பெறில்
பண்பிற் துதிவு எனப் பகர்ந்தனர் புலவர்

விசேடக்கரு

68. காரணம் இருக்கையில் காரியம் முடிவிலை
எனப் பயன் வருதல் விசேடக் கருவாம்

அசம்பவம்

69. அசம்பவம்ஆன பயன் வரு கருத்தை
அசம்பவம் ஆகச் செய்யப் பெறுதல்
அசம்பவம் எனவே அறைந்தனர் புலவர்

அசங்கதி

70. காரணம் ஓரிடம் காரியம் ஓரிடம்
காட்டப் பெறுதல் அசங்கதி ஆகும்

விடம்

71. கூட்டுறவு அன்றிப் பிரிந்து இருப்பதை ஒரு
கூட்டுறவு ஆக்குதல் விடம் எனப் பெறுமே

72. இட்டம் இது என எண்ணிய காரியம்
அரிட்டம் அது ஆவதும் விடம் எனப் பெறுமே
விருப்பமாக எண்ணிச் செய்த காரியம் துன்பமாய் முடிதல்

Koviloor Digital Library

அதிகம்

73. ஆதாரத்தினும் ஆதேயம் அதனுக்கு
உயர்ச்சி சொலப் பெறின் அதிகம் என்ப
ஆதாரம் - உவமானம்; ஆதேயம்-உவமேயம்

விதிச்சிறப்பு

74. ஒரு காலத்தின் அரிட்டமும் இட்டமும்
ஒன்றி வருதல் விதிச் சிறப்பு ஆகும்

நுட்பவளர்ச்சி

75. சிறியதைப் பெரியதாய்ச் செய்யப் பெறுதல்
நுட்ப வளர்ச்சி என நுவலப்படும்

வளர்ச்சிநுட்பம்

76. பெரியதைச் சிறியதாய்ப் பேதகம் செய்தல்
வளர்ச்சி நுட்பம் ஆமெனப் பெறுமே

அதிகம்

77. ஆதேயத்தினும் ஆதாரத்தினுக்கு
அதிகம் சொல்வதும் அதிகம் ஆகும்

கற்பம்

78. சிறுமைப் பொருளிடம் பெருமைப் பொருளைச்
சேர்த்து மறைப்பது கற்பம் எனப் பெறும்

அன்னியோன்னியம்

79. இப்பொருள் அதனால் அப்பொருள் வளமை
அப்பொருள் அதனால் இப்பொருள் வளமை
என்னப் பெறுதல் அன்னி யோன்னியம் ஆம்

கூட்டம்

80. ஒரு பொருள் அதனில் பலதுதிமேல் அது
கூறப் பெறுவது கூட்டம் அதாகும்

ஒரு பொருளில் பலவகைப் புகழினை மேல் மேலாகச் சொல்லப் பெறுதலாம்

ஏகாவல்லி

81. ஒன்றுக்கு ஒன்று ஒன்றியது ஆக
மட்டு உரைக்கப் பெறின் ஏகாவல்லியாம்

சாரம்

82. ஒன்றுக்கு ஒன்று மதுரம் செப்புதல்
சாரம் எனவே சாற்றப் பெறுமே

Koviloor Digital Library

ஒன்றுகருமம்

83. கருவி ஒருபுறம் கருமம் ஒரு புறம்
காட்டி ஒன்றப் பெறவரின் அதனை
ஒன்று கருமம் என்று ஓதினர் புலவர்

கருவியை ஒரு புறம் ஆகவும், கருமத்தை மறுபுறமாகவும் வைத்து அவற்றை ஒன்றச் செய்தல்

பரிவருத்தனை

84. ஒரு பொருள் கொடுத்து மற்று ஒரு பொருள் வாங்குதல்
பரி வருத்தனை எனப் பகர்ந்தனர் புலவர்

சமுசயம்

85. அனேகம் பொருளில் பல தொழில் செய்தல்
சமுசயம் எனவே சாற்றினர் புலவர்

அனேக விதமாய் இருக்கின்ற ஒரு பொருளில் பல விதமாகிய தொழில் செய்யப் பெறுதல்.

காவியப் பொருள் ஒழி

86. மலை அது பறக்கின் மாருதம் அதனின்
மரங்கள் இருக்க வழக்கு இலை என்பது
காவியப் பொருள் ஒழி ஆகக் கருதுவர்

காவியலிங்கம்

87. சலுகையும் காட்டி வலிமையும் உரைப்பது
காவிய லிங்கம் எனப் பெயர் பெறுமே
வலிமைக்குக் காரணம் காட்டி உரைத்தல்.

பயனந்து

88. மகிமை புனையும் அகத்து எனும் பெரியோர்க்கு
ஒன்றும் அருமை இலை எனச் செப்புதல்
பயனந்து ஆம் எனப் பகர்ந்தனர் புலவர்

பகாடனம்

89. ஒரு பொருள் உடன் அதா எய்தும் காலம்
தோன்றுவதன் முன் எய்தப் பெறுதல்
பகாடனம் எனப் பகர்ந்தனர் புலவர்

தின்மையைக் காட்டி நன்மையை நீக்கல்

90. ஒரு பொருள் பல் குணம் நன்மை அனைத்தும்
ஒரு குணத் தின்மை ஒதுக்கப் பெறுதல்
தின்மையைக் காட்டி நன்மையை விலக்கல்

ஒரு பொருள் உடையதாயிருக்கும் பல நல்ல குணம் அனைத்தும் ஒரு தீய குணம் பொருந்தியதால் ஒதுங்கி நிற்றல.

Koviloor Digital Library

நன்மையைக் காட்டித் தின்மையை நீக்கல்

91. ஒரு பொருள் பல குணத்தின்மை அனைத்தும்
ஒரு குண நன்மை ஒதுக்கப் பெறுதல்
நன்மை காட்டித் தின்மையை விலக்கல்

தற்குணம்

92. தற்குணம் நீக்கி மற்று ஒரு பொருளின்
மெய்க் குணம் அணிதல் தற்குணம் ஆகும்

சுகுணம்

93. சுயமாய்த் தனது குணம் கொண்டு உறைதல்
சுகுணம் எனவே சொல்லப் பெறுமே

மிளிதம்

94. இரண்டு வகைப் பொருள் ஒன்று ஆகக் கூடில்
பேதகம் தோற்றாது எனப் பயன் வருதல்
மிளிதம் எனவும் விளம்பினர் புலவர்

சுபாவக் கருவு

95. கண்ட பொருள் குறி உள்ள படி சொலிற்
சுபாவக் கருவு எனச் சொல்லப் பெறுமே

கருக்கொளக்கரு

96. உலக மொழியின் மறைப் பொருள் ஆகி
வரப் பெறின் அதனைக் கருக்கொளக்கருஎன்ப

உலக வழக்காகக் காணப்படும் உவமானத்தால் மறை பொருளாகி வரப் பெறுதல்.

காரியம் கொள்ளல்

97. ஆர் ஆகிலும் ஆகில் என்ன
காரியம் ஆவது கருத்து எனச் சொல்வது
காரியம் கொள்ளல் எனப் பெயர் பெறுமே

மிஞ்சு கரு

98. விதானம் சௌரியம் எனும் வினைப் பெயரில்
பொய்த் தோற்றம் பெறப் புகலப் பெறில் அவை
மிஞ்சு கரு என விளம்பினர் புலவர்

நிருபி

99. இடுகுறி ஆயினும் காரணம் ஆயினும்
ஒரு பொருள் பெயரால் வழங்கும் மொழியைக்
காரணம் காட்டி நிலைத்திடச் செய்ய

Koviloor Digital Library

வரப்பெறின் அதனை நிருடி எனப் பெறும்

ஒருபொருளுக்குத் தரும் பெயரைக் காரணப் பெயரால் அன்றி இடுகுறிப் பெயரால் காரணம்காட்டி அந்தப் பொருளுக்கு ஆகும் எனக் கூறல்.

ஏதுத்துதிவு

100. ஏதுவைக் காட்டி ஒரு பொருள் தன்னைத்
துதிவு செயப் பெறின் ஏதுத் துதிவாம்

தன்னியல் தருமத்துதிவு

101. எவ்வகைப் பொருட்கும் இயல் தருமம் சொலில்
தன்னியல் தருமத்துதிவு எனப் பெறுமே

ஒரு பொருளின் தருமத்தினைத் துதியாகச் சொலின் தன்னியல் தருமத்துதிவாம்.

சீர்பெறச் சமைத்தல்

102: இலக்கிய பொருளை இயைந்த சிறப்பாய்ச்
செப்பப் பெறுதல் சீர்பெறச் சமைத்தல்

அற்ப மகிட்சி

103. ஒருகாலம் தனில் வேண்டிய பொருளை
மற்ற ஒரு காலம் மருவப்பெறுதல்
அற்பமகிட்சி ஆகப் பெறுமே

எண் பரியாயம்

104. ஒருவகைக் கூட்டம் ஒருவகைத் தொழிலால்
தேற்றப் பெறுவது எண் பரியாயம்

105. ஆயம்

நாடுபுகழ்ச்செழியன் நகரில் நதியில் விளையாட வந்த மின்னார்கள் ஆதித்தன் தன்னளவாம் எனுஞ் செய்யுளில் நதியில் விளையாட வந்த மின்னார்கள் பன்னிருவரென வேண்டியதை யாதித்தன் றன்னளவாமெனப் பெற்றமையாலாயமெனக் கண்டுக் கொள்க, பிறவுமன்ன.

உருவக மாற்றம்

106. நிருணயம் ஆகவே நாடிய பொருளை
மற்று ஓர் பொருள் என ஓதப் பெறுவது
உருவக மாற்றம் எனப் பெயர் பெறுமே

சிலேடை மாற்றம்

107. ஒரு புணர்ப்பு ஆகிய ஒரு மொழிப் பெயரை
வேறு ஓர் பொருளாய் விளங்கச் செய்தல்
சிலேடை மாற்றம் எனப் பெயர் பெறுமே

Koviloor Digital Library

ஒருபொருளுடன் புணர்ந்துள்ள ஒரு சொல்லை வேறு ஓர் பொருளாய்க் கூறல்.

உருவக மயக்கம்

108. உருவக மயக்கமும் மயக்கக் கருத்தும்
ஒன்றப் பெறுவது உருவக மயக்கம்

உருவகமும் மயக்கமும் இணைந்து வரல்

அதிசய பேதகம்

109. ஒரு பொருள் அதனை உயர்ச்சியது ஆக
ஒப்பனை அன்றித் தணித்திடச் செய்தல்
அதிசய பேதகம் ஆக அறையும்

ஒரு பொருளை, உவமை இன்றி, உயர்ச்சியுடையதாகத் தனிப்படச் செய்தல்.

எழிற்பொருள் உவமை

110. எழில் பெறு பொருளை ஒப்பனை ஆகத்
தொழில் செய்து கூறினும் இயல்பாய்க் கூறினும்
எழிற் பொருள் உவமைஎன்று இயம்பினர் புலவர்

111. எழிற்பொருள் உவமை இயம்பிடும் காலை
வினா மொழிதனினும் விளம்பப் பெறுமே

பெயர் நிரல்நிறை

112. உபமானப் பொருள் பலவும் ஒருபுறம்
உபமேயப் பொருள் பலவும் ஒருபுறம்
ஒன்றப் பெறுதல் பெயர் நிரல்நிறையே

நிறைவுப் புனைதல்

113. கடல் ஒப்பனை செய்தல் நிறைவுப் புனைதல்
ஒப்பனை – உவமை

குறைவுப் புனைதல்

114. வெளி ஒப்பனை செய்தல் குறைவுப் புனைதல்
வெளி - ஆகாயம்

வளர்ச்சிப் புனைதல்

115. மலை ஒப்பனை செய்தல் வளர்ச்சிப் புனைதல்

கற்பிசைப் புனைதல்

116. வழக்கம் அது ஆகும் உபமானத்தை
வேற்றுமை ஆகக் கற்பனை செய்தே
ஒப்பனை கூறல் கற்பிசைப் புனைதல்

பொதுவாக ஒப்புமை ஆக்கப்படும் உவமானத்தில் வேற்றுமை ஒன்றினைக் கற்பித்து உவமித்தல்.

Koviloor Digital Library

விநோதப் புகழ்ச்சி

117. உபமானப் பொருள் ஆகும் குறியில்
சிலவற்றினைப் பழித்து ஒன்று இணையாகச்
செய்யப் பெறுதல் விநோதப் புகழ்ச்சி

புகழ்ச்சித் துணிவு

118. காரணம் காட்டி ஒருபொருள் அதனை
ஒப்பனை ஆக நிச்சயம் செய்தல்
புகழ்ச்சித் துணிவு எனப் புகன்றனர் புலவர்

அரூபகம்

119. ஒரு பொருள் இடுகுறி ஆகிய பெயரைக்
காரணம் காட்டி மறுத்திடச் செய்தல்
அரூபகம் எனவே அறைந்தனர் புலவர்

சாமிதை

120. கற்பனை ஆக ஒரு பொருள் செய்து
கற்பனைப் பொருளாய் ஒப்பனை கூறல்
சாமிதை எனவே சாற்றப் பெறுமே

அணி இயல் முற்றும்

3. சித்திர இயல்

வணக்கம்

1. இந்து அணி வேணி இறையோனைப் போற்றி செய்து
செந்தமிழினால் உரைப்பாம் சித்திர இயலின் வளமே

சித்திர இயல்

2. நால்வகைப் புலமை நால்வகைக் கவிதை
எண்கணப் பொருத்தம் சங்கை விகற்பம்
ஐயிரு குற்றம் அகடகடனம்
எழுவகை மதமே எண் நான்கு உத்தி
பாடம் கருத்துப் பல புணர் அணிவிதம்
இன்னவை பிறவும் சித்திர இயலே

புலமைத்திறம்

3. கவியொடு கமகன், வாதி, வாக்கி
என நால்வகை ஆம் புலமைத் திறமே

கவி

4. ஆக மதுரம் சித்திரம் வித்தாரம்
என வரும் பாவகை பாடுவோன் கவியே

Koviloor Digital Library

கமகன்

5. ஞாபகம் செம்பொருள் நடையின் எப்பொருளும்
காசின்றி உரைப்போன் கமகன் ஆகும்

வாதி

6. ஏதுவும் மேற்கோள் எடுத்துக் காட்டிப்
பேதின் அளவும் செய்து தன் சொல் நிறுவி
வாதில் பிறன் சொல் மறுப்பவன் வாதி

வாக்கி

7. அறம் பொருள் இன்பம் வீடு எனும் திறங்கள்
கேட்க வேட்க இனிது எனக் கூறும்
ஆற்றல் உடையோன் வாக்கி ஆகும்

கவிதை

8. ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என
நான்கு கவிதைத் திறமே

ஆசு

9. கொடுத்த பொருளில் தொடுத்த இன்பத்து
அடுத்த பொழுதில் பாடுவது ஆசு

மதுரம்

10. தொடையும் தொடைக்கண் விகற்பமும் துதைந்து
உருவகம் முதலாகிய அலங்காரம்
உட்கொண்டு ஓசை பொருள் உடைத்து ஆக
உய்த்து உணர்வோரது உள்ளங்கட்கு
மாகடல் அமுதம் போல் பாடுவது மதுரம்

சித்திரம்

11. மாலை மாற்றே சக்கரம் சுழிகுளம்
ஏகபாதம் எழு கூற்றிருக்கை
காதை கரப்பே கரந்து உறைப் பாட்டே
பாத மயக்கே பாவினம் புணர்ப்பே
கூட சதுக்கம் கோ முத்திரிகை
ஓர் எழுத்து இனத்தால் உயர்ந்த பாட்டே
சித்திரப் பாவே விகற்ப நடையே
வினாவுத்தரமே சருப்பதோ பத்திரம்
சார்ந்த எழுத்தே வருக்கம் ஆறும்
வடநூற் கடலுள் ஒருக்குடன் வைத்த
உதாரணம் நோக்கி விருத்தம் நிறைத்த
மிறைக் கவிப் பாட்டும்
தெரியப் பாடுவது சித்திர கவியே

Koviloor Digital Library

வித்தாரம்

12. மும்மணிக் கோவையும் நான் மணி மாலையும்
முதுகவி வெண்பாவும் மடலூர்ச்சியும்
கிரீடையும் கூத்தும் பாசண்டத் துறையும்
விருத்தக் கவிதையும் இயல் இசை நாடகமும்
விரித்துப் பாடுவது வித்தார கவியே

கணம்

13. நீரின் கணமும் நிலத்தின் கணமும்
தீயின் கணமும் செங்கதிர்க் கணமும்
அந்தரக் கணமும் மாருதக் கணமும்
இந்திர கணமும் சந்திரகணமும்
எனப் பெறும் பிறவும் அன்ன
நிலனும் நீரும் நிலவும் இயமானனும்
நலமிகு முதல்வரின் மற்ற நாலும் ஊனம்

சங்கை விகற்பம்

14. ஒன்றிய சங்கை ஒன்றாச் சங்கை
என இரு சங்கை இயம்பப் பெறுமே

ஒன்றாச் சங்கை

15. காரணத்து இயலும் காரியத்து இயலும்
ஒன்றி வருவது ஒன்றாச் சங்கை

ஒன்றிய சங்கை

16. காரணத்து இயலைப் புணராமல் பெறு
காரியத்து இயலும் காரியத்து இயலைப்
புணராமல் பெறு காரணத்து இயலும்
இருவகை ஒன்றிய சங்கை எனப்பெறும்

17. பல்பொருள் குறித்த ஒரு சொல் பதம் அது
உபமேயம் ஆயினும்உபமானம் ஆயினும்,
வரப்பெறில் ஒருவழி ஐயம் தோன்றும்

ஐயிரு குற்றம்

18. குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறு கொளக் கூறல்
வழூஉச் சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்று ஒன்று விரித்தல்
சென்று தேய்ந்திறுதல் நின்று பயன் இன்மை
என்று இவை ஈர்ஐங்குற்றம் நூற்கே

Koviloor Digital Library

குன்றக் கூறல்

19. பிரியாப் பெருமை பிரிந்தது எனப் பொருட்கு
அறிஞோர் உரைப்பது குன்றக் கூறல்

மிகைபடக் கூறல்

20. ஒருபொருள் குணத்தில் பலபொருள் குணத்தை
விதி ஒப்பனை செய்தல் மிகைபடக் கூறல்

கூறியது கூறல்

21. ஒருகால் சொல் மொழி ஓர் தொடர்பு அதனுள்
கூறப் பெறுவது கூறியது கூறல்

மாறு கொளக் கூறல்

22. ஒரு பொருட்கு எய்திய உளச் சிறப்பை மற்று
ஒரு பொருளுக்கு எய்தல் ஆகச் செய்யப்
பெற்றது ஆகின் மாறு கொளக் கூறல்

வழூஉச் சொல் புணர்த்தல்

23. மகிழ்வுறு தூக்கின் மனம் அறிவு அன்றி
இகழ் அற சொல் வழூஉச் சொல் புணர்த்தல்

மயங்க வைத்தல்

24. ஒரு பதம் இரு பொருள் பொதுப் பெயராகி
வரப் பெற்று ஐயம் தரும் எனின் அதனை
மயங்க வைத்தல் என்மனார் புலவர்

வெற்றெனத் தொடுத்தல்

25. புவியின் வளர் பொருள் புனைவது நீக்கிப்
புனையாப் பொருளைப் புனைந்தது எனப்பயன்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
எனும் தந்திரத்தால் பதத்தைப் பிரித்துத்
தொகுக்கில் தோற்றிடில் வெற்று எனத் தொடுத்தல்
எனும் குற்றம் பெறும் என்மனார் புலவர்

மற்று ஒன்று விரித்தல்

26. சிறுமையைப் புனைபொருள் பெருமையைத் தரும் எனச்
செய்யப் பெறுவது மற்று ஒன்று விரித்தல்

சென்று தேய்ந்திறுதல்

27. கருமம் அன்று இது கருத்தன் விசேடணம்
எனப் பொருள் செய்து கருமம் நீக்கி
முடிந்தது எனப் பெறில் சென்று தேய்ந்து இறுதல்

Koviloor Digital Library

நின்று பயன் இன்மை

28. இயல்பாய்த் தோன்றும் இடுகுறிப் பெயரைக்
காரணபதத்தால் கருதிடச் சொல் பெறின்
நின்று பயன் இன்மை என்றனர் புலவர்

அகடன கடனம்

29. அறிஞோர் உரைத்த செய்யுளில் குற்றம்
ஆக்கிப் பிரித்தும் அல்ல எனச் செய்தல்
அகடன கடனம் என்று அறைந்தனர் புலவர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ
கடவுள் துணை

சந்திராலோக மூலம்.

இஃது
இராமநாதபுரம்
ஸம்ஸ்தான வித்வான்—சதாவதானம்

முத்துசாமி ஐயங்காரவர்கள்

இயற்றியது.

மதுரைத் தமிழ் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

"செந்தமிழ்"ப்பிரசுரம்—உஅ

மதுரை :
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.
1909

Koviloor Digital Library

Koviloor Digital Library

சந்திராலோகம்

வாழ்த்து

I. அமிழ்தினும் இனிய தமிழ்மறை அருளிய
வகுளா பரணன் வனசமென் மலரடி
சிந்தை வைத்து இயம்புவல் செய்யுட்கு அணியே

மகிழம் பூவை அணிந்த நம்மாழ்வாரின் தாமரைத் திருவடிகளைச் சிந்தையிற் கொண்டு அணியிலக்கணம் கூறுகிறேன்.

அணி

2. அணிதான் பொருள் சொல் என இரண்டு அவற்றுள்
பொருளணி ஒன்றே சிறப்பு எனப் புகல்வர்

பொருளணி, சொல்லணி என்ற இரண்டு பிரிவுகளில் பொருளணி சிறப்புடையதாகும்.

பொருளணி

3. அதுவே உவமை பொது நீங்கு உவமை புகழ்பொருள்
உவமை எதிர்நிலை உருவகம் திரிபே
பலபடப் புனைவே நினைப்பு மயக்கம்
ஐயம் ஒழிப்பு தற்குறிப்பு அதனோடு
உயர்வு நவிற்சி ஒப்புமைக் கூட்டம்
விளக்கு பின்வரு விளக்கே தொடர்முழுது
உவமை எடுத்துக் காட்டு உவமை காட்சி
வேற்றுமை உடன் நிகழ்வு இன்மை நவிற்சி
சுருங்கச் சொல்லல் கருத்து உடை அடையே
கருத்து உடை அடை கொளி பல் பொருள் சொல்தொடர்
புகைவிலி புகழ்ச்சி புனைவுளி விளைவே
பிறிதின்நவிற்சி வஞ்சப் புகழ்ச்சி

Koviloor Digital Library

வஞ்சப் பழிப்பு எதிர்மறை முரண்விளைந்து அழிவு
பிறிது ஆராய்ச்சி காரண ஆராய்ச்சி
கூடாமை தொடர்பு இன்மை தகுதி இன்மை
தகுதி வியப்பே பெருமை சிறுமை
ஒன்றற்கு ஒன்று உதவி சிறப்பு நிலையே
மற்றதற்கு ஆக்கல் காரணமாலை
ஒற்றைமணி மாலை மாலைவிளக்கே
மேல்மேல் உயர்ச்சி நிரல்நிறை அதனோடு
முறையில் படர்ச்சி மாற்று நிலையே
ஒழித்துக் காட்டல் உறழ்ச்சி கூட்டம்
வினை முதல் விளக்கே எளிதின் முடிபே
விறல்கோள் தொடர் நிலைச் செயுட்பொருள் பேறே
தொடர்நிலைச் செயுட்குறி வேற்றுப் பொருள் வைப்பே
மலர்ச்சி கற்றோர் நவிற்சி உய்த்து உணர்வே
பொய்த்தற் குறிப்பே வனப்பு நிலையே
இன்ப துன்பம் அக மலர்ச்சி இகழ்ச்சி
வேண்டல் இலேசம் குறிநிலை அரதன
மாலை பிறிதின் குணம் பெறல் அதனொடு
தொல் உருப்பெறல் பிறிதின் குணம் பெறாமை
தன்குணம் மிகை மறை பொதுமை மறையாமை
சிறப்பு இறை நுட்பம் கரவு வெளிப்படுப்பே
வஞ்ச நவிற்சி குறிப்பு நவிற்சி
வெளிப்படை நவிற்சி வல்லோர் நவிற்சி
மடங்குதல் நவிற்சி தன்மை நவிற்சி
நிகழ்வின் நவிற்சி வீறுகோள் மிகுதி
நவிற்சி பிறிநிலை நவிற்சி விலக்கே
விதியே ஏது என நூறு அணியே

உவமை (4, 5 6, 7), பொது நீங்குஉவமை (8), புகழ் பொருள் உவமை (9), எதிர்நிலை (10, 11), உருவகம் (12), திரிபு(பரிணாமம்) (14), பல படப்புனைவு (15), நினைப்பு (16), மயக்கம் (17), ஐயம் (18), ஒழிப்பு (19-25), தற்குறிப்பு (26, 27), உயர்வுநவிற்சி (28-35), ஒப்புமைக் கூட்டம் (36), விளக்கு (37), பின்வருவிளக்கு (38), தொடர்முழுதுஉவமை (39), எடுத்துக்காட்டுஉவமை (40), காட்சி (41), வேற்றுமை அணி (45), உடன்நிகழ்ச்சி (46), இன்மை நவிற்சி (47), சுருங்கச் சொல்லல் (48), கருத்து உடை அடை அணி (49), கருத்து உடை அடை கொளி (50), பல்பொருள் சொல் தொடர் (51), புனை வில் புகழ்ச்சி (52), புனைவுளி விளைவு (53), பிறிதின் நவிற்சி (54), வஞ்சப்புகழ்ச்சி (55), வஞ்சப்பழிப்பு (56), மறை (57, 58), முரண்விளைந்து அழிவு (59), பிறிது ஆராய்ச்சி (60), காரண

Koviloor Digital Library

ஆராய்ச்சி (61), கூடாமை (62), தொடர்பின்மை அணி (63), தகுதி இன்மை (64), தகுதி (65), வியப்பு (66), பெருமை (67), சிறுமை (68), ஒன்றற்கு ஒன்று உதவி (69), சிறப்பு நிலை அணி (70), மற்ற தற்கு ஆக்கல் (71), காரணமாலை (72), ஒற்றைமணிமாலை (73), மாலை விளக்கு (74), மேல் மேல் உயர்ச்சி (75), நிரல் நிறை (76), முறையில் படர்ச்சி (77), மாற்று நிலை (78), ஒழித்துக் காட்டல் (79), உறழ்ச்சி (80), கூட்டம் (81), வினை முதல் விளக்கணி (82), எளிதின் முடிபு அணி (83), விறல்கோள் (84), தொடர்நிலைச் செய்யுள்பேறு (85), தொடர்நிலைச் செய்யுள் குறி (86), வேற்றுப் பொருள் வைப்பு (87), மலர்ச்சி (88), கற்றோர் நவிற்சி (89), உய்த்து உணர்வு (90), பொய்த்தல் குறிப்பு (91), வனப்பு நிலை (92), இன்ப அணி (93), துன்பஅணி (94), அகமலர்ச்சி (95), இகழ்ச்சி (96), வேண்டல் (97), இலேசம் (98), குறி நிலை (99), அரதன மாலை (100), பிறிதின் குணம் பெறல் (101), தொல் உருப் பெறல் (102), பிறிதின் குணம் (103), தன் குணம்மிகை (104), மறை அணி (105), பொதுமை அணி (106), மறையாமை (107), சிறப்பு (108), (வியப்பு) இறை (109), நுட்பம் (110), கரவு வெளிப்படுப்பு (111), வஞ்ச நவிற்சி (112), குறிப்பு நவிற்சி (113), வெளிப்படை நவிற்சி (114), உத்தி (115), உலக வழக்கு நவிற்சி (116), வல்லோர் நவிற்சி (117), மடங்குதல் நவிற்சி (118), தன்மை நவிற்சி (119), நிகழ்வின் நவிற்சி (120), வீறு கோள் அணி (121), மிகுதி நவிற்சி (122), பிரிநிலை நவிற்சி (123), விலக்கு அணி (124), விதி அணி (125), ஏது அணி (126), என 100 அணிகள் பொருளணி கள் ஆகும் (அடைப்புக்குறியுள் உள்ள எண்கள் நூற்பா எண்கள்)

உவமை

4. அவற்றுள்
இரு பொருட்கு ஒப்புமை இயம்புவது உவமை

5. அதுவே
விரியே தொகையே என இருவகைத்து ஆம்

விரிஉவமை

6. வருணியம் அல்பொருள் வாசகம் தன்மம் இந்
நான்கும் விரிதர நவில்வது விரியே

உவமானம், உவமேயம் உவமை, உருபு, பொதுத் தன்மை எனும் இந்நான்கும் விரிந்து வரல் விரிவுவமை

தொகை உவமை

7. மொழிந்த வருணியம் முதலிய நான்கனுள்
ஒன்றும் பலவும் தொகுவது தொகை அஃது
எண்வகைத்து ஆக இயலும் என்ப

Koviloor Digital Library

மேற்கூறிய நான்கனுள் ஒன்றும் ஒன்றிற்கு மேற்பட்டவும் தொக்கி வரல் தொகை உவமை. அது எட்டு வகையாகும்.

பொது நீங்கு உவமை

8. அல்பொருள்புனைவுளி ஆக ஓர் பொருளையே
உரைப்பது பொது நீங்கு உவமை என்ப

ஓர் பொருளே உவமேயமாகவும் உவமானமாகவும் உரைப்பது.

புகழ் பொருள் உவமை

9. வாக்கியம் இரண்டனுள் வருணியா வருணம்
மாறத் தொடுத்தல் புகழ் பொருள் உவமை

இரு, சொல் தொடர்களுள் ஒன்றில் உவமானம் ஆகச் சொல்லப்பட்டதை மற்றொன்றில் உவமேயம் ஆக்கியும், உவமேயமாகச் சொல்லப்பட்டதை உவமானம் ஆக்கியும் சொல்லுதல்.

எதிர் நிலை

10. குறை ஒன்றற்குக் கூறுவது எதிர்நிலை

உவமானம், உவமேயம் என்ற இரண்டில் ஒன்றினைக் குறைவு தோன்றக் கூறல்;

11. அதுவே
அப்பொருள் புகழ் பொருள் ஆக்கிக் கூறல்
புனைவிலி தனைப்புகழ் பொருள் எனக் காட்டி
வருணியம் தனை அவமதித்தல் மற்று அதனையே
மாறத் தொடுத்தல் வருணியத்தோடும்
அல்பொருட்கு ஒப்புமை அன்று எனல் புகழில்
பொருள் வீண் என்று புகறல் ஐவகைத்தே

உவமானத்தை உவமேயம் ஆக்கிக் கூறுதல், உவமானத்தை உவமேயமாகக் காட்டி அதனை இகழ்தல், உவமேயத்தை உவமானமாகக் காட்டி அதனை இகழ்தல், உவமேயத்தோடு உவமானத்திற்கு ஒப்புமை இன்று எனச் சொல்லுதல், உவமானத்தை வீண் என்று சொல்லுதல் என எதிர்நிலை ஐவகையாம்.

உருவகம்

12. ஒற்றுமை செய்கை ஒன்றால் புனைவுளி
தன்னில் அப்பொருளைத் தாக்குவது உருவகம்

உவமேயத்தில் உவமானத்தை ஒற்றுமை, அல்லது செய்கையால் தரல்

13. அதுவே
ஒற்றுமை அதன் செய்கை என்று இரு வகைத்தாய்
மிகை குறை இன்மை என இரு மூன்றே

Koviloor Digital Library

ஒற்றுமை உருவகம், அதன் செய்கை உருவகம் என்று இரு வகைப்படும். இவ்விரண்டும் மிகை, குறை அவையின்மை என்பவைகளால் ஆறாகும். அவையாவன மிகை ஒற்றுமை உருவகம், குறை ஒற்றுமை உருவகம், அவையில் ஒற்றுமை உருவகம், மிகை அதன் செய்கை உருவகம், குறை அதன் செய்கை உருவகம், அவையில் அதன் செய்கை உருவகம்.

பரிணாமம் (திரிபு)

14. அன்று உறும் செய்கையில் ஆம்பயன் கொள்ளப்
புனைவிலிப் பொருள் தான் புனைவுளி உருக்கொடு
பரிணமித் திடுதல் பரிணாமம் என்ப

உவமானம் அப்பொழுது நிகழ்கின்ற செய்கையில் பயன் படுதற்காக உவமேயத்தின் உருக்கொண்டு வரல் இவ்வணி.

பலபடப்புனைவு

15. பல்லோர் ஒன்றில் பல இயல்பானும்
அறிபல பொருள்களை ஆரோபித்தல்
பின்னரும் விடய பேதகங்களால் பல்
பொருள்களை ஒருவரே புகட்டுதல் என்ன
இரு பால் ஆகும் பலபடப்புனைவே

ஒரு பொருளில் பலரும் பல இயல்புகளினால் பல பொருள்களைக் கூறல்; ஒருவரே செய்தி வேறுபாடுகளால் பல பொருள்களைக் கூறல் என இவ்வணி இருவகைப்படும்.

நினைப்பு

16. ஒரு பொருளினைக் கண்டு ஒப்புமைத் திறனால்
மற்று ஒரு பொருளை மனத்துன் நினைப்பே

மயக்கம்

17. ஒன்றை மற்று ஒன்று என்று ஒப்புமை அதனால்
அறிதல் மயக்க அணி எனப்படுமே

ஐயம்

18. ஒப்புமையில், பொருள் ஒன்றனை நோக்கி
இது கொல் அது கொல் எனக் கொளல் ஐயம்

ஒழிப்பு

19. அற்று ஒரு தன்மை ஆரோபிப்பான்
மற்று ஒரு தன்மை மறுத்திடல் ஒழிப்பாம்
அதுவே அறுவகைத்து ஆகும் என்ப

ஒரு தருமத்தைக் கூறுவதற்காக மற்றொரு தருமத்தை மறுத்தல் ஒழிப்பாகும். ஆறுவகைகளில் அது வரும். அவை பின்வருமாறு

Koviloor Digital Library

வெற்று ஒழிப்பு

20. அவற்றுள்
அல்பொருள் தன்மம் ஆரோபித்தற்கு
உவமேய இயல்பை ஒழித்தல் வெற்றொழிப்பே

உவமானத்தைச் சிறப்பிப்பதற்காக உவமேய தருமத்தை ஒழித்தல்

காரண ஒழிப்பு

21. கழறிய அவ்வணி காரணத்தோடும்
கூடி வருதல் காரண ஒழிப்பே

மேற்கூறப்பட்ட ஒழிப்பு காரணத்தோடு கூடிவரின் காரண ஒழிப்பு

வேறு பாட்டு ஒழிப்பு

22. புனைவுளி இடத்துப் புகட்ட மற்று ஒரு
பொருளியல் மறுத்தல் வேறு பாட்டு ஒழிப்பே

உவமேயத்தினைச் சிறப்பித்தல் பொருட்டு வேறு ஒரு பொருளின் இயல்பினை மறுத்தல்.

மயக்க ஒழிப்பு

23. ஒன்றை மற்று ஒன்று என்று உட்கொளுஉம் மருளை
உண்மை கூறி ஒழிப்பது மயக்கே

வல்லோர் ஒழிப்பு

24. வினவிய தம்சொல் மெய்ம்மையை மறுத்து
வேறு ஒரு பொருளை விளைப்பது அச் சொற்கே
வல்லொர் ஒழிப்பு என வகுத்தனர் புலவர்

தாம் கூறிய சொல்லின் உண்மைப் பொருளைப் பிறர் ஐயுற்று வினவுழி வல்லோர் அச்சொற்கு மற்றொன்றைக் கற்பித்து மறுத்து உரைத்தல்

வஞ்சக ஒழிப்பு

25. பெயர் முதல் சொல்லால் பெரிதும் வருணியத்து
இயல் மறுத்து உரைத்தல் வஞ்சக ஒழிப்பே

பெயர் முதலிய சொற்களால் உவமேயத்தின் இயல்பினை மறுத்தல்

தற்குறிப்பு

26. பொருளை மற்று ஒரு பொருள் இயல் தொடர்பால்
இஃது அஃது அன்று என எண்ணியும் அது என்று
அத்திய வசித்தல் தற்குறிப்பு அணி அது

Koviloor Digital Library

நினைக்கின்றேன் போல் நிச்சயம் உண்மை
துணிவு முதலிய சொற்கள் உருபாத்
தொக்கும் விரிந்தும் தோன்றும் என்ப

ஒரு பொருளை வேறு ஒரு பொருளின் தன்மைத்தொடர்பால் இது, அது அன்று என்றுத் தெளிந்தும் அது என்று உரைத்தல் தற்குறிப்பு ஆகும். நினைக்கின்றேன், போல், நிச்சயம், உண்மை, துணிவு முதலிய சொற்கள் உருபுகளாய்த் தொக்கியும் விரிந்தும் இங்குத் தோன்றும்.

27. அதுவே
பொருள் தற்குறிப்பே ஏதுத் தற்குறிப்பே
பயன்தற்குறிப்பு எனப் பகுதி மூன்று அவற்றுள்
புலன் விரி தொகை எனப் பொருள் தற்குறிப்பு இரு
பாலாம் ஒழிந்த பொருள் உளது இலது என
இவ் இரண்டு ஆகும் என்மனார் புலவர்

அதுவே பொருட்தற்குறிப்பு, ஏதுத்தற்குறிப்பு, பயன்தற்குறிப்பு என மூவகைப்படும். இவற்றுள் பொருள்தற்குறிப்பு, செய்திவிரிந்து நிற்றல், தொக்கி வரல் என இரண்டு ஆகும். ஏனைய இரண்டும், செய்தி உளதாதல், இலதாதல் எனப் பிரிவு படும்.

உயர்வு நவிற்சி

28. ஒரு பொருள் தன் சொலின் உரைக்கப் படாஅது
கேட்போர் உள்மகிழ் கிளப்பதும் இஃது அஃது
அன்று எனத் தெரிந்தும் ஆமெனத் துணியப்
படுவதூஉம் ஆகிய பான்மையில் தேறற்கு
ஒருபுலம்ஆதல் உயர்வு நவிற்சி
மற்று அஃது எழுவகைப்படும் என்ப

ஒருபொருள் இயல்பாகக் கூறப்படாது கேட்போருக்கு உளமகிழ்வு அளிப்பதும், இது அதுவல்ல எனத் தெரிந்தும் அதுவெனத் துணியப்படுதற்கு ஏற்றாற் போல் ஒருபுலம் ஆதலும் உயர்வு நவிற்சி. இதுஎழுவகைப்படும்.

உருவக உயர்வு நவிற்சி

29: அவற்றுள்
புகழ்பொருள் தனைத் தன் கிளவியில் புகலாது
இல்பொருள் சொல்லின் இலக்கணையாக
உரைப்பது உருவக உயர்வு நவிற்சி

உவமேயத்தை அதன் சொல்லால் சொல்லாமல் உவமானச் சொல்லினால் கூறல் இஃது.

Koviloor Digital Library

ஒழிப்பு உயர்வு நவிற்சி

30. நாட்டும் முன் உயர்வு நவிற்சி நீக்கொடு
கூட்டி முடித்தல் ஒழிப்பு உயர் நவிற்சி

முன் உணர்த்திய உயர்வுநவிற்சி ஒழிப்புடன் கூடி வரல்.

பிரிநிலை உயர்வு நவிற்சி

31. திரம் உருவம் செல்வம் முதலிய
சொற்களைப் பிரித்துச் சொல்வது பிரிநிலை.

சிறப்புப் பெற்ற திரம், உருவம், செல்வம் முதலியவற்றைப் பிரித்துக் கூறல்.

தொடர்பு உயர்வு நவிற்சி

32. தொடர்புஇல் பொருட்கு ஒரு தொடர்பு புனைதலும்
தொடர்பு உறா உம் பொருட்கு தொடர்பு இலது ஆக்கலும்
என இருவகைத்து ஆம் தொடர்பு உயர் நவிற்சி

முறையிலி உயர்வு நவிற்சி

33. காலம் ஒன்றில் காரண காரியம்
நிகழத் தொடுத்தல் முறையிலி என்ப

விரைவு உயர்வு நவிற்சி

34. காரண உணர்ச்சி ஒன்றில் காரியம்
பிறத்தல் விரைவு உயர் நவிற்சி ஆகும்

மிகை உயர்வு நவிற்சி

35. காரியம் முன்னும் காரணம் பின்னும்
நிகழப் புனைதல் மிகை உயர் நவிற்சி

ஒப்புமைக் கூட்டம்

36. புனைவுளி புனைவிலி பலவும் பொது இயல்பு
ஒன்றில் முடித்தல் ஒப்புமைக் கூட்டம்

உவமேயங்கள் அல்லது உவமானங்களின் பல பொருள்களைப் பொதுவாகிய ஒரு இயல்பில் முடித்தல்

விளக்கு

37. வருணியா வருணியம் வாய்ப்ப ஓர் இயல்பின்
முடிவது விளக்கு என மொழிந்தனர் புலவர்

உவமேயமும் உவமானமும் ஒரு தருமத்தில் முடிதல்

பின்வரு விளக்கு

38. சொல்லும் பொருளும் சொல்லொடு பொருளும்
வாக்கியப் பின்னரும் வருவது பின்வரு
விளக்கு அது மூன்றா விரியும என்ப

Koviloor Digital Library

தொடர் முழுது உவமை

39. ஒப்புமை இருபால் வைப்பது தொடர் முழுது
உவமை முரண் நிகர் என இரு வகைத்தே

எடுத்துக் காட்டு உவமை

40. பிம்பப் பிரதி பிம்பப் பாவத்தைக்
காட்டுதல் எடுத்துக் காட்டு உவமை அது
முரண் நிகர் என இரு முறைமையது என்ப

காட்சி

41. வாக்கியம் பதம் பொருள் காட்சி மூவகைத்தே

வாக்கியப் பொருட்காட்சி

42. வாக்கியப் பொருள் இரண்டற்கு ஆரோபம்
புனைதல் வாக்கியப் பொருட் காட்சி என்ப

இரண்டு வாக்கியப் பொருள்களுக் கிடையில் ஐக்கியத்தைக் காட்டல்.

பதப்பொருட்காட்சி

43. ஒன்றன் இயல் மற்று ஒன்றன் இடை ஏற்றிடல்
பதப்பொருள் என்னப் பாத்தனர் புலவர்

உவமான உவமேயங்களுள் ஒன்றில் ஒன்றனது இயல்பினைக் கூறல்.

பொருட்காட்சி

44. நற்பொருள் தீப்பொருள் நவிலும் இவ் இரண்டனுள்
ஒன்றைச் செய்கையில் உணர்த்தல் பொருளே

வேற்றுமை

45. ஓதிய பொருள்களில் ஒன்று உயர்வு உடைத்து என்று
அறைவது வேற்றுமை அணி எனப்படுமே

உவமானம், உவமேயங்களுள் ஒன்றினை உயர்வு உடையதாகக் கூறுவது.

உடன் நிகழ்ச்சி

46. சிறியோர் உள்மகிழ் செயும் உடன் நிகழ்வை
உரைப்பது தனை உடன் நிகழ்ச்சி என்ப

இன்மை நிகழ்ச்சி

47. புகழ் பொருளினை ஒரு பொருள் இன்மையினால்
இழிவு உயர்வு உறச் சொலல் இன்மை நவிற்சி

ஏதேனும் ஒன்றன் இல்லாமையால் உவமேயத்தை தாழ்வு அல்லது உயர்வு அடைவதாக வேனும் கூறலாம்.

Koviloor Digital Library

சுருங்கச் சொல்லல்

48. அடைமொழி ஒப்புமை ஆற்றலின் அல்பொருள்
செய்தி விளங்கப் புகழ் பொருள் செய்தியைச்
சிலேடை பொது அடை எனும் இரு திறத்தினும்
தோன்றக் கூறல் சுருங்கச் சொலலே

அடைமொழியின் ஒப்புமை ஆற்றலால் உவமானத்தின் செய்தி தோன்ற உவமேயச் செய்தியைச் சிலேடை, பொது அடை என இரு நிலைகளில் கூறல்.

கருத்துடை அடை

49. கருத்தொடு பொருந்து அடை கருத்து உடை அணியே

கருத்துடை அடைகொளி

50. கருத்தொடு விசேடியம் காட்டுதல் அடை கொளி

கருத்துடன் வரும் அடை சிறப்பினையும் உணர்த்துதல்.

பல்பொருட் சொல்தொடர்

51. பல்பொருள் தரூஉம் பல் பதங்கள் புணர்த்துச்
சொல்வது பல்பொருள் சொல் தொடர் அணி அது
புனைவுளி புனைவிலி இருமை மூவகைத்தே.

பல பொருள்களைத் தரும் சொற்களை இணைத்துக் கூறல் இவ்வணி. புனைவுளிப் பல்பொருள் சொல்தொடர், புனைவிலி பல்பொருள் சொல் தொடர், இருமைப் பல்பொருள் சொல் தொடர் என மூவகைப்படும்.

புனைவிலி புகழ்ச்சி

52. புனைவிலி தன்னைப் புனையும் தொடர்பால்
புகழ்பொருள் புலப்படல் புனைவிலி புகழ்ச்சி
ஒப்புமை பொதுமை சிறப்பே காரணம்
காரியம் என ஐந்தாகும் அதுவே

உவமானத்தை விளக்கிக் கூறுங்கால் அதனின்றும் உவமேயம் தோன்றுதலாகிய இவ்வணி ஒப்புமை, பொதுமை, சிறப்பு, காரணம், காரியம் என ஐந்து வகை.

புனைவுளி விளைவு

53. புனைவுளி யான் விழை புகழ்பொருள் தோன்றல்
புனைவுளி விளைவு எனப் புகன்றனர் புலவர்

ஒரு உவமேயத்தைச் சொல்லுங்கால் தொடர்புடைய மற்றொரு உவமேயம் தோன்றுதல்.

Koviloor Digital Library

பிறிதின் நவிற்சி

54. நினைத்த பொருளை நேரிதில் புகலாது
மற்று ஒரு திறத்தால் வழங்குதல், வஞ்சனை
தன்னானிட்ட சாதனை என்று இரு
பெற்றியது என்ப பிறிதின் நவிற்சி

கூற விரும்பிய பொருளை நேரிடையாக உணர்த்தாது பிறிது ஒரு திறத்தால் உணர்த்துதல்; வஞ்சனையால் காட்டல் என இரு பெற்றியது.

வஞ்சப்புகழ்ச்சி

55. பழிப்பில் புகழ்ச்சி புகழ்ச்சியில் பழிப்பு
புகழ்ச்சியில் புகழ்ச்சி என முப்பாலாப்
போந்தது வஞ்சப் புகழ்ச்சி ஆகும்

வஞ்சப் பழிப்பு

56. நிந்தையால் நிந்தை நேர்படல் வஞ்சப்
பழிப்பு என நூலோர் பகர்ந்தனர் என்ப

மறை

57. ஒழிப்பின் வேறாய் உவப்ப அமைந்து ஒளிரு
மறுப்பைக் கூறல் மறை அணி ஆமே

ஒழிப்பு அணிக்குப் புறம்பாயும், நுகர்வோர் உவக்கும் படியாகவும் மறுப்பைக் கூறல்.

58. அதுவே
இயம்பிய பொருளை ஏதுவின் மறுத்தல்,
மறுப்பினை நீத்து மற்று ஒரு பொருள்தரல்,
உடம்படு சொல்லால் மறுப்பை உணர்த்தல்
என முத்திறத்தது என்மனார் புலவர்

முரண்விளைந்து அழிவு

59. கருதும் ஓர் இடத்தவாய்க் காரிய காரணம்
ஏலாத் தருமம் இரண்டன் மேலும்
தோன்றி அழியும் பகைமை தொடுத்து
மொழிதல் என்ப முரண் விளைந்து அழிவே

ஓரிடத்து உள்ளனவும், காரிய காரணம் ஆகாதனவுமாகிய இரு தருமங்களின் மேல் தோன்றி ஒழியும் பகைமையை மொழிதல்.

பிறிது ஆராய்ச்சி

60. உலகு அறி காரணம் ஒன்றும் இன்றிக்
காரியம் பிறத்தலும் காரண இயல் தொடர்பு
இரண்டில் ஒன்று எஞ்சி இருப்பக் காரியம்

Koviloor Digital Library

பிறத்தலும் காரியம் பிறத்தற்கு ஆம் தடை
உள்ளதாக அதுதான் உதித்தலும்
காரணம் அல்லா மற்று ஒரு கருத்தால்
காரியம் பிறத்தலும் கடும்பகைக் காரணம்
தன்னில் காரியம் தழைத்தலும் காரியம்
நின்று அதில் காரணம் நிலாவலும் என அறு
பெற்றியது ஆகும் பிறிது ஆராய்ச்சி

காரண ஆராய்ச்சி

61. எஞ்சாக் காரணம் இருப்பக் காரியம்
பிறவாதது காரண ஆராய்ச்சி

கூடாமை

62. காரணம் அருமையாக் காட்டல் கூடாமை

தொடர்பின்மை

63. காரணம் ஓர் இடத்து இருப்பக் காரியம்
மற்று ஓர் இடத்தில் மருவல் மாறி
ஓரிடம் செய்தற்கு உரியதை மற்றுஓர்
இடத்தில் இயற்றல் இயற்றப் புக்கதற்
காகப் பகை ஒன்று ஆக்கிக் கோடல்
என மூன்றாம் தொடர்பின்மை அணியே

காரணம் ஓரிடத்து இருப்பக் காரியம் மற்றோரிடத்தில் பிறத்தலைக் கூறுதல், ஓரிடத்தில் செய்தற்குரியதை மற்றோரிடத்தில் செய்தல், ஒன்றைச் செய்யத் தொடங்கி அதற்குப் பகை ஆகிய மற்றொன்றைச் செய்தல் என மூவகை.

தகுதியின்மை

64. பொருந்தும் தகையில் பொருள்களைப் பொருத்தலும்
காரணம் அதில் பகைக் காரியம் பிறத்தலும்
ஒருவினை தொடங்கி அனிட்டம் உறுதல்
இட்டாநிட்டம் இரண்டும் அடைதல்
இட்டம் அடையாமை எனும் மூவகையொடு
தரும் முப்பாலாம் தகுதியின்மை

பொருந்துதற்குத் தகுதியில்லாத பொருள்களை இணைத்தல்; ஒரு காரணத்தில் பகைக்குணமுடைய காரியம் பிறத்தலைச் சொல்லல்; ஒரு காரியத்தைத் தொடங்கி அதில்—விரும்பியதைப் பெறாது விரும்பாததை அடைதல், விரும்பியதையும் விரும்பாததையும் அடைதல், விரும்பியதை அடையாமை என மூன்று நிலைகளில் இவ்வணி இடம் பெறும்.

Koviloor Digital Library

தகுதி

65. தகும் இருபொருள் தொடர் சாற்றுதல் காரியம்
காரணச் செய்கையில் காட்டுதல் கருத்தில்
பொருள் அடையாது புரிந்ததை அடைதல்
என முப்பாலா இயம்புவர் தகுதி

தகுதி உடைய இரு பொருள்களின் தொடர்பினைச் சாற்றல், காரியத்தை அதன் காரணத்தோடுஏற்புடைய செய்கையுளதாகக் காட்டல், விரும்பத் தகாததை அடையாது வேண்டியதை அடைதல் என மூவகை.

வியப்பு

66. கருதி ஓர் பயனைக் காட்டாது அதற்குப்
பகையாம் முயற்சி பண்ணுதல் வியப்பே

பெருமை

67. ஆதார ஆதேயம் இரண்டனுள் ஒன்றைப்
பெரிதில் பெரிது எனப் பேசுதல் பெருமை

சிறுமை

68. ஆதேயத்தினும் ஆதாரம் அதனைச்
சிறிதில் சிறிதாச் செப்புதல் சிறுமை

ஒன்றற்கொன்று உதவி

69. ஒன்றற்கு ஒன்றே உதவல் அந்யோந்நியம்

சிறப்பு நிலை

70. நிலையின்று ஆதேயம் நிகழத் தொடுத்தல்
ஏற்றது ஓர் பொருள் பல் இடங்களில் நிற்பக்
காட்டுதல் சிறிய காரியம் செய்வான்
தொடங்கி வேறு உருவினைத் தோற்றுதல் மூன்றா
நிகழ்வது சிறப்பு நிலை அணி என்ப

சிறப்பாகிய ஆதாரம் இல்லாதிருப்ப ஆதேயத்தின் இருப்பைக் கூறுதல், ஒரு பொருளைப் பல இடங்களில் இருப்பதாகச் சொல்லுதல், சிறிய காரியம் செய்யத் தொடங்கி வேறு பெரிய காரியம் செய்தல் என மூன்றாம்.

மற்றதற்கு ஆக்கல்

71. ஒரு காரியத்தின் உலகு அறி காரணம்
அதன்பகைக் காரிய காரணம் ஆக்குதல்
தொழில் ஒன்றற்குத் துணை எனக் கொண்ட
பொருளைப் பகைத் தொழில் கருவி ஆக்கல்

Koviloor Digital Library

ஒரு தொழில் அமைப்பான் ஒருவன் உள்ளிய
பொருளால் பிறன் பகை வினை நனி பொருத்தல் என்று
ஆகும் மூவகைத்தே மற்றதற்கு ஆக்கல்

ஒரு காரியத்தினது உலகறிந்த காரணத்தை அதற்குப் பகையாகிய காரியத்திற்குக் காரணமாக்குதல்; ஒரு காரியத்தற்குத் துணையாகக் கொண்ட பொருளை அதற்குப் பகையாகிய காரியத்திற்குக் கருவி ஆக்கிக் கொளல்; ஒரு காரியத்தை உண்டாக்குதற்காக ஒருவன் எண்ணிய பொருளை, பிறன் அதன் பகைக் காரியத்திற்குப் பொருத்தமாக்கிக் கொளல் ஆகியன.

காரண மாலை

72. பின் பினாகப் பேசும் பொருட்கு
முன் முனாக மொழிய வரூஉம் அவை
காரணம் ஆகவும் காரியம் ஆகவும்
வழங்குவ காரண மாலை என்ப

பின் பின்னாக வருவனவற்றிற்கு முன் முன்னாக வருவனவற்றைக் காரணம் அல்லது காரியம் ஆக வழங்குதல்.

ஒற்றை மணிமாலை

73. முன்னது போல்வரும் முன்னவை பின்னவை
அடை சொல் ஆக அடைகொளி ஆக
வழங்குதல் ஒற்றை மணி மாலை அணியே

பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றை அடை அல்லது அடைகொளி ஆகக் காட்டல்.

மாலை விளக்கு

74. திவகத் தொடு முன் செப்பிய ஏகா
வளிதனைச் சார்த்தல் மாலை விளக்கே

மேன்மேல் உயர்ச்சி

75. ஒன்றற்கு ஒன்று மென்மேல் உயர்வு இழிவுக்
குணத்தான் உயர்வு குறிப்பது மேன்மேல்
உயர்ச்சி அணி என்றுரைத்தனர் புலவர்

மேலும் மேலும் ஒன்றற்கொன்று உயர்குணத்தால் அன்றி இழிகுணத்தால் உயர்வாதலைச் சொல்லுதல்.

நிரல்நிறை

76. நிறுத்த முறையே நெறிப்படப் பொருளைக்
குறித்தல் நிரல்நிறை எனக் கூறுவரே

வரிசையாகக் கூறப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றை அம்முறையே கூறல்.

Koviloor Digital Library

முறையிற் படர்ச்சி

77. பல் இடங்களினும் படர ஒரு பொருள்
புகறல் ஓர்வயிற் பல் பொருள் சென்று அடைய
நெறியில் கூறல் முறையிற் படர்ச்சி

முறையாக ஒரு பொருள் பல இடங்களில் சென்று அடைதல் அல்லது ஒரு இடத்தில் பலபொருள் சேர்தல்.

மாற்று நிலை

78. இழிவு ஈந்து உயர்வு உறல் மாற்று நிலையே

ஒழித்துக் காட்டல்

79. ஓரிடத்து இலதென ஒழித்த ஒரு பொருளை
உண்டு என மற்று ஓர் உழி நியமித்தல்
ஒழித்துக் காட்டு என்று உணர்ந்தனர் கொளலே

உறழ்ச்சி

80. நேர்வலி கொளும் இரு நிலையினை விகற்பித்து
அறைதல் உறழ்ச்சி அணி ஆகும்மே

சமமாகிய வலியுடைய இருபொருள்களை வேறுபடுத்திக் காட்டல்.

கூட்டம்

81. இகல் இன்று ஒரு பொழுது இயையும் பொருளின்
குழுவைக் குறித்தலும் கூடுபல் காரணம்
தம்மில் காரியம் சாற்றலும் கூட்டம்

பகையில்லாமையால் கூட ஒரு பொழுதில் கூடத் தக்க பொருள்களின் கூட்டத்தைக் குறித்தலும், பல பல காரணங்களின் கூடுதலால் ஒரு காரியம் பிறத்தலும் ஆம்.

வினைமுதல் விளக்கு

82. வினை முதற்கு ஏற்ற வினைகளை முறைப்பட
விளம்பல் வினைமுதல் விளக்கு அணி ஆமே

எளிதின் முடிபு

83. ஒருவன் செய்தற்கு உற்ற காரியம்
மற்று ஒரு காரண வழிவரும் உதவியின்
முடிதல் எளிதின் முடிபு அணி என்ப

விறல்கோள்

84. வன்பகை அன்றி மற்று அதன் துணைமேல்
விசயம் கோடல் விறல்கோள் அணியே

Koviloor Digital Library

தொடர்நிலைச் செய்யுள் பொருள் பேறு

85. பொருள் ஒன்று உரைக்கத் தண்டா பூபிகை
வழக்கால் மற்று ஒரு வண்பொருள் தோன்றல்
தொடர் நிலைச் செய்யுள் பொருள் பேறு அணியே

தொடர் நிலைச் செய்யுள்குறி

86. மன்னிய பொருளை வாக்கிய அர்த்தத்தின்
ஆயினும் பதார்த்தத்து ஆயினும் இரண்டின்
ஆயினும் நாட்டற்கு அமைவது தொடர்நிலைச்
செய்யுள் குறிஎனச் செப்பினர் புலவர்
பதார்த்தம்-சொற்பொருள்

வேற்றுப் பொருள்வைப்பு

87. பொதுவால் சிறப்பும் சிறப்பால் பொதுவும்
புகறல் வேற்றுப்பொருள் வைப்பு அணியே

மலர்ச்சி

88. சிறப்பினை நாட்டப் பொதுவும் அப்பொதுவினை
மீட்டு நிறுத்த மேல் ஒரு சிறப்பும்
வகுத்துக் கூறல் மலர்ச்சி அணியே

கற்றோர் நவிற்சி

89. மிகுதிக் காரணம் மேவாத தனைக்
கருவி ஆக்கல் கற்றோர் நவிற்சி
மிகுதிக்குக் காரணம் ஆகாததனைக் காரணமாகச் சொல்லல்.

உய்த்து உணர்வு

90. இவ்வாறு ஆயின் ஈது உறும் என ஒரு
காரிய முடிவைக் கருதல் உய்த்து உணர்வே

பொய்த்தற் குறிப்பு

91. பொருளைப் பொய்ம்மை ஆக்க மற்று ஒரு
பொய்ப்பொருள் புனைதல் பொய்த்தல் குறிப்பே

வனப்பு நிலை

92. வருணியம் அடைகொளி ஆக வகுத்துப்
புகழும் பொருள் தொடர் போலும் பொருள் நிலை
வருணிப்பதனை வனப்புநிலை என்ப

உவமேயத்தை விசேடியம் ஆக்கிக் கொண்டு சிறப்பிக்க வேண்டிய பொருள் தொடருக்கு ஒப்பான மற்றொன்றை வருணித்தல்.

Koviloor Digital Library

இன்பம்

93. விரும்பிய வினை முயல்வின்றி முடிதலும்
விழைபொருள் தன்னில் மிகுபொருள் அடைதலும்
உபாய முயற்சியின் பயனே உறுதலும்
என முத்திறத்தது இன்ப அணியே

துன்பம்

94. விழை பொருட்கு இயற்றும் வினையே வேறு
தொடர்பகைப் பொருள் தரல் துன்ப அணியே

விரும்பிய பொருள் குறித்து வினை செய்ய அதற்குப் பகைப் பொருள் கிடைத்தல்.

அகமலர்ச்சி

95. ஒன்றன் குண குற்றங்களால் ஒன்றற்கு
அன்னவை சொலல் அகமலர்ச்சி மற்று அஃது
உறுகுணம் குற்றம் உறழ நால் வகைத்தே

ஒரு பொருளின் குணம், குற்றங்களால் மற்றொன்றற்கு அவை உளதாதலைக் கூறல். குணத்தினால் குணத்தினைச் சொல்லுதல், குற்றத்தினால் குற்றத்தைச் சொல்லுதல், குணத்தினால் குற்றத்தைச் சொல்லுதல், குற்றத்தினால் குணத்தைச் சொல்லுதல் என நால்வகைப்படும்.

இகழ்ச்சி

96. குற்றம் குணங்களால் மற்று ஒன்றற்கு அவை
உள ஆகாமை ஓதுதல் இகழ்ச்சி
இருவகை ஆக அஃது இயையும் என்ப

குணத்தினால் குணம் உண்டாகாமை, குற்றத்தினால் குற்றம் உண்டாகாமை என இருவகை.

வேண்டல்

97. குற்றம் குணம் தரக்கண்டு மற்று அது
விரும்பிக் கூறல் வேண்டல் அணியே

இலேசம்

98. குணம் குறை மாறிக் கூறுவது இலேசம்

குற்றத்தைக் குணமாகவும், குணத்தைக் குற்றமாகவும் சொல்லுதல்.

குறிநிலை

99. புகழ் பொருள் உணர்த்தப் புகூஉம் சொற்களால்
கூர்ந்து அறி பொருளைக் கூறல் குறி நிலை

Koviloor Digital Library

அரதனமாலை

100. முன்னிய பொருளை முன்பின் முறையின்
வழுவாது உரைத்தல் அரதனமாலை

பிறிதின் குணம் பெறல்

101. ஒரு பொருள் தன் இயல்பு ஒழிந்து பிறிது இயல்
கோடல் பிறிதின் குணம் பெறல் அணியே

தொல்லுருப் பெறல்

102. ஒன்று மற்று ஒன்றின் உறுகுணம் பெறினும்
மீட்டும் தன் குணம் மேவலும் விகாரம் அஃது
அடையினும் முன்னிலை அமைதலும் என்று
தொல்லுருப் பெறல் அணி சொல் இரு வகைத்தே

பிறிதின் குணம் பெறாமை

103. தன்னொடு சார் பிறிதின் இயல் பெறாமை
பிறிதின் குணம் எனப் பேசினர் புலவர்

தன் குணம் மிகை

104. தன் உடை இயற்கைத் தன்மை மற்று ஒன்றின்
சார்பால் மிக்கு உறல் தன் குணம் மிகையே

மறை

105. பொது இயல்பான் இரு பொருட்கு வேற்றுமை
தோற்றாது அதனைச் சொல்லல் மறை அணி

பொதுமை

106. ஒப்பின் இரு பொருட்கு உயர்வு தோன்றாமை
பொதுமை அணி எனப் புகன்றனர் புலவர்

மறையாமை

107. பொதுக் குணத்து ஒன்றும் பொருள் இரண்டற்கு ஓர்
ஏதுவான் வேற்றுமை இயம்பல் மறையாமை

சிறப்பு

108. ஒப்பில் பொதுமை உறும் பொருள் இரண்டற்கு
உயர்வு ஒரு காரணத்து உதித்தல் சிறப்பே

இறை

109. ஒரு கருத்து உள் உற உரைப்பது மறைப்பு இறை
வினா ஒன்றற்கு அதுவே விடை, பலவாம்
வினாவிற்கு ஒரு விடை விளம்பல் வியப்பு இறை

Koviloor Digital Library

நுட்பம்

110. கருதிய பிறன் கோள் கண்டு குறுநிலைச்
செய்கையின் நிகழ்த்தும் செப்பே நுட்பம்

பிறர் கருத்தை அறிந்துகொண்டு, கருத்தோடு கூடிய செய்கையினால் எதிர்மொழி கொடுத்தல்.

கரவு வெளிப்படுப்பு

111. மறை செயல் அறிந்த மாட்சி தோன்றக்
குறிநிலைச் செய்கை கொண்டு மற்று அதனைக்
காட்சியின் விரித்தல் கரவு வெளிப்படுப்பே

ஒருவரது மறைத்த செயலைத் தான் அறிந்து கொண்டமையைக் கருத்துடன் கூடிய செயலால் விரித்தல்.

வஞ்ச நவிற்சி

112. ஒரு காரணத்தான் உதித்த சத்துவ
குணத்தைப் பிறிது ஓர் காரணம் கூறி
மறைத்து மொழிதல் வஞ்ச நவிற்சி

சத்துவம், கண்ணீர் வார்தல், புளகரும்பல், வியர்த்தல் நகை தோன்றல்.

குறிப்பு நவிற்சி

113. குறித்து ஒரு பொருளைக் கூறற்கு உரியது
மற்று ஒரு பொருள்மேல் வழங்கல் குறிப்பு
நவிற்சி அணி என நாட்டினர் புலவர்

வெளிப்படை நவிற்சி

114. சிலேடையால் மறைத்துச் செப்பும் பொருளை
விண்டு மொழிதல் வெளிப்படை நவிற்சி

உத்தி

115: உட்கோள் மறைத்தற்கு உன்னிப் பிறரைச்
செயலான் வஞ்சனை செய்தலே உத்தி

உலக வழக்கு நவிற்சி

116. உயர்ந்தோர் ஆட்சியின் உற்ற சொல் தழுவல்
மன்னிய உலக வழக்கு நவிற்சி

உலக வழக்குச் சொல்லைத் தழுவி அமைத்தல்.

வல்லோர் நவிற்சி

117. மற்று ஒரு பொருளை அவ் வழக்குச் சொல்லே
வாய்ப்பக் கோடல் வல்லோர் நவிற்சி

Koviloor Digital Library

மடங்குதல் நவிற்சி

118. ஒருவர் ஓர் பொருள்அறிவுறுத்தற்கு ஓதிய
சொற்கு வேறு ஒருவன் சூழ்ந்து சிலேடையின்
எடுத்தல் முதலிய இசை விகாரத்தின்
மற்று ஒரு பொருள் தரல் மடங்குதல் நவிற்சி

தன்மை நவிற்சி

119. மேவிய சாதி வினைகளது இயற்கைத்
தன்மை உரைப்பது தன்மை நவிற்சி

நிகழ்வின் நவிற்சி

120. இறப்பின் எதிர்வின் இயன்றதை ஆங்கே
நிகழ்வது ஆக்கல் நிகழ்வின் நவிற்சி

விறுகோள்

121. செல்வ மிகுதியை ஆதல் செப்புறும்
அருங்கதை புகழ் பொருட்டு அங்கமாய் ஆதல்
கூறுவது விறு கோள் அணி என்ப

செல்வ மிகுதியை அல்லது சிறப்புறும் அருங்கதையை உவமேயத்திற்கு அங்கமாய்க் கூறல்.

மிகுதி நவிற்சி

122. வியப்பும் பொய்ம்மையும் மேவத் திறல் கொடை
முதலிய புகழ்தல் மிகுதி நவிற்சி

பிரிநிலை நவிற்சி

123. அறைந்த பெயர்ச் சொற்கு ஆற்றலின் மற்று ஒரு
பொருள் வகுத்து உரைத்தல் பிரிநிலை நவிற்சி

விலக்கு

124. வெளிப் படையாகி மேவிய கருத்தொடு
பொருந்து நீக்கம் புகல்வது விலக்கே

வெளிப்படைஆகவும் கருத்துடன் பொருந்தியும்அமைந்துள்ள விலக்கைப் புகல்வது.

விதி

125. வெளிப்படைப் பொருளின் விதி ஒரு கருத்தோடு
மேவி வருதல் விதி அணி என்ப

ஏது

126. காரணம் காரியத்தோடு சார்த்தலும்
காரிய காரண ஒற்றுமை காண்டலும்
என்று இரு வகைத்தாம் ஏது அணியே

முற்றும்

Koviloor Digital Library

உ

கடவுள் துணை

குவலயாநந்தம்

எட்டயபுரம் ஸம்ஸ்தாநாதிபதியாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
இராஜ ஜகத்வீர
ராமகுமார எட்டப்பமஹாராஜா ஐயனவர்கள்
வேண்டுகோளின்படி
ஷ ஸம்ஸ்தானம் ஸம்ஸ்கிருதவித்வான்
சங்கரநாராயண சாஸ்திரிகளவர்கள்
செய்த மொழி பெயர்ப்பும்
ஷ ஸம்ஸ்தானம் தமிழ் வித்வான்
முகவூர்-மீனாக்ஷிசுந்தரக் கவிராயரவர்கள்
சுலோகங்களின் மொழி பெயர்ப்புக்கிசைத்த செய்யுட்களும்
சென்னை பச்சையப்பன் காலீஜ் ஸம்ஸ்கிருதபண்டிதர்
திருமலை ஈச்சம்பாடி சதாவதானம்
ஸ்ரீநிவாஸாசாரியரவர்களாலும்
தமிழ் உபாத்தியாயர் ஆனூர்
சிங்காரவேலு முதலியாரவர்களாலும்
பார்வையிடப்பட்டு
ஷ ஸம்ஸ்தாநாதிபதியாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
இராஜ ஜகத்வீரராம வேங்கடேசுவர
எட்டப்ப மஹாராஜா ஐயனவர்களின்
கனிஷ்டபிதாவும் யுவராஜாவுமாகிய
மஹாராஜ ராஜபூஜித மஹாராஜராஜஸ்ரீ
வேங்கடேசுவர எட்டுப் பாண்டியனவர்களால்

சென்னை
செங்கல்வராய நாயகரது ஆர்பனேஜ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.
1895.

Registered Copyright.

Koviloor Digital Library

Koviloor Digital Library

குவலயாநந்தம்-2

தேவி வணக்கம்

1. பொன்னார் உலகத்து அரிவையர் வாசனைப் பூங்குழலின்
மன்னா மதுரப் புதுத் தேன் அருந்தி இசை வண்டினம் சூழ்
தென்னாகம் ஈன்ற மெய் அம்பிகை பாதச் செழுங்கமலம்
எந்நாளுமே துணையான் சொலும் பா நிறைவேறுதற்கே

உவமை

2. இரு பொருளுக்குத் தகும் ஒப்புமை வெளியீட்டு இலங்க
வருவது உவமை அணியாம் புகழ் உயர் வானதியில்
மருவினது ஓதிமம் போல் என்னில் இலக்கியம் வந்தது சீர்த்
திருவவர் எட்டபுரம் வாழ் குமாரெட்ட சீதரனே

தொகை உவமை

3. வாயும் பொதுமை உவமை உருபு உவமானம் உவ
மேயம் ஒன்றும் பலவும் குறைந்தால் தொகைமேவு உவமை
நேய மதிநிகராமுகி மின்பொன் நிறத்து மெய்யள்
ஏயும் கயற்கண்ணி என்னல் உதாரணம் எட்டமனே

இயைபின்மை

4. உவமானம் ஆயும் உவமேயம் ஆயும் ஒரு பொருளே
எவண் மேவலாயினதோ அதுவே இயைபின்மை அணி
இவண்மாமதி மதிபோல்காந்திமான்என்றுஇலக்கியம் தேர்
தவமேவு இளசைக் குமாரெட்டனாம் என்ற தயாநிதியே

புகழ் பொருள் ஒப்பு

5. இருபொருளுக்கு உவமான உவமேயத்து இயல்பு தனைப்
பரியாயம் ஆக்கில் புகழ் பொருள் ஒப்புஅணிபாரதற்குப்

Koviloor Digital Library

பொருள் போல் அற நிறையும் மறம் போல் பொருள்
நிறையும்
தரை மீது என்று ஒதல் உதாரணம் தென் இளசைத்தலனே

எதிர்நிலை

6. வழங்கு உவமானத்தினுக்கு உவமேயத் தன்மை விளம்பில்
ஒழுங்குறு நாமம் எதிர்நிலை கண் போல் உளது கஞ்சம்
எழும் சசியான் அனம் போல் உளது என்பது இலக்கியம்
காண்
தொழும் பல வேந்தரைக் காக்கும் குமாரெட்ட
சுந்தரனே

இரண்டாம் எதிர்நிலை

7. உவமானம் ஆம் உவமேயத்தினால் புகழும் பொருளுக்கு
அவமானம் ஓதில் இரண்டாம் எதிர்நிலை ஆம் முகமே
இவர் காந்தியால் உனைப் போல் மதி உண்டு உனக்கு
ஏன் கருவம்
நவில்வாய் என்று ஓதல் இலக்கியம் எட்ட நகர்க்கு அரசே

மூன்றும் எதிர்நிலை

8. புகழ் உவமேயத்தினால் உவமான பொருட்கு நிந்தை
பகருவ மேலது மூன்றாம் எதிர்நிலை பாசகர
நிகழ் உனக்கு ஏன் உக்கிரத்தால் செருக்கு உனை நேர்ந்த
மின்னார்
மிகஉளர் என்பது இலக்கியம் சந்திர வெற்பு உளனே

நான்காம் எதிர்நிலை

9. புனைவுளி யோடு உவமானத்தினுக்கு ஒப்புமை இல் எனில்
அனைவரும் நான்காம் எதிர்நிலை யாம் என்பர்
அம்புய நின்
வனை முகம் போல் மின் உளது எனில் விண் அவ வாதம்
தம்மலர்ப்
பொனை அனை என்னல் உதாரணம் எட்டபுரத்து அரசே.

ஐந்தாம் எதிர்நிலை

10. பயன் இன்மையை உவமானத்தினுக்குப் பகரில் ஐந்துஆ
கிய சொல் எதிர்நிலை பெண்முகம் காணக்
கிடைத்தவர்க்கே
இயல் மதியால் பயன் என் மரையால் பயன் என் எனஒ
தியது இங்கு உதாரணம் தேர் எட்டய புய சீதரனே.

Koviloor Digital Library

உருவகம்

11. ஒற்றுமை யால் அதன் செய்கையினால் உவமேயம் அதில்
பற்று உவமானத்தை ஆரோபித்தால் இருபான்மை உடன்
உற்றிடு உருவகம் தான் மிகையும் குறையும் இரண்டும்
அற்றதும் சேர்ந்திட ஆறு ஆகும் என்பர் அறிஞர்களே.

ஒற்றுமை உருவகத்துக்கு உதாரணம்

12. சிந்தைக்கு இசை எட்டம கேள் நிறைமதி சேர்ந்தி வரன்
இந்தப் புவி இன்று அளிக்கும் எனலும் இவன் நுதற் கண்
சந்தித்திடாத சிவன் எனலும் பொருந்தார் புரம்தீ
உந்தப் புரி இவன் முன்னோன் எனலும் உதாரணமே

அதன் செய்கை உருவகத்துக்கு உதாரணம்

13. மறுவார் மதிக்கு உயர்வாய் இவ்வதன மதி விளங்கப்
பெறுமே எனலும் இக்கற்பு மின் வாரிப் பிறப்பின் மறுப்
பொறியே எனலும் இவள் முக சோமனில் புந்தி மகிழ்
உறலால் அச் சோமனின் என்னே எனலும் உதாரணமே

திரிபு

14. செப்பு உவமானம் உவமேயம் ஆகத் திரிந்து தொழி
லைப் பயன் ஆகக் கொள வந்தால் திரிபு அணியாகும் மதிக்
கப் பெறு கண்ணி தெளிவாம்விழிப் பங்கயத்தில் கண்டாள்
இப்பொழுது என்பது இலக்கியம் தேர் தென் இளசை
மன்னே.

பலபடப்புனைவு

15. எடுத்து ஒன்றினைப் பலர் பல் விதமாக இயம்பல் பல
படப்புனைவாம் மன்னன் மின்னார் மதன் என்னப்
பற்றலர்கள்
மிடற்சமன் என்ன விரவோர் தரு என்ன மின்னுவன் என்று
இடப் பெறுகின்றது இலக்கியம் ஆகும் நல் எட்டமனே

16. ஒன்றைப் பலவிதமாகப் பல விடயத்தின் ஒரு
வன் தெரித்தாலும் அதுவே இவன் குரு வாக்கில் வில்லின்
குன்றல் இலாப்பயம் ஈவோன் அருச்சுனன் கூர்புகழில்
என்றல் உதாரணம் தேர் கருக்கோட்டை இறையவனே

நினைப்பு, மயக்கம், ஐயம்

17. நினைவும் மயக்கமும் ஐயமும் ஒப்புமையால் நிகழில்
அனையவையுள் முன் நினைப்பு அணி நாப்பண்
மயக்கஅணி

Koviloor Digital Library

பினையொரு ஐயம் அணியென மூன்றுக்கும் பேர்
உணர்வாய்
புனையும் மகுடபதியாம் குமாரெட்ட பூபதியே.

18. சந்தமரை கண்ட என்மனம் பெண் வதனம் நினைக்கும்
இந்த மதப்புறு வண்டு உன் முகம் மரை என்று உணரும்
அந்த முகம் மரையோ மதியோ தெளிவாக இல்லை
முந்தும் எனக்குளனல் காட்டாம் நிரையினம்மூன்றிற்குமே

வெற்று ஒளிப்பு

19. மறு தருமம் தனை ஆரோபித்தற்கு இடமாம் பொருளில்
உறு தருமத்தை மறைத்தால் அது வெற்று ஒளிப்பு அறியப்
பெறும் இது திங்கள் இலை வேறு எதனில் பெரு விணதி
இறை வெண் மரை என்று உதாரணம் தேர்க இளசை
மன்னே

காரண வொளிப்பு

20. முற்கூறிய ஒளிப்பு ஏது வினோடு முடிந்திடில்அ
தில் காரண வொளிப்பு என் பேர் உறும் வெம்மை
செய்திடலால்
அற்கோதை சோமன் அன்று என்று இரவு ஆகையில்
நன்று வரி
யிற்கூர் வடவை என்றாள் என்று இலக்கியம் எட்டமனே

வேறுபாட்டு ஒளிப்பு

21. ஒரு பொருளின் தருமம் தனை அவ்இடத்தே ஒழித்து
மருவதை வேறு ஒன்றில் ஆரோபம் செய்யவரில் அதின்பேர்
அரும் வேறு பாட்டு ஒளிப்பாம் காட்டும் திங்கள் இது
அன்று மற்றுஏ
து உரையெனில் பெண்முகம் திங்கள் எனல் எட்டவூர்
அரசே

மயக்க ஒளிப்பு

22. உள்ளது உரைத்து ஒருவர்க்கு உறு சங்கை ஒழித்திடுதல்
விள்ளும் மயக்க ஒழிப்பாம் பனிப்பொடு வெப்பினை நான்
கொள்ள வரும் எனவும் சுரமோ எனக் கூறும் சகி
தள்ளதை வேள் என்னில் இலக்கியம் தேர் இளசைத்
தலனே

வல்லோர் ஒளிப்பு

23. மன்னும் ஒருவன் சந்தேகித்ததுஓர்உண்மையை மறைத்தல்
தன்னை வல்லோர் ஒளிப்பு என்பார் புலம்பி என் தாள்
பற்றல் உண்டு

Koviloor Digital Library

என்னவும் நாயகனோ என்ற அவளுக்கு எழில் தலைவி
பொன்னின் சிலம்பு என்னில் இலக்கியம் தேர் எட்ட
பூபதியே

கைதவ ஒளிப்பு

24. கைதவமே முதலாகிய வாசகம் காட்டி மறைவு
எய்த உரைக்கில் அது கைதவ ஒளிப்பு இன் தலைவி
மைதவழ் நோக்கம் என் கைதவத்தால் மதன் வாளிவரும்
ஏய்துறவு என்னல் உதாரணம் எட்ட நகர்க்கு அரசே

தற்குறிப்பு

25. ஒன்றாம் பொருளை மற்று ஓர் பொருளாகவு ளேது பயன்
இன்றவை ஏது பயனாக ஊகித்தலே தற்குறிப்பு
என்றும் புலத்தின் அவை முன் விரி தொகை என்று பின்னா
நின்றவை உண்மை இன்மை என்றும் ஆறு நிகழ்த்து
வரே

26. சக்கரப் பேட்டின் மயல்தீப் புகைக்குழு வாத்தமத்தைப்
புக்க நினைவுறும் அல் பூசுகின்றது போல் அங்கத்தை
மிக்க விண்மையைப் பெய்கின்றது போலுறுமே உன்
மென்கால்
இக்குவில் வைக்கும் அதனால் சிவந்தது இது நிசமே

27. விதுநின் முகஒளிப் பெட்பால் மரையோடுமே இகலும்
இது நிசம் கொங்கையை ஏந்தப் பொன்நாண் களினால்
இடைவீக்
குதல் உற்றதோ நின் பதமொடு உரிமை கொள மரை நீர்
பதி நோன்பதோ என்று உதாரணம் தேர் எட்ட
பாண்டியனே

உருவக உயர்வு நவிற்சி

28. வயம் உவமேயம் அதை மொழியாது உவமானம் அதை
நயம் உறச் சொல்லி அதைக் காட்டிடில் அன்னது உருவக
உயர்வு நவிற்சி இரு குவளையில் நின்று ஒண்கணைஉ
தயம் உறும் என்னல் இலக்கியம்தேர் இளசைத் துரையே

ஒழிப்பு உயர்வு நவிற்சி

29. நுவற்சி பெறு முன் நயத்தொழிப் போடு நுவல வரில்
உவப்பு உறு செந்தமிழோர் இடு நாமம் ஒழிப்பு உயர்வு
நவிற்சி மன்னாவிலமுதாமருளர் மதிக்கண் அதைப்
பவிக்கும் என்பார் என்று இலக்கியம் எட்டம பாண்டியனே

Koviloor Digital Library

பிரிநிலை உயர்வு நவிற்சி

30. இது வேறு எனவும் பிரித்து வருணித்திடல் பலர்க்குப்
பொதுவாகிய தருமங்களை ஆகில் புகலும் பெயர்
அது பிரிநிலை உயர்வு நவிற்சி எட்டய்ய அவன் தன்
இதய கம்பீரம் பலம் இவ்வேறு என்பது இலக்கியமே

தொடர்பு உயர்வு நவிற்சி

31. இயைபு இன்றி அதை இயைபு படுத்தி இசைத்தல் தொடர்பு
உயர்வு நவிற்சி இம் மாநகர் மாடத்து உறுசிரம் ஒள்
ளிய இது மண்டலத்தைத் தொடும் என்பது இலக்கியம்சீர்
பயில் எட்டயபுரம் வாழும் குமாரெட்ட பாண்டியனே

தொடர்பு இல் உயர்வு நவிற்சி

32. அயரும் இயைபு உள்ளதை இயைபு இன்றி அறையும் அது
தொடர்பில் உயர்வு நவிற்சி வளல் எனத் தோன்றலின்
படர்ஐந் தருக்களை யாம் விரும்போம் அதிபா என ஒ
திட வருகின்றது இலக்கியம் எட்ட நரேந்திரனே

முறையில் உயர்வு நவிற்சி

33. உறை காரணமொடு காரியம் ஓர் பொழுதேஉறுதல்
முறையில் உயர்வு நவிற்சி நின் அம்பு முனைவர் குழாம்
இறைவ ஒரே சமயத்து மண்ணாரியினை உற்ற என்று
அறைவது இலக்கியம் காண்பாய் குமா ரெட்டனாம் அண்ணலே

விரைவின் உயர்வு நவிற்சி

34. வரு காரணம் உணர் போதே அக்காரியம் வந்திடுதல்
விரைவின் உயர்வு நவிற்சி அன்பன் பிரிவேன் எனவும்
அருமாதரசிக்கு மோதிரமே வளையாயிற்று என்னல்
மருவும் இலக்கியம் காண் எட்டயபுர மாமன்னனே

மிகை உயர்வு நவிற்சி

35. அமை காரியம் கண்ட பின் காரணமும் உண்டாகும் அதற்
கு மிகை உயர்வு நவிற்சி என்பார்: முனம் கோதையின் கோ
பம் அது கழிந்தது பின் கோ நயந்திடப் பட்டனள் உத்
தமி யென்று இலக்கியம் காண்பாய் குமாரெட்ட சற்குணனே

ஒப்புமைக் குழு அணி

36. இனமாம் புனைவுளிக்கேனும் புனைவிலிக்கேனும் உறு
வனமாம் தருமத்தின் ஒற்றுமை யேய் ஒப்புமைக் குழுவே

Koviloor Digital Library

உனுமா மதியின் மரை தூர்த்து ஐயர் முகம் உட்குவவாம்
எனலே வருணியத்து ஒப்புமைக் கூட்டத்து இலக்கியமே

37. வல்லி நின் மெய் மென்மை நோக்கும் அளவில் எவர் மனதில்
மல்லிகை இந்து கலை வாழை வன்மை என மதிப்பது
இல்லை எனல் அவருணியத்து ஒப்புமைக் கூட்டத்திற்கே
புல்லும் இலக்கியம் செங்கோல் கொள் எட்ட புரி மன்னனே

38. உறவர் இடத்தும் பகைவர் இடத்தும் ஒரே விதம் செய்
கிறதை உரைப்பதும் அவ்வணியே துதிக்கின்ற வரும்
செருநரும் ஆசுவணம் உற நீ செய்வை செல்வன் எனப்
பெறுவது உதாரணம் தேர்வாய் இளசைப் பிரபலனே

39. பொருள் ஒன்றை மேன்மைப் பொருள்களுடன் புகுத்திப் புகல
வருவதும் அவ்வணி மன்ன நமனும் வருணன் உடன்
திருநிதிமான் அரி நீயும் உலகைத் தினம் புரந்து
மருவுகின்றீர் என்று இலக்கியம் தேர் எட்ட மாமன்னனே

விளக்கு

40. உன்னும் புனைவுளிக்கும் புனைவில்லிக்கும் ஓர் தருமத்
தின் முடிவாதல் விளக்கு அணி சீற்றத் திப மதத்தால்
மின்னும் அரசு பிரதாபத்தால் என விள்ளுதலே
மன்னும் உதாரணம் தேர்க் குமாரெட்ட மாமன்னே

பின்வரு விளக்கு

41. முனம் ஆர் விளக்கு அணி மேவு தரும முடிவு தனித்
தனியே வரில் பின்வருவிளக்கு ஆம் அது தானும் சொலால்
கனிவாகிய பொருளால் அவ்விரண்டும் கதுவுதலால்
இனி மூன்று என வரும் எட்டபுரம் வளர் இந்திரனே

42. பொருவின்மை மேக நிரையும் வருடம் புரியும் இந்த
இரவும் வருடம் புரியும் கதம்பமுமே அலரும்
மரு மல்லிகையும் மலரும் சிகியும் மதிப்புறும் சீர்
தரு சாதகமும் மதிப்புறும் என்பது உதாரணமே

தொடர் முற்றுவமை அணி

43. இரு வாக்கியக்குத் தருமத்தின் ஒற்றுமையே முடிக்க
வருவ தனித்தனியேல் தொடர் முற்று உவமை இரவி
தரு தாபத்தால் உற்று இலங்கும் திறலி கொள் சாபத்தில்
மருவ மினும் என்று இலக்கியம் காண் எட்ட மாமன்னனே

Koviloor Digital Library

எடுத்துக் காட்டு உவமை

44. ஈட்டு இரு வாக்கியம் வெவ்வேறு தருமம் என்பவற்றால்
ஊட்டு விம்பப் பிரதி விம்ப பாவம் உறல் எடுத்துக்
காட்டு உவமை அரசே புகழோன் மதியே கதிரோன்
நாட்டில் என்று ஓதல் இலக்கியம் எட்டநகர்க்கு அரசே

காட்சி

45. சொல்லிட ஒப்பான இரு வாக்கியங்களில் தோன்று பொருட்கு
ஒப்புமை என்பதினால் ஆரோபம் காட்சி உயர்வளற்குச்
சற்குணம் யாது அது வாம்மதிக்குக் கறைதான் இலதாய்
உற்றிடல் என்பது இலக்கியம் எட்ட நல்லூர் அரசே

இரண்டாவதுகாட்சி அணி

46. நேரும் பதப் பொருள் ஆரோபமும் முன் நிகழ்த்து வதாம்
தாரும் புனை மென் முலையாய் உனது இரு தாரையும் நீர்
ஆரும் குவளை மலர்க் காந்தியினை அடைந்த தென்பது
ஒரும் இலக்கியம் வாழ் எட்டயபுர உத்தமனே

தீங்குப் பொருட் காட்சி நற்பொருட் காட்சி

47. தீப்பயன் ஆவது நற்பயன் ஆவது செய்கையினால்
வாய்ப் பொடு காணப் புரிவதும் அவ்வணி மாநிலவின்
கோப்பகையோன் நசிவான் என்று காட்ட மங்குல் கலையோன்
பூப்புறும் கால் நசிகின்ற தென் காட்டும்முன்போந்ததற்கே

48. தக்க நிதிப் பயன் நண்பர்க்கு உதவுதல்தான் என்று அறி
விக்க இரவி வரு பொழுதே பொன் விளைக்கின்றனன்
அக்கமலத்தில் என் காட்டும் பின் சொன்னதற்கு ஆம் புகழ் எண்
திக்கு நடாத்திடும் செங்கோல் குமாரெட்ட சீதரனே

வேற்றுமை

49. ஒப்பாம் மொழி உவமேயத்தில் ஒன்றினைப்பே
திப்பாம் எனில் அது வேற்றுமை மேலர் சிகரியைப் போல்
தப்பாது உயரினும் மெல்லியர் என்பது உதாரணமாம்
எப்பாவலோரும் புகழ் எட்டய புரத்து இந்திரனே

உடன் நவிற்சி

50. உணர்ந்தோர் உவக்க உடன் நிகழ்வு ஓதல் உடன் நவிற்சி
வணம் சேரும் வேந்தன் புகழ் திக்குறும் மருவாரொடு எனல்
இணங்கும் உதாரணம் சோமத் தலை விருதின் கழல்வங்
கணம் கொள் பதாம் புயதுங்க குமாரெட்டகாவலனே

Koviloor Digital Library

இன்மை நவிற்சி

51. எதும் ஒன்று இலாமை அதனால் புனைவுளிக்கே குறைவு
கதுவ உரைக்கில் அதுஇன்மை நவிற்சி இக் கல்வி உயர்வு
அதுதான் எனினும் வணக்க நிதியம் மருவிலதேல்
அதுமேல் அன்று என்னல் உதாரணம் தென் இளசைக்கு அரசே

சுருங்கச் சொல்லல்

52. ஒரும் அடைமொழி ஒற்றுமையால் புனைவுள்ளி விவ
காரம்புனை விலியின் விவகாரத்தைக் காட்டில் அதன்
பேரும் சுருங்கச் சொலல் காட்டு இசைப்பின் இராகியும் ஆய்
ஏரைந் திரிமுகம் கொஞ்சும் சசி எனல் எட்டமனே.

53. புனை வழிமே அடைச் சொல் ஒற்றுமை பிற்புனைவிலியாம்
நினைவதுமே மறைவாகி விளங்கி நிகழ்த்தவரில்
அனையும் பெயர் சுருங்கச் சொலல் என்று வகுத்தனளால்
அனைவரும் தேர் வித்தியா நாதன் என்னும் அருங் கவியே

கருத்து உடை அடை

54. கொண்ட விசேடணத்தில் புனைதற்கு அனு கூலக் கருத்து
உண்டெனில் நாமம் புகல்வது கருத்துடை அடை யென்று
அண்டும் அமுதகர முடி நாதன் அகற்றுக நம்
எண்தெறு தாபத்தை என்னல் இலக்கியம் எட்டமனே

கருத்துடை அடைகொளி

55. நடை கொள் விசேஷியம் தானே புனைந்து நவிலுவதற்கு
உடைய அநுகூலக் கருத்தோடு உறுதல் கருத்துடைய
அடைகொளி மால் என் சதுர்ப் புயனால் பொருளானவையின்
கொடையுளன் இலக்கியம் எட்டம கோள் அரியே

சிலேஷை

56. தெரியும் பல பொருள் சொற்களின்சேர்க்கை சிலேஷையது
வருணியம் மேய வருணியமே இருமை எனவாம்
மருவி வரு மலை அம்புவி ஏந்திய மாதவன் காண்
ஒரு குளக் கண்ணர் புரக்குகவே என்பது ஒன்றிற்குமே

57. அமுது விரவி உழையார் அலர் ஒப்பு னாநநம் உத்
தமி என்பது ஒன்றிற்கும் அம்பின் அதிபதி தான் இசையை
உமிழும் கறை உறும் என்பது ஒன்றிற்கும் உதாரணமாம்
சிமிழ் முலையார் மதன் என்னும் குமா ரெட்ட சீதரனே

Koviloor Digital Library

புனைவில்லிப் புகழ்ச்சி

85. அவருணிய வரலாற்றால் வருணியத்து ஆம் வரலாறு
இவரில் அது புனை வில்லிப் புகழ்ச்சி இலங்கு கரி
யவனை அல்லார்க்கு அணிரவாத சாதகம் ஆனது புள்
எவையினும் மேல் என்று இசைத்தல் இலக்கியம்
எட்டமனே

புனைவுள்ளி விளைவு

59. சொல் ஓர் வருணியத்தால் ஓர் வருணியம் தோன்றி டில்
எல்லோரும் சொல் புனை வுள்ளி விளைவு வண்டே
மலிகை
மல்லோடிருக்க முட் சூழ் தாழையில் என் வரும் எனலை
வல்லோர் உதாரணம் என்பார் குமாரெட்ட மாமன்னனே

பிறிதின் நவிற்சி

60. கருது பொருளுக்கு உரித்தாம் விதத்து இன்றிக் காட்டல்
மற்றை
ஒரு விதத்து என்னில் பிறிதின் நவிற்சி இராகுவின் ஓர்
அரிவை முலை வறிதாப் புரிந்தார்க்கு அன்பு செய்வம் என
வருவது உதாரணம் எட்டம பாண்டிய மாமன்னனே

61. கருதியதைக் கபடத்தால் முடித்திடக் காணில் அதும்
பிரிதின் நவிற்சி செல்கின்றனன் மாங் கொம்பினைத்தெரிய
இருவிரும் இங்கு இரும் என்பது உதாரணம் என்னையும்
ஓர்
பொருள் எனவே அருள் செய்யும் குமாரெட்ட பூபதியே

வஞ்சப் புகழ்ச்சி

62. நிந்தையினால் துதியும்துதியால் நிந்தையும் பணிக்க
வந்திடில் வஞ்சப் புகழ்ச்சி இப்பா வரை வானதியே
உந்துவை சொற்கம் அறிவு உனக்கேது என் உதாரணம்
தான்
முந்துறு நிந்தையில் தோன்றும் துதிக்கு மொழிந்தனரே

63. இன்று ஊதியே அதினும் செய வேண்டல் என்னெற்குநன்று
நன்றே எதற்காச் சென்று பெற்றனைபல்லின் நகத்தின்வடு
என்று ஒது உதாரணம் நிந்தை துதியில் இருப்பதற்காம்
அன்றோர் கடலில் அணை செய் குமாரெட்டனாம்
அண்ணலே

வஞ்சப் பழிப்பு

64. தனி நிந்தையால் நிந்தையே வருவது வஞ்சப் பழிப்பாம்
உனது ஓர் சிரம் மட்டும் முன் அரிந்தனவோ அவனை

Koviloor Digital Library

இனம் அலவா எள்ளுற வேண்டும் நான் முகனே எனச்
சொல்
வனவே இலக்கியம் தேர் எட்ட மாநகர் மன்னவனே

எதிர்மறை

65. தான் உரைத்திட்டதை ஆய்ந்து மறுக்கில் அதன் பெயரே
அனது எதிர்மறை அம்புலி நின்மெய் அறிவி அன்றேல்
கானம் மின்னாள் வத்திரம் உளதாம் என்று இலக்கியம்
காண்
மானவை வேற்கைச் செகவீர ராமக் குமா ரெட்டவனே

66. மறுத்து அலது தள்ளல் உண்டு மற்று ஓர் பொருள்
வந்திடச் செய்து
இறுத்ததும் அவ்வணி நான் தூதி அன்று அவளின் மெய்
வெப்பம்
ஒறுத்திடும் ஊழிக் கனற்கு ஒப்பது என்பது உதாரணம்தேர்
பொறுத்து எவர் பாலும் தயை செய் குமாரெட்ட
புண்ணியனே

67. உடன் படலே வெளியாய் விலக்கே மறைவாய் உலவும்
இடமும் அவ்வணி என் நாயகனே செல்வையேல் செல்
அங்கே
திடமொடு யான் பிறப்பேன் என்று இலக்கியம் செப்புவர்
காண்
தடமதில் அண்ட முகட்டினைத் தாங்கு இளசைத் துரையே

முரண்மேல் விளைவு

68. மேலாக மட்டும் விரோதம் உறல் முரண் மேல் விளைவு
வேலாம் விழியாம் முலை முத்தம்மே விலளேனும் முத்தம்
சாலாக மேவினள் என்னல் உதாரணம் தண்டலையின்
பாலாரும் தேன் அதி போல் சூழும் எட்டபதி மன்னனே

பிறிது ஆராய்ச்சி

69. நேராது காரணம் காரியம் தோன்றில் நிகழ்த்து பிறிது
ஆராய்ச்சி அணி அலத்தகம் இன்றி அமைந்திடினும்
சீரார் இவள் இரு பாதம் சிவந்த என்றே உரைத்தல்
பாராய் உதாரணம் நல் எட்டய புர பாண்டியனே

70. ஏது இன்றி அம் குணம் தாம் குறைந்தும் காரியம் எழுதல்
ஓது இரண்டாம் அவ்அணி மதன் கூர்மை யொடு வளமை
யாதும் இலாக்கணை ஆலே உலகம் அடங்கி யிட
மோதுவன் என்பது இலக்கியம் எட்டம முன்னவனே

Koviloor Digital Library

71. இகலே இருக்கினும் காரியம் தோன்றி இடுதலையும்
புகலுவ மேலது மூன்றாம் அவ்வணி நின் புட்கரப்பன்
னகம் பணியாரைத் தெறும் என்று உதாரணம் நன்கு உரைப்பார்
செகவீர ராம குமாரெட்ட பாண்டிய சீதரனே

72. காரணம் இல்லதில் காரியம் வேறுறக் காணில் அதைத்
தாரணியோர் ஒரு நான்காம் அவ் அணி என்றுர் தழங்கும்
வாரணம் ஆனதில் யாழ்ஒலி என்ன வரல் அதற்கு
உதாரணம் எட்டமபுர மகராச உதாரமனே

73. பகையாகும் ஏதுவில் காரியமே உற்பவிப்பதை ஐந்தாம்
வகை மேவும் அவ்வலை சீதமதியின் வளர் கிரணம்
தகையார் இப்பெண்ணினை வாட்டிடும் என்னல் உதாரணமாம்
திகைதோறும் வல்விசயம் செய் குமா ரெட்ட திண்புயனே

74. காரியத்தே நின்றும் காரணம் தோன்றிடக் காணில் அதை
யாரும் அவணியில் ஆறாவது என்பர் அதிபநின் நகத்
தாருவில் சீர்த்தி எனும் பால் புணரி தழைத்தது என்றல்
தேரும் உதாரணம் எட்டபுரத்து உத்திட்ட மன்னே.

காரணவாராய்ச்சி

75. குறைவறு காரணம் மேவியும் காரியம் கொண்டு இலதை
அறைவது காரண ஆராய்ச்சி காம விளக்கு அவிர்ந்தும்
நிறை பெறு நேயம் குறைவிலை என்ன நிகழ்த்துதல் காட்டு
இறைவரும் போற்று குமாரெட்ட பாண்டியன் என்னும் மன்னே

கூடாமை

76. அரிதாகும் காரியத்து உற்பவம் என்னல் கூடாமை அணி
கிரியாயச் சேய் எடுப்பான் என்று எவன் அறிகின்றவன் என்று
உரை பேசிடுதல் உதாரணம் ஆம் அயனோடு வந்து
திருமால் பணி கழுகாடலன் பாதத் தியானத்தனே

தொடர்பின்மை

77. காரியம் காரணம் வெவ்வேறு இடம் பகையாய் உறலே
ஆரும் தொடர்பு இன்மை என்பர் சலதரம் ஆலம் உண்ண
ஊரும் வழிச் செல்லுவோர் மடவார் உயவுறார் எனல் இங்கு
ஒரும் இலக்கியம் தேர் எட்டயபுர உத்தமனே

Koviloor Digital Library

78. ஓரிடத்தே செய்ய வேண்டியதனை மற்றோர் இடத்து
நேரிடச் செய்தலும் ஒன்று புரிய நிகழ்ந்ததற்குக்
கூறிய மாறு புரிதலும் அவ்அணிக் கூறுகள் ஆம்
பாரில் மருவலர் சந்தானம் இன்மை பணம் நினைந்தே

79. விண்ணின் மருவலர் சந்தானம் இன்மை மிகப் புரிந்தாய்
கண்ண என்று ஓதுவதும் கோத்திரம் விளக்கற்கு வந்தே
பண்ணினை கோத்திரம் தூளாக என்று பகருவதும்
நண்ணும் இலக்கியம் தேர்வாய் இளசை நரேந்திரனே

தகுதி இன்மை அணி

80. பொருந்தும் தகுதி அமையாப் பொருட்குப் பொருந்துதலும்
இருந்திடவே வருணித்தல் தகுதி இன்மை அணியே
அருந்தகை வாகை மலர் மென்மெய்ப் பெண் எங்கென் அங்கியினால்
வரும் தாபம் எங்கு என் இலக்கியம் காண் எட்டமா மன்னனே

81. ஏது ஒன்றில் குணம் வேறு ஆன காரியமே வரலும்
ஓதிய அவ்வணி மன்னா நின் கார் நிறம் ஊர்வசிசு
வேத நிறப் புகழ் உண்டாக்கும் என்ன விளம்பிடுதல்
ஈதின் இலக்கியம் காண் எட்டயபுரத்து இந்திரனே

82. அநுகூலம் கொள்ளத் தொடங்கி அதுமுடியாமலும் தீங்
கினையே அடைவதும் அவ்வணி பண்டம் வைகின்றது என்று
முனிநாகப் பெட்டியினைக் கடித்தாகும் முனைந்து அவ் அர
வினது இரையாம் என்று இலக்கியம் விள்வர் இளசை மன்னே

தகுதி அணி

83. இசையும் இரண்டு பொருளின் வருணித்தலே தகுதி
அசைவுறும்ஆரமுலையைத் தனக்கு இசைவாம் எனவே
நசையோடு இருப்பிடம் ஆக்கினது என்ன அன் காட்டதுவாம்
விசையனை நேரும் குமாரெட்ட பாண்டியமேன்மையனே

84. காரியம் ஆனதைக் காரணத்தோடு ஒப்புக் காண் புகழ்ச்சி
நேரினும் அவ் அணி தெண்ணீர் உதித்த நினக்கு எங்கும்கீ
ழார் இடமே இருப்பானது சிதம் அரிக்க அமைந்த
பாரி என்று ஓதல் இலக்கியம் எட்டம பார்த்திபனே

85. இச்சை கொண்டே முயற்சித்த பயன் குறைவின்றி முடி
வைச் செல்வதும் அவ் அணியே துடி அடி வாரணத்தை
நச்சிய நிற்குத் துடியடி வாரணம் நண்ணிற்று அம்மான்
மெய்ச்சுதவு என்னல் உதாரணம் எட்டம விற்பவனே.

வியப்பு

86. கருதும் பயனுக்கு எதிரா முயற்சியை கைக் கொடுத்தான்
புரிதல் வியப்பு அணி நல்லோர் திரிபுவனத்தினுமே
யிரும் உயர்வாக வணங்குவர் என்பது இலக்கியம் தேர்
அரிதிருமால் எனும் சாத்தூரர் ஆணை கொள் அன்புளனே

பெருமை அணி

87. வாயும் பெருமை கொள் ஆதாரம் தன்னினும் மன்னியஆ
தேயம் பெரிதெனச் சாற்றல் பெருமை திகழ் மனம் நின்
நேயமுமே பிரமாண்ட மிதக்கின்ற நீர்க்குள் உறா
தாய் உறும் என்னல் உதாரணம் எட்ட தலத்து அரசே

88. பேர் உருவாகிய ஆதேயம் தன்னினுமே பெரிது ஆ
தாரம் எனலும் அவ்வணி இறைவ நின்தன் குணங்கள்
சார்உறு வாக்கு என் பிரமம் எவளவு தானிருத்தல்
நேரும் என்று ஓதல் இலக்கியம் எட்டம நேயத்தனே

சிறுமை

89. நுண்ணியது ஆகிய ஆதேயம் தன்னின் நுட்பம் உறவே
நண்ணியது ஆமொரு ஆதாரத்தைப் பனலும் சிறுமை
அண்ணமுதே நின்மணி மாலையாம் விரல் ஆழிசெபம்
எண்ணுதற்காம் வடம் என்னல் இலக்கியம் எட்டமனே

ஒன்றுக் கொன்று உதவி

90. உதவி ஒன்றுக்கு ஒன்று உறவைச் சொல் ஒன்றினுக்கு
ஒன்று உதவி
விதுவினி ராவும் விளங்கும் இராவின் விதுவு விளங்
குதல் உறுமென்பது உதராணம் ஆம் திறைகொண்டு வந்து
சதமுறு மன்னர் தொழும் என் குமாரெட்ட சற்குணனே

சிறப்பு நிலை

91. ஆயும் பிரசித்தத்து ஆதாரம் இன்றி அதில் உறும் ஆ
தேயம் அதை வருணிக்கும் அதன் பேர் சிறப்பு நிலை
சேய வேல் வாரி புகுந்தும் தினகரன் தீபம்உற்றக்
காயும் என்று ஓதல் இலக்கியம் எட்ட நகர்க்கு அரசே

92. பல் இடத்து ஓர் பொருள் தன்னை வருணிப்பது அவ்வணி
புல்லி அகம்புறம் முன்பின் எனத் திக்கும் பொலிவுற இன்

Koviloor Digital Library

சொல்லியையே கண்டன் என்றும் உதாரணம்
சொல்வர் மணப்
பல்லியம் என்றும் அதிர் எட்ட மாநகர்ப் பாண்டியனே

93. சிறுகாரியத்து முயற்சியினால் பெரிதே எனச் சொல்
மறு காரியம் கிடைக்கின்றதும் அவ்அணி மன்ன நிற்பார்க்
கிறயான் தருக்கண்டனன் எனல் இலக்கியம் கேட்டவர்க்கு
அறநாலெட்டும் தினம் சேர் எட்டமாநகர் ஆள்பவனே

மற்றதற்கு ஆக்கல்

94. எதை எதற்கு ஏது எனப் பூமியும் கொண்டிருந்ததை
அதின் பகைக் காரியக்கு ஏதுவும் ஆக்கலும் மாரொருவன்
விதி காரியம் ஒன்றிற்குச் சாதனம் எனவே பொருத்தின்
அதை வேறு ஒருவன் அதின் பகைக்காரியம் ஆனதற்கே

95. சாதனம் ஆக்கலும் மற்றதற்கு ஆக்கல் உதாரணம் பார்
யாது மகிழ் மலரான் வேள்வைக்கு அயர்வு ஆற்றும்
என்றும்
மாதிருக் கால் எரி வேளினை மாதிருக்கால் வரச் செய்
கோதையர் மேலர் என்றும் தேர் இளசைக்
குமாரெட்டனே

96. ஒரு காரியத்தை எளிதா முடிக்க வுட்கொண்டு அது அந்த
வரு காரியத்தின் இகலுக்கும் உட்கொள்வதும் அவ்அணி.
பெருமான் சிறுவன் என்று என்பால் அருளப் பெறில்
விலக்கற்கு
உரியன் அன்று என்பது உதாரணம் எட்டம உத்தமனே

காரணமாலை

97. தேர முன் முன்ன எனினும் பின் பின்ன எனினும் திகழ்
காரணமே தொடர்பாக வருவது காணல் அதன்
பேர் அது காரண மாலை அறத்தில் பெறும்
பொன்னினால்
ஏர் உறும் ஈகை அவ் ஈகையில் சீர் உறும் என்பதுமே

98. அள்ளலும் பாவத்தினல் பாவமும்மிடியால் மிடியும்
வள்ளன்மை இன்மையினாலே அடைய வரும் என்பதும்
விள்ளும் உதாரணம் தேர்மும்முரசு எழு வேலையையும்
எள்ளியிட்டு ஆர்க்க வளர் எட்ட மாநகர்க்கு இந்திரனே

ஒற்றை மணிமாலை

99. பின்பின் உறுவன வற்றிற்கு முன்முன் பிறந்து வரும்
என்ப விசேடியம் என்றும் விசேடணம் என்றும் வர

Koviloor Digital Library

லின் பெயர் ஒற்றை மணிமாலை கண் செவியை அது
தோள்
மன்னும் அத்தோள் முழந்தாள் உறும் ஆங்கு அது
வாடியெனே

100. கன்றல் இல்யாது ஒன்றிடைக் கலப்பால் திசைகாலம் உயிர்
என்றவைக்கு ஒப்பது அதில் எவன் மின்னி இடுவன் அவன்
பொன் திகழ் காந்தி எவன் பால் அமுதம் பொழியும்அவன்
அன்று எதின் சங்கத்து உதித்தான் எதுவும் அவைகளிலே

101. பித்தம் என்றுகும் எவர்கள்அதற்கு அவிப் பேறருள் வார்
நித்தம் எது அவர்கட்கு உயிர் ஆகும் நிகழ் எதின்கு
ணத்தை அது கொண்டதோ அது முன்னம் நகுசிவமூர்த்
தத்தை நினை என்று உதாரணம் எட்டதலத்து மன்னே

மாலை விளக்கு

102. காட்டிய ஒற்றை மணிமாலையை விளக்கைப் பொருத்தி
நாட்டுதல் மாலை விளக்காம் மதனன் அவள் மனத்துந்
திட்டுறும் அந்த மனத்தின் நுன் பாலினும் சேர் இருப்புப்
பூட்டியது என்பது உதாரணம் எட்டபுர மன்னனே

மேன்மேல் உயர்ச்சி

103. ஒன்றினுக்கே ஒன்று மேன்மேல் உயர்தல் உரைத்திடவே
நின்றது மேன் மேல் உயர்ச்சி பிரசம் நிறை மதுரம்
மன்ற அதினும் சுதை யதினும் கவிவாய் மொழியே
என்றல் உதாரணம் செங்கோல் குமாரெட்டஇறையவனே

நிரல் நிறை

104. வரிசையில் கூறும் பொருள் கட்குச் சம்பந்தம் ஆவமுறை
தெரிவுறச் சொல்லல் நிரல்நிரை தெவ்வைச் சிநேகனைத்து
யரை வெற்றி செய் இரசம் செய் பங்கம் செய் அரச
என்பது
உரை செய் உதாரணம் சிர்த்திக் குமாரெட்ட உத்தமனே

முறையிற் படர்ச்சி

105. ஒரு பொருளுக்கு முறையாப் பலவாய் உறுதலைச் சொல்
வருதல் முறையில் படர்ச்சி இம்மாது வதன ஒளி
மருமலர் தன்னை விடுத்து முழுமதியை அடுத்து
மருவியது என்பது இலக்கியம் எட்ட மகா மன்னனே.

106. ஒரிடத்தே பல் பொருள் முறையாக உறும் அதனைத்
தேரிடச் சொல்வதும் அவ் அணி எங்கும் உன்திம் புனல்மீ

Koviloor Digital Library

தூரிட உற்ற தங்கு இந்நாள் புளிமை உறும் எனும்உ
தாரணம் தேர் புகழ் ஓங்கும் இளசைத் தயாபரனே.

மாற்று நிலை

107. குறைவாம் பொருளைக் கொடுத்து அதிகப் பொருளைக் கொளலுக்கு
அறைபேர் உரும் மாற்று நிலை அணி மன் ஒரு அம்பு உதவித்
தெறுநரின் செல்வம் மொண்டான் என்று உதாரணம் செப்புவரால்
மறைஒலி வாழ்த்து ஒலி சூழ் எட்ட மாநகர் மாமன்னனே

ஒழிந்துக் காட்டு அணி

108. பொருள் ஒன்றை ஓர் கண் அகற்றி மற்றோர் கண் பொலியும் அது என்று
உரை செய்தலே ஒழித்துக்காட்டு நேயத்து உறுகுறைவு
தெரிதல் விளக்கு இடை அல்லாது நன்னுதல் தேவியர் தம்
இருதயத்தின் என்று இலக்கியம் தேவை இளசை மன்னே

உறழ்ச்சி

109. ஒத்திடு வல்ல இரு பொருட்குத் தெவ் உதிக்க விகற்
பித்தல் உறழ்ச்சி அணியாம் எதிர்த்த பெரும் பகையீர்
மத்தக மேனும் கொடுமரமேனும் வணக்கும் என்றுஇ
சைத்தல் உதாரணம் எட்ட புரத்தைந் தரும் மன்னனே

கூட்டம்

110. ஒரு காலத்தே குழுக் கொள்ளும் தொழில்கள் உடன் படவே
தரும் ஆறு கூட்டம் அணி வேந்தனே நின் றரியலர்கள்
பொருவர் நசிவர் புரம் காட்டுவர் பயம் பூண்பர் என
வரும் ஆறு உதாரணம் எட்ட புரத்து வரோதயனே.

111. பல காரணங்கள் தனித்தனி முக்கியம் பற்றி ஒரு
வல காரணத்தை முடித்தலும் அவ் அணி மாகுலமும்
நலகாமரும் வயதும் கல்வியும் செல்வமும் இவனுக்கு
இலகா மகிழ்விக்கும் என்பது உதாரணம் எட்டமனே

வினை நுதல் விளக்கு

112. உதி நிரலா ஒருவன் செய்கை ஈட்டல் உரைத்தல் வினை
நுதல் விளக்காம் வழிப்போவன் வருவன் முயன்று உணர்வன்
எதிரில் வினவுவன் என்பது உதாரணம் எட்டபுரத்து

Koviloor Digital Library

அதிபதி என்னும் குமாரெட்ட பாண்டியனாம் அரசே

எளிதின் முடிவு

113. மற்று ஒரு ஏது உதவியால் காரியம் வாய எளிது
உற்று முடிதல் எளிதின் முடிபு அணி ஓர் தருணி
பற்று மயல் அடைந்தாள் புக்கனன் கடற்பானு எனச்
சொற்றது உதாரணம் தேர் எட்ட மாநகர்த் தூயவனே

விறல்கோள்

114. வலிய பகைவரைச் சேர்ந்தோர் இடத்து வயம் இயற்று
தலின் பேர் அது விறல் கோள் அணி வெற்றி கொடாரை உடன்
புலி செவி கீழ் உறச் செய்தன உற்பலப் பூ எனவே
சொலுதல் உதாரணம் தேர் மன் குமாரெட்ட சுந்தரனே

தொடர்நிலைச் செய்யுட் பொருட்பேறு

115. ஒரு பொருட் கூறி எனச்சொல் வேண்டுமென்று ஒன்றின் சித்தி
மருவில் தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேறு அணி மடந்தாய்
வருநின் முகத்தின் மதி தோற்றது என்னின் மரை மலருக்கு
உரை என்ன என்பது இலக்கியம் எட்டம உத்தமனே.

தொடர் நிலைச் செய்யுட் குறிப்பு

116. சாதிக்க வேண்டும் பொருளினைச் சாதித்தலுக்கு இடு பேர்
ஓதில் தொடர்நிலைச் செய்யுட் குறிப்பு அணி ஓர் மதனே
நீ திட்டமா வெலப்பட்டாய் என் நெஞ்சு இடை நின்றனன் மூன்று
ஆதிக் கண் என்று இலக்கியம் தேர் இளசைக்கு அரசே

வேற்றுப் பொருள் வைப்பு

117. பொதுவால் சிறப்பைச் சிறப்பால் பொதுவினைப் பூரித்திடல்
அதின் நாமம் ஓர்ந்திடில் வேற்றுப் பொருள் வைப்பு அணி அநுமன்
நதி நாயகனைக் கடந்தான் பெரியர்க்கு எந்நாளும் அரிது
எது தான் என்று ஓதுவது தானும் ஒன்றிற்கு இலக்கியமே

118. நயமாம் குணப் பொருளின் சேர்க்கையால் நயமில் பொருளும்
உயர்வாம் பெருமலர்ச் சேர்க்கையினாரும் உறும் சிரத்தின்

Koviloor Digital Library

வயமே என்று ஓதலும் ஒன்றிற்கு இலக்கியம் மண்டலம் ஓர்
புயம் மீது கொண்ட குமாரெட்ட பாண்டிய பூபதியே

மலர்ச்சி

119. சிறப்பை நிறுத்தும் பொதுவை நிறுத்த மற்று ஓர் சிறப்பை
உறப்புகலுதல் மலர்ச்சி இக்கோவைஉள்ளார்கள் வெல்லார்
அறப் பெரியோரை அலைபோல் வெலற்கு அமையாது எனிலே
பிறக்கும் உதாரணம் தென் இளசைக்குப் பெரும் அரசே

கற்றோர் நவிற்சி

120. மிகுதிக்குக் காரணம் இல்லதைக் காரணமா விளம்பத்
தகுவது கற்றோர் நவிற்சி யமுனைத் தமால மரத்
தொகுதி நிகர் கறுப்புற்று விளங்கும் இத் தோகை மின்னாள்
நகு குழல் என்பது இலக்கியம் எட்ட நகர்க்கு அரசே

உய்த்து உணர்வு

121. ஒரு காரியம் முற்ற இவ்விதம் ஆகில் என்று ஊகித்திட
வருவதின் பேர் உய்த்து உணர்வு நிருபன் மகிமை முற்றும்
உரையிடலாம் புகழ்வோன் சேடனேல் என்று உதாரணம் தேர்
வரை தகரப் பொரு வாகன் குமாரெட்ட மன்னவனே

பொய்த்தற் குறிப்பு

122. பொருள் ஒன்றினைப் பொய்மை ஆக்கற்கு மற்று ஒரு பொய்ப் பொருளை
அருகு கற்பித்தல் பொய்த்தல் குறிப்பாம் விண்ணலர்த் தொடையன்
மருவுறப் பூண்டவன் வேசியர் தம்மை வசப்படுத்தற்கு
உரியன் என்று ஓதல் இலக்கியம் எட்டம உத்தமனே

வனப்பு நிலை

123. வருணிய விசேடியத்தை மட்டும் சொலி அவ்வரலாறு
அருளுதல் இன்றி அவருணிய வரலாற்றினைப் ப
கருதல் வனப்பு நிலையாம் இவள் கம கன்றிடு பின்
ஒருவணை செய்யும் எனல் எட்ட மன்ன உதாரணமே

இன்பம்

124. முயலுகை இன்றி அவாவிய காரியம் முற்று உறுதற்கு
இயலும் பெயர் இன்பமே ஆம் தியானித்து இருக்கும்அவன்
வயம் அவளே சந்து சொல்ல வந்தாள் எனல் வாயும் இலக்
கியம் எட்ட மாநகர் வாழும் குமாரெட்ட கேசவனே

Koviloor Digital Library

125. விரும்பியதிலும் அதிகம் கிடைத்தலுமே அவ்வணி
துரும்பு கொண்டே விளக்கைக் காந்தி செய்யத் தொடங்கு கையில்
பெரும்பரிதி உதித்தான் என்று உதாரணம் பெற்று இமை தேர்
கரும்பையும் வென்ற சொல் ஓதும் குமாரெட்ட காகுத்தனே

126 கருவி பெறும் பொருட்குச் செய் முயற்சி இக் கணப் பொருள் அதுவே
வருவதும் அவ் அணி நிட்சேபம் கொள்ளற்கு வாய் கருவிப்
பெருவஞ்சனம் செய வேர் தொடும் போது பெற்றான் புதையல்
திரு என்று உதாரணம் சொல்வார் இளசைச் சிகாமணியே

துன்பம்

127. இச்சை கொளும் பொருளைக் குறித்தே செய்கையே புரிய
அச் செயற்குப் பகை ஆம் பொருள் சேரும் அது துன்பம் ஆம்
மெச்சுறு தீபம் விளங்கிடச் செய் பொழுதே அவிந்தது
உச்சமின்னே என்று உதாரணம் தேர் எட்ட ஊர் அரசே

அகமலர்ச்சி

128. ஒன்றின் குணத்தினைக் குற்றத்தை மற்று ஒன்றினுக்கு உரைக்க
நின்றது அகமலர்ச்சிப் பேர் கொளும் கற்பின் நேரிழையார்
என்றும் முழுகித் தனைச் சுத்தமாக்கல் நன்று என்றுகங்கை
இன்றும் விரும்புவள் என்பது இலக்கியம் எட்டமனே

இகழ்ச்சி

129. மற்று ஒன்றினுக்கும் ஒன்றின் குணம் குற்றம் மருவில் அதைச்
சொற்றல் இகழ்ச்சி அணி நாழி வாரி தொடினும் சிறிய
உற்ற புனல் கொளும் கஞ்சக் குவிவின் உடுபதிக்கு என்
குற்றம் என்று ஓதல் இலக்கியம் தென் இளசைக்கு மனே

வேண்டல்

130. குற்றத்திலே குணந் தோன்றி இடலை உட்கொண்(அதனை
முற்றக் கருதுதல் வேண்டல் அணி துயர் மூண்டிடு கால்
பெற்றப் பலன் நினைவு உண்டாத லால் அவை பேதையனுக்கு
எற்றைக்கும் வேண்டும் என்று ஓதல் இலக்கியம் எட்டமனே

Koviloor Digital Library

இலேசம்

131. கோதைக் குணம் எனவும் குணம் ஆனதைக் கோது எனவும்
ஓதப் பெறுவது இலேசம் புள் எல்லாம் உலவு இடத்து அம்
போதப்படி சுகமே நிற்குக் கூட்டிற் புகுதல் சுவை
யீதல் சொலின் பலம் என்னல் உதாரணம் எட்டமனே

குறிநிலை

132. புகழும் பொருளை உணர்த்தும் உரையில் புலப்படுத்தும்
தகுதிப் பொருளினைக் காட்டல் குறிநிலை தண் இளசை
யகம் அலங்காரம் கலித்துறையின் கவி ஆளும் எனப்
பகரல் இலக்கியம் காண்பாய் குமா ரெட்ட பார்த்திவனே

இரத்தின மாலை

133. புகழும் பொருளை முறை வழுவாது புகலுதற்குப்
பகருறு நாமம் இரத்தின மாலை நற் பார்த்திபநான்
முகன் திரு நாயகன் சங்கரன் நீ எனவே மொழியத்
தகுவது இலக்கியம் செந்தமிழ் ஓங்கு இளசைத் தலனே

பிறிதின் குணம் பெறல்

134. தன்குணம் நீக்குபு மற்றோர் பொருளினைச் சார்குணத்தை
நன் குறலி னன்பேர் பிறிதின் குணம் பெறல் நாரிக்கை
பன் கவின் பாலிகையான் மூக்கணி முத்தமும் பவள
மென் கனி உற்றது என்று ஓதல் இலக்கியம் எட்டமனே

தொல்லுருப் பெறல்

135. ஒன்று மற்று ஒன்றின் குணம் கொண்டு மீட்டும் முன் உள்ள குணம்
நன்று உறலே தொல் உருப் பெறல் மன்னவ நாதன் களம்
நின்ற ஒளியில் கருமை கொள் சேடன் உன் நீள் புகழ் சேர்ந்து
இன்று வெளுத்தனன் என்னல் உதாரணம் எட்டமனே

136. ஒருபொருள் வேற்றுமை யாயும் பழமையதே யுறப்ப
கருதுவதும் அவ்வணி திபத்தைப் பாற்றியும் காஞ்சியுறு
பெருமணியால் அதிகப் பிரகாசமும் பெற்றதென
வருவது இலக்கியம் எட்டபுரத்து மகபதியே.

பிறிதின் குணப்பேறு இன்மை

137. தன்னுடன் சேர் பொருளின் குணம் பெற்றிலதாய் இருக்கப்
பன்னுதல் பேர் பிறிதின் குணப்பேறு இன்மை பார்த்திவ நீ
மன்னும் இராகியும் ஆகாய் இராகி எனும் என் மனம்
இன்மை இருந்தும் என்று ஓதல் இலக்கியம் எட்டமனே

Koviloor Digital Library

தன்குணம் மிகை

138. வேறு பொருளின் புணர்ப்பால் இயற்குணம் மேன்மை உறல்
கூறுவதே தன்குணம் மிகை ஆகும் குவளைமலர்
மீறும் கடைக்கண் நின் பார்வையினான் மிகவே பருமை
ஏறும் என்று ஓதல் இலக்கியம் தென் இளசைக்கு இறையே

மறை

139. இருபொருளுக்குப் பொதுவாகிய குணத்தில் பிரிவே
தெரிவுறல் இன்மை மறைஅணி ஆம் இயல்பில் சிவப்பா
வருநின் பதத்தில் அலத்தகத்தின் செம்மையும் தெரியாது
அருமாது என்று ஓதல் இலக்கியம் தென் இளசைக்கு அரசே

பொதுமை

140. இருபொருளுக்கு ஒப்புமையால் விசேடம் இராது உரைக்க
வருதல் பொதுமை அணிஆகும் பங்கய வாவிஉற்ற
அரிவையர் தம்முகம் காணப் படவில்லை அன்ப எனத்
தெரிவது உதாரணம் தென் இளசைப் பதித்திண் புயனே

மறையாமை, சிறப்பு

141. சில காரணத்தில் பிரிவை விசேடத்தைத் தேர அறி
தலின் நாமமும் மறையாமை சிறப்பு எனச் சாற்றிரண்டாம்
நவன்சிர் முழுகி இமயம் குளிரால் மதி நண்ணின் முகம்
சலசம் தெரியும் எனல் எட்ட மன்ன உதாரணமே

இறை

142. கருத்து ஒன்றினை மறைவாய் உட்கொளும் விடை
காட்டல் இறை
திருத்திகழ் வேதசிவல்லி எவண் வதியும் அவளே
பொருத்தல் இவ்ஆற்றை எளிதாக் கடக்கப் பெறுவை நடை
இருத்திய என்னல் இலக்கியம் எட்டம வேற்கையனே

நுட்பம்

143. பிறன் கருத்து ஓர்ந்து கருத்தோடு கூடப்பெறு செய்கையால்
உறுவிடை ஈவது நுட்பம் அவள் கண்ணுறும் என்முனம்
செறிவுறு கூந்தலிற் சூடாமணி மறை செய்வள் எனப்
பெறுவது உதாரணம் தென் இளசைக்குப் பெரு மன்னனே

கரவு வெளிப்படுப்பு

144. ஒருவன் மறை செய்கை ஓர்ந்து கருத்தோடு உறுதொழிலால்
விரவும் அதை வெளிஆக்கல் கரவு வெளிப் படுப்பாம்
உரியன் மனைக்கு வரவும் மனைவி உற விரித்தாள்
பரவணை என்பது உதாரணம் எட்டம பாண்டியனே

Koviloor Digital Library

வஞ்ச நவிற்சி

145. மற்று ஒரு ஏது அதனை உரைத்து உண்மையை மறைத்தற்கு
உற்றிடு பேரது வஞ்சநவிற்சி உயிர்ச் சகியே
பொற்றளிர்க் காமலர்ப் பூந்தாதினால் என்புரம் புழுதி
பற்று உற்றது என்பது இலக்கியம் எட்டம பாண்டியனே

குறிப்பு நவிற்சி

146. ஒருவர் குறித்து உரைக்கின்றதையே மற்று ஒருவர் குறித்து
உரைசெயில் பேரும் குறிப்பு நவிற்சி மற்று ஓர் செயில்வாய்
தருசொல் அருந்திடு காளாய் களமர்கள் சார்வர் அதை
ஒருவுவை என்பது இலக்கியம் தேர் எட்ட ஊர் அரசே

வெளிப்படை நவிற்சி

147. புகலும் சிலேடையினாலே மறைத்த பொருளை வல்லோன்
பகல் உறவே வெளி செய்வது வெளிப்படை நவிற்சி
தகவே பிறர் செயின் நின்று அகல் காளை என்றான் குறிப்பின்
அகமே என்று ஓதல் உதாரணம் எட்ட நகர்க்கு அரசே

உத்தி

148, தன்னம் தரங்கம் தனையே மறைக்கத் தகு தொழிலான்
மன்னும் பெயரை வஞ்சித்திடல் உத்தி மகிப நினைக்
கன்னி வரை கையில் மற்றோரைக் கண்டு கையில் மலர்வில்
லின் உருத் தீட்டினள் என்பது இலக்கியம் எட்டமனே

உலக வழக்கு நவிற்சி

149. உலக வழக்கு மொழியை அநுவதித்தே உரைக்கில்
பலரும் உலக வழக்கு நவிற்சி என்பார் சகியே
சிலதினம் கண்களை மூடிப் பொறுத்துத் திரிவை எனச்
சொலுவது உதாரணம் எட்டபுரத்து அச்சுத மன்னனே

வல்லோர் நவிற்சி

150. கருத்து ஒன்றினை உலகச் சொலுள் கொண்டிடக் காணும் அதற்கு
இருத்திய பேரது வல்லோர் நவிற்சி எனது உளம் கூர்
அருத்திய பாம்புகளின் காலைப் பாம்புகளே அறிதற்கு
உரித்து என்று உதாரணம் சொல்வார் இளசை வரோதயனே

மடங்குதல் நவிற்சி

151. விரிவாம் சிலேடை இசை வேற்றுமை ஒன்றின் வேறு பொருள்
தரவே கற்பித்தல் மடங்குதல் நவிற்சி தான் இளசை

Koviloor Digital Library

வரகேள் இப்பெண்ணின் இடமா சினந்திவரல் லிடெனில்
அரன் பால் உளது இங்கிலை எனல் காட்டு என்று
அறைகுவரே

நன்மை நவிற்சி

152. சாதி முதலியவையினில் இயற்கைத் தருமம் அதை
ஓதுதல் தன்மை நவிற்சி வெருள் விழியோடு அசைவில்
காது உளதாகி மறிநோக்கும் என்பது உதாரணம் காண்
தாதுறு முல்லை அணிதோள் குமாரெட்ட தாயகனே

நிகழ்வின் நவிற்சி

153. நடந்ததையேனும் நடப்பதையேனும் தன்முன்னில் நடந்
திடுகின்றது என்னல் நிகழ்வின் நவிற்சி இத்தேத்து
விண்ணோர்
உடன் உணர் புரிகின்றார் அமர் இன்று என்று
ஓர்கிறன் யான்
நடமுற என்னல் இலக்கியம் எட்ட தயாநிதியே

விறுகோள்

154. தங்கும் நிறைவின் வரலாற்றை மேல் சரிதம் புகழ்தற்கு
அங்கம் உறலைச் சொலல் வீறுகோள் அணிஆகும் எந்தப்
பொங்கர் அடியில் விசயனும் தேவும் பொருதது அந்தத்
துங்க வெற்பு ஈதென் இலக்கியம் தேர் இளசைத் துரையே

மிகுதி நவிற்சி

155. அதிசயம் பொய்மை உறும் கொடை வன்மை இவை முதலா
துதி செய்திடுதல் மிகுதி நவிற்சி இத்தோன்றல் கொடை
அதில் உயர்வுற்றதினால் இரவோர் தருவாயினர் என்
பதுதான் இலக்கியம் தென் இளசைப் பதிப் பார்த்திவனே

பிரிநிலை நவிற்சி

156. ஒருபொருள் சொற்கு ஒரு காரணம் பற்றி மற்றுஓர்
பொருளைத்
தரும் அது தான் பிரிநிலை நவிற்சி சசி உனைஇச்
சரிதம் அதுகொண்ட எத்தன் என்றே தெரிந்தாம் எனவே
உரை செய்திடுவது இலக்கியம் எட்டம உத்தமனே

விலக்கு

157. பிரசித்தமான மறுப்பினை ஓர் கருத்தே பிறங்கி
வரவைத்தலின் பேர் விலக்குஅணி ஈது வலாடல் அன்று
சரஉற்றவா பகழி ஆட்டென் கரைத்தல் உதாரணம் காண்
பரவுற்ற கீர்த்தி இளசைக் குமாரெட்ட பாண்டியனே

Koviloor Digital Library

விதி

158. சித்தித்து இருக்கும் அதை ஓர் கருத்துத் திகழ வரு
ணித்தல் விதி அணி பஞ்சமம் என்ன நிகழ் சுரம்இ
குத்திடலுக்கு உரித்தாம் வசந்தத்தில் குயில் குயிலாம்
தத்தை மின் என்னல் உதாரணம் எட்ட தயாபரனே

ஏது

159. காரணம் ஆனதைக் காரியத்தோடு கழறும் அதின்
பேரதும் ஏது அணியாம் இம்மாதிரி பேதையர் பால்
சாருறு கோபம் அகற்றிடுவான் உதித்தான் எனலே
